புதிய கொலம்பியா வெளியீடு!

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸ்

ஹரிச்சந்திரா

டாக்கி பாட்டுகள்



P.U. சின்னப்பா

பாடிய

GE. 6155

காசி நாதா

இதுவே புண்ய பூமி

GE. 6156

சத்ய நீதி மாற

எனையாளும்

G.H. RAO

சரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும் :
ஹுகாரு இப்ராஹிம் & கம்பெனி, சென்னை. S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி.
V. S. ராஜகோபாலன் கம்பெனி, சென்னை, பங்களூர், சேலம், கோயமுத்தூர்.
M. A. சின்னசாமி & கம்பெனி, உதகமண்டலம்.

1 — 27-8

எப்பொழுதும் ஏதாவது ஒரு ஜந்துவுடன் விளையாடுவான்!






—அவன் 'அழுக்கு அபாய'த்திலிருந்து காப்பாற்றப் படுவதற்கு நீங்கள் நன்றி யுள்ளவர்களாய் இருக்கவில்லையா?

அவன் ஏதாவது ஒருவகை பிரியமான ஜந்துவுடன் விளையாடுவான். பையனுக்கு பிராணி என்றால் பிரியம். அந்த ஜந்துவானது புழுதியில் புரண்டாலும் அதனிடம் அவனுக்குள்ள அன்பு குறைவதில்லை. அவனுக்கு லைப்பாய் பழக்கம் ஏற்பட்டிருப்பது ஒரு கடாக்ஷம் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு அழுக்கு அவன் மேல் படிந்திருக்கும்.

'அழுக்கு அபாய'த்திலின்றும் லைப்பாய் காப்பாற்றாவிட்டால் அநேகம் தாய்மார்கள் துக்கத்திற்கு ஆளாவார்கள். அழுக்கில் குழந்தைகளுக்கு நோய் உண்டாக்கக் கூடிய கிருமிகள் இருக்கின்றன வென்றும், அவை எப்படி நோயைப் பரவச்செய்யும் என்றும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் குழந்தைகள் ஒழுங்காக லைப்பாய் சோப் தேய்த்துக் குளித்தால், வியாகூலப்பட வேண்டிய அவசியமே இல்லை. லைப்பாய் விஷக்கிருமி நாசக சோப். அதில் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வல்ல ஓர் அபூர்வத் தன்மை இருக்கிறது. அதுதான் அது உலகப் பிரசித்தி பெற்றதற்குக் காரணம். இந்தியாவில் மற்ற எந்த சோப்புக்கும் இந்த பாதுகாக்கும் குணமில்லை.



லைப்பாய் நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது அது ஒரு நல்ல வழக்கம்

இப்பொழுது மெழுகுத் தாளினுல் சுற்றி விற்கப்படுகிறது

L. 49-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 | இதழ் 4 — 1944 ஆகஸ்ட் 27 — தாரண | ஆவணி 12

அரசியல்

என்ன சேதி?	...	...	...	5
ஜமாய்த்து விட்டார்!	...	...	...	8
ஜெனரல் நான் கடிதங்கள்	...	எம். எஸ். வி.	...	10

இலக்கியம்

கிருஷ்ணன் பிரதிக்ஞை	...	ராஜாஜி	...	26
படித்துப் பார்!	...	...	...	36
அப்படியே நின்றொழிந்தான்!	...	டி. கே. சி.	...	50

நாடகம்

மகானுபாவர் வேலை	...	வழிப்போக்கன்	...	52

கதைகள்

சிவகாமியின் சபதம்	...	கல்கி	...	17
முதல் வேலை	...	எஸ். என்.	...	31
பசி வாழ்க!	...	சாவி	...	38
சாவைச் சிரித்தான்!	...	ஸ்ரீ சுத்தானந்த பாரதி	...	40
கடையில் ஒரு நாள்	...	பகீரதன்	...	47
அம்புஜம் வளர்த்தது	...	சோமாஸ்	...	48

கட்டுரைகள்

கல்யாணம் நடந்தது	...	கி. ரா.	...	53
படித்த பெண்கள்	...	நாடோடி	...	55

ஆடல் பாடல்	...	கர்நாடகம்	...	11
வான சஞ்சாரம்	...	இசைத்தேனீ	...	14
பாப்பா மலர்	...	சித்தன்	...	42
காலக்ஷேபம்	...	...	...	44
நிகழ்ச்சிச் சித்திரம்	...	டம்மன்	...	6

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

★



★

சங்கீத பூபதி மகாராஜபுரம் விசுவநாதய்யருக்கு நமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தத் தடவை நமது அட்டையில் யாருடைய படத்தைப் போடுவது என்று யோசனை செய்து கொண்டிருந்தபோது, சங்கீதபூபதி நமது மனக்கண் முன்னால் வந்தார். மைசூர் மகாராஜா மரியாதை செய்து அளித்த பட்டுப் பீதாம்பரத்தைத் தினந்தோறும் போர்த்திக்கொண்டு வந்தார். தம் நாட்டுப் பிரசித்தி பெற்ற சங்கீத வித்வானை மைசூர் மகாராஜா இவ்வளவு தூரம் கௌரவித்திருக்கும்போது, நாம் மட்டும் இத்தனை நாளும் மௌனமாயிருந்து விட்டோமே என்று ஞாபகம் வந்தது. உடனே, நமது இந்த இதழின் அட்டைப் படப் பிரச்னையும் தீர்ந்தது.

தமிழ்நாட்டில் தொன்றுதொட்டுப் பரம்பரையாக வந்த அரிய செல்வங்களுக்குள்ளே மிகச் சிறந்தது கர்நாடக சங்கீதமாகும். அந்த அருமையான சம்பத்தை நல்ல முறையில் நமக்குக் காப்பாற்றிக் கொடுத்திருக்கும் மகா வித்வான்களில் சங்கீத பூபதியும் ஒருவராவர். சமீப காலத்தில் மகாராஜபுரத்தின் புகழ் மறுபடியும் பெருகி வருவதைக் காண்கிறோம். அது மேலும் மேலும் ஓங்கி வளர்ந்து நெடுங்காலம் நீடித்திருக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 4

என்ன சேதி?

மன்னிக்கவும்

நமது சிறுகதைப் போட்டி முடிவை இந்த இதழில் வெளியிடலாமென்று எண்ணியிருந்தோம். அது சாத்தியப்படவில்லை. இதற்குக் காரணம், கதைப் போட்டிப் பஞ்சாயத்தார் கதைகளைப் பரிசோதிக்கும் விஷயத்தில் எடுத்துக் கொள்ளும் சிரமமும் சிரத்தையுமேயாகும். ஆர அமரப் பரிசோதித்து, தீர்க்கமாக ஆலோசித்து விவாதித்து, பிறகு தான் முடிவு கூறப்படும் என்று பஞ்சாயத்தார் தெரியப்படுத்துகிறார்கள். இன்னும் ஒரு மாதத்துக்குள் முடிவு தெரிவிக்கப்படலாமென்று எதிர்பார்க்கிறோம். இந்த இதழில் முடிவை எதிர்பார்த்த சிறுகதைப் போட்டி நேயர்கள் தயவு செய்து மன்னிக்கவும்.

மதுரைக்கு வாழ்த்து

மதுரை நகருக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். மதுரையின் மாபெரும் காங்கிரஸ் தலைவரும், ஹரிஜன சேவையில் தலைசிறந்த தொண்டருமான ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் அவர்கள் விடுதலையடைந்தது பற்றி மகிழ்கிறோம். சிறையிலுள்ள காங்கிரஸ் கைதிகளை விடுதலை செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி முன்னம் எழுதியிருந்த போது, ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் அவர்களைப் பற்றியே முதன்மையாகக் குறிப்பிட்டிருந்தோம். தமிழ் நாட்டில் ராஜாஜியின் தலைமையை மனப்பூர்வமாக ஏற்று நடக்கும் காங்கிரஸ் வாதிகளுக்குள்ளே ஸ்ரீ வைத்தியநாதய்யர் முதன்மையானவர். எனவே, அவரைக் கைது செய்து பாதுகாப்புக் கைதியாக வைத்திருந்ததற்கு எவ்வித முகாந்திரமும் இருந்திருக்க நியாயமில்லை. இவ்வளவு நாள் கழித்தாவது அந்த அநீதி நிவர்த்தியானது பற்றி மகிழ்ச்சி அடைகிறோம்.

தெரியவில்லை

ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் வெளியிலே வந்ததும், முதல் காரியமாக சிறையிலுள்ள மற்றப் பாதுகாப்புக் கைதிகளைப் பற்றி அவர் அறிக்கை விட்டிருக்கிறார். சுமார் 250 பாதுகாப்புக் கைதிகள் இம் மாகாணத்தில் இன்னும் சிறையில் இருக்கிறார்களாம். அவர்கள் வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள். குற்றம் சாட்டி விசாரணை நடத்தி தண்டிக்கப்பட்டிருந்தால், இதற்குள் அவர்களுடைய தண்டனைக் காலம் முடிவாகியிருக்குமாம்! அத்தகையவர்களை இன்னும் சிறையிலே வைத்திருக்க என்ன நியாயம் இருக்கிறது? நியாயந்தான் இல்லை, அவசியமாவது இருக்கிறதா? மகாத்மா, "சட்ட மறுப்பு இயக்கம் கிடையாது" என்று சொல்லிவிட்டார். சட்டமறுப்பு இயக்கம் மறுபடியும் ஆரம்பித்தாலும் இவர்கள் அதில் ஈடுபடுவது நிச்சயமில்லை. அப்படி ஒருவேளை ஈடுபட்டாலும், மறுபடி அவர்களைக் கைது செய்வது பிரமாத கஷ்டமாயிருக்கப் போவதில்லை. பின்னே, என்னத்திற்காக இந்த நியாயமற்ற, அவசியமற்ற, புத்தியற்ற, இருதயமற்ற காரியத்தைச் சென்னை அட்வைஸரி சர்க்கார் செய்து வருகிறார்களோ, தெரியவில்லை.





ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான 'சமரசநிலை' என்னும் காலக்ஷேபத் துணுக்குக்கும் பரிசு பெற்றவர்: ப. சே. ராஜரத்தினம், 114, வ. உ. வீதி, ஸ்ரீரங்கம்.

நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்பன்


பேரன் பிறந்த வைபவத்தைத் தாத்தா
ஜவாஹர்லால் சிறைக்குள்ளேயே
கொண்டாடவேண்டியிருக்கிறது.
சிறை
வாழ்க்கை


அமெரிக்காவில் நடந்த நாணயச்
செலாவணி மகாநாட்டுக்குச்
சென்றிருந்த இந்தியப்
பிரதிநிதிகள் ஏமாற்றத்துடன்
திரும்பியிருக்கிறார்கள்.
ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார்
ஷ்ராப்

ஜமாய்த்து விட்டார்!

வேவல் துரையைப் பற்றி என்னமோ என்று நினைத்துக் கொண்டிருந்தோ மல்லவா?

அவர் போர்க் களத்திலிருந்து நேரே வைஸ்ராய் மாளிகைக்கு வந்த அப்பட்டமான மனிதராயிற்றே. அவருக்கு இராஜ்ய பாரம் செய்யும் திறமை இருக்குமோ என்னமோ என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தோ மல்லவா?

இந்தப் பெரிய விஸ்தாரமான நீர் வளம் நிலவளம் நிறைந்த பஞ்சமும் பிணியும் தழுவிய இந்திய தேசத்தை ஆளுவதற்கு வேண்டிய அரசியல் அறிவுக் கூர்மையும் சாணக்கிய சாமர்த்தியமும் தளபதி வேவலுக்கு ஒருவேளை இல்லாமல் போய்விடுமோ என்று சந்தேகப்பட்டோ மல்லவா?

ஆட்டைத் தூக்கி மாட்டிலும், மாட்டைத் தூக்கி ஆட்டிலும், இரண்டையும் தூக்கி ஜான்புல்லின் பெரிய வயிற்றிலும் போடுவதற்கு வேண்டிய அகடவிகட அழுகளுந்தி புத்திசாலித் தனம் கேவலம் ஒரு போர் வீரராகிய வேவலுக்கு இருக்க முடியுமா என்று நாம் தூக்கம் பிடிக்காமல் யோசித்து 'ஆஸ்ப்ரோ' மாத்திரையின் வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தோ மல்லவா?

நம்முடைய சந்தேகம், மனக் கவலை எல்லாவற்றையும் திவலை கூட இல்லாமல் வைஸ்ராய் வேவல் போக்கி விட்டார்!

அசல் யுத்த களத்தில் மட்டுமல்ல, இராஜ தந்திர போர்க் களத்திலும் தம்மால் வெடிக்காத வெடி குண்டைப் போட்டுவென்று போட முடியும், அது வெடிக்காததைக் கண்டு திடுக்கிடாமலும் தொடை நடுங்காமலும் மூர்ச்சை யடைந்து விழாமலும் இருக்க முடியும் என்பதை நிரூபித்து விட்டார்.

மொத்தத்தில் மனுஷர் ஜமாய்த்து விட்டார்!

ஓஹோ ஜமாய்ப்பாய் ஜமாய்த்து விட்டார்!

19-ம் நடப்பதற்கிருந்த காந்தி-ஜின்னா சந்திப்பிற்கு முதல் நாள் 18-ம் பார்த்து வைஸ்ராய் ஒரு பெரிய வெடி குண்டைப் போட்டு ஜமாய்த்ததைத்தான் சொல்கிறோம்.

"யுத்தம் முடிகிற வரையில் தேசிய சர்க்கார் என்கிற பேச்சே இல்லை; கனவிலே கூட இல்லை" என்று வேவல் மகாத்மாவுக்கு எழுதிய பதிலைத்தான் சொல்கிறோம்.

மகாத்மாஜி! இப்போதாவது தங்களுக்கு விஷயம் புலப்பட்டதா? தங்கள் ஆசை நிராசை யாயிற்று?

ஜின்னாவுக்கு நீங்கள் எதைத்தான் கொடுத்துச் சமாதானமாய்ப் போனாலும், வெள்ளைக்காரன் மசிந்து கொடுக்கப் போவதில்லை. பின், எதற்காக வீண் சிரமம்? ஆசிரமத்திலேயே பேசாம லிருங்கள். போனீர்களோ, வீர சவர்க்கார் உங்களை இலேசில் விட மாட்டார். ஜாக்கிரதை!

• • •

காந்திஜியும் ஜின்னாவும் இப்போது சந்தித்துப் பேசுவது இந்திய சுதந்திரப் போரின் சரித்திரத்தில் ஒரு பரம முக்கியமான சம்பவம் என்றுதான் நாம் கருதியிருந்தோம்.

ஆனால் அது லக்ஷ்மீபுத்திரர்களையும் தேவனந்த புத்திரர்களையும் மட்டு மல்லாமல் டில்லியையும் லண்டனையும் கூட இவ்வளவு கலக்கு கலக்கி யிருக்கு மென்று நினைக்க வில்லை.

ஆம்; லண்டனைக் கூட அது கலக்கி விட்டிருக்கிறது என்பதை லண்டன் பத்திரிகைகளின் தலையங்கங்கள் நன்கு தெரிவித்தன.

அதைக் காட்டிலும், ஸர் பிரோஸ்கான் நூன் லண்டனிலிருந்து பறக்கும் குண்டைப்போல் கிளம்பி, பம்பாயில் வந்து குதித்தது லண்டன் மனக் குழப்பத்தை மிக நன்றாய்த் தெரிவித்தது.

இந்திய நிர்வாக சபை அங்கத்தினர் பதவியையும் லண்டனில் இந்திய யுத்த காபினட் பதவியையும் சேர்ந்தாற்போல் வகிக்கும் ஸர் பிரோஸ்கான் நூன் பம்பாயில் வந்து குதித்ததும் என்ன சொன்னார், தெரியுமா?

"இந்தியர்களுக்குள்ளே ஒற்றுமை ஏற்பட்டாலும் ஏற்படா விட்டாலும், யுத்தம் முடிந்த உடனே பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்து விடப் போகிறார்கள்! இது நிச்சயம், சத்தியம், சந்தேகமே இல்லை!" என்று பறையறைந்தார்.

இனிமேல் நமக்கு என்ன கவலை? ஜின்னாவுக்கு ஜுரம் வந்தால் என்ன? காந்திஜிக்கு ரயில் தவறினால் என்ன?

ஜின்னாவும் காந்திஜியும் எதற்காகச் சந்திக்க வேண்டும்? சந்தித்து,

தேசத்தைப் பிளக்க ஏன் திட்டம் போட வேண்டும்?

ஒன்றும் வேண்டாம்! காந்திஜி! வார்தாவில் நூல் நூற்றுக்கொண்டு சுகமாயிருங்கள்.

பம்பாய் என்றும் ஜின்னா என்றும் நினைக்கவே வேண்டாம்.

நினைத்தீர்களோ, டாக்டர் ஜயந்தி இருக்கிறார். ஜாக்கிரதை! மகா கனம் சாஸ்திரியும் இருக்கிறார்; சர்வ ஜாக்கிரதை!!

* * *

ஆமாம்: வேவலின் பதிலைப் பார்த்தாரோ இல்லையோ, நமது மகா கனம் சாஸ்திரியார் அவர்கள் தமது தள்ளாத தேகநிலையைக்கூட மறந்து ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்தார். வேவலை விட ஒரு படி அதிகமாகவே ஜமாய்த்துத் தள்ளிவிட்டார்!

"அப்போதே சொன்னேனே, பார்த்தீர்களா? 'நாஸ்தி' என்று வைஸ்ராய் கையை விரித்துவிட்டார் பார்த்தீர்களா? யுத்தம் முடியும் வரையில் தேசிய சர்க்கார் இல்லை யென்று சொல்லி விட்டார் பார்த்தீர்களா! எனக்குத்தான் தெரியுமே, இப்படி யாகும் என்று! நான் யாரையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை; குற்றம் சொல்ல எனக்குப் பிடிக்கவே பிடிக்காது; அந்த வழக்கமே என்னிடம் கிடையாது. ஆனாலும் காந்தியின்பேரில் கொஞ்சம் குற்றம் சொல்லாமல் விட்டால், நாளைப் புதன்கிழமை என்னால் இராமாயணப் பிரசங்கம் செய்ய முடியாது. அந்தப் புண்ணிய காரியத்தை உத்தேசித்துத்தான் இந்தச் சின்னக் குற்றத்தை அவர்பேரில் சொல்லி வைக்கிறேன். காந்தி இந்த அவமானத்தைத் தாமாகவே தான் வரவழைத்துக் கொண்டார்! இவர் எதற்காக வேவலுக்குக் கடிதம் எழுதுகிறார்? இவருக்கு நன்கு, சரியான இங்கிலீஷ் வார்த்தைகளைப் போட்டுக் கடிதம் எழுதத் தெரியுமா? தெரியாத பாஷையில் எதற்காக எழுதவேண்டும்?"

இப்படியாக, மகா கனம் சாஸ்திரியார் காந்திஜி செய்த குற்றத்தை எடுத்துக் காட்டிவிட்டு, "இப்போதாவது காந்திஜி தமது குற்றத்தை உணரட்டும். ஜின்னாவைச் சந்திப்பதை நிறுத்தட்டும். பாகிஸ்தான் பேச்சை விடட்டும்" என்று வெளுத்து வாங்கி விட்டார்.

ஆனால் சாஸ்திரியார் இந்த மாதிரி காந்திஜியை வெளுத்து வாங்குவது இது முதல் தடவை யல்ல.

மகாத்மா தேசியக் கோரிக்கையை அதிகமாகக் கேட்டால், "இவ்வளவு அதிகமாகக் கேட்டால், யாராவது கொடுப்பார்களா? இதென்ன அசட்டுத்தனம்?" என்பார் சாஸ்திரியார்.

மகாத்மா குறைவாகக் கேட்டால், "எப்படியுந்தான் வெள்ளைக்காரன் 'இல்லை' என்று கையை விரிக்கப் போகிறானே? கேட்பதையாவது அதிகமாகக் கேட்டால் என்ன?" என்பார் சாஸ்திரியார்.

வைஸ்ராய்க்குக் காந்தி கடிதம் எழுதினால், "எதற்காக எழுத வேண்டும்? எதற்காக அவமானப்பட வேண்டும்?" என்பார்.

கடிதம் எழுதாவிட்டால், "ஓ காந்தியே! உமது காலில் விழுகிறேன். வைஸ்ராய்க்கு ஒரு கடிதத்தை எழுதிப் போடும். எழுதுவதனால் என்ன நஷ்டம் வந்து விடும்? தேசத்துக்காக இதை யாவது நீர் செய்யக் கூடாதா?" என்பார்.

இந்தத் தடவை மகாத்மா வைஸ்ராய்க்குக் கடிதம் எழுதியபோது, அவர் சிறையிலிருந்த காலத்தில் சாஸ்திரியார் கூறியதைத்தான் கடைப் பிடித்தார் என்று சொல்லலாம். ஆனாலும், சாஸ்திரியாருக்குத் திருப்தி ஏற்படவில்லை!

* * *

வைஸ்ராய்க்குக் காந்திஜி கடிதம் எழுதியது தப்போ, சரியோ, ஒரு புறம் இருக்கட்டும். ஆனால் அதற்கும் காந்திஜி-ஜின்னா சந்திப்பையும் ஏன் பிணைக்கிறீர்கள்? வைஸ்ராய் "இல்லை" என்று சொல்லி விட்டபடியால் காந்தி பம்பாய்க்குப் போகவேண்டாம் என்று ஏன் சொல்கிறீர்கள்?

பகைவனிடம் போய்ப் பஞ்சாங்கம் கேட்டால், வாரத்தில் ஏழு நாளும் மரணயோகம் என்று சொல்வது இயற்கையல்லவா?

காந்திஜி-ஜின்னா சந்திப்புக்கு வேவலினிடம் போய்ப் பஞ்சாங்கம் கேட்பதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

உண்மை என்னவென்றால், வைஸ்ராய் வேவலின் பதிலானது, காந்தி — ஜின்னா சந்திப்பும் காங்கிரஸ் — லீக் சமரசமும் எவ்வளவு முக்கியமானதென்பதை நூறு மடங்கு வற்புறுத்திக் காட்டுகிறது.

ஹிந்து — முஸ்லிம் சமரசம் வேண்டாம் என்று சொல்லுகிறவர்கள், தேசம் சுதந்திரம் அடைவதற்கு வேறு என்ன தான் வழி காட்டுகிறீர்கள்?

"ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து கேட்டாலும் சுயராஜ்யம் கொடுக்கமாட்டோம் என்கிறவர்கள், வேறு எதற்காகக் கொடுப்பார்களாம்?

ஹிந்து — முஸ்லிம்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் கொடுப்பார்களா? — அப்படித்தான் இத்தனை நாள் பார்த்தாயிற்றே? பயனில்லையே?

வேறு என்ன வழி?

ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் என்ன சொல்கிறார்?

இப்பொழுது நமது திருவாங்கூர் திவானுக்குப் பண்டித ஜவாஹர்லால் மீது அடங்காத பிரேமை ஏற்பட்டிருக்கிறது. "ஜவாஹர்லால்ஜிதான் இந்த நெருக்கடிக்குத் தகுந்த மனிதர்; அவரால் தான் விமோசனம் பிறக்கும்" என்கிறார்.

சரி; ஜவாஹர்லால்ஜியைச் சிறையிலிருந்து வெளியிலே கொண்டு வர ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் என்ன வழி காட்டுகிறார்?

* * *

ஆனால், மகா கனம் சாஸ்திரியார் அந்த மாதிரி யெல்லாம் அகப்பட்டுக் கொள்ளத் தயாராயில்லை. "எனக்குத் திட்டம் போடத் தெரியாது; போட்ட திட்டத்தில் குற்றம் கண்டு பிடிக்கத் தான் தெரியும்" என்கிறார்.

கதையிலே வரும் குரங்கு என்ன சொல்லிற்று, ஞாபகம் இருக்கிறதா? "எனக்குக் கூடு கட்டத் தெரியாது; கட்டின கூட்டைப் பிரிக்கத்தான் தெரியும்" என்றது!

ஆனால், நமது சாஸ்திரியாரோ வீடு கட்ட ஆரம்பிக்கும்போதே பிரித்துத் தள்ளத் தயாராயிருக்கிறார். அஸ்திவாரம் போடும் போதே ஒற்றைத் தும்மல் தும்முகிறார்.

கட்டுகிற வீட்டைப் பற்றிக் குற்றம் சொல்லுகிறவர்களுக்குக் கொஞ்சம் வீடு கட்டும் விஷயமாவது தெரிந்திருக்க வேண்டும். சட்டிப் பானை செய்யும் குயவனைக் கொண்டுவந்து அரண்மனை கட்டுவது பற்றி அபிப்பிராயம் கேட்டால் என்ன பிரயோஜனம்?

நம் கண் முன்னால் ருஷியாவில் ஸ்டாலின் ஒரு மகத்தான சாம்ராஜ்ய மாளிகையைக் கட்டியிருக்கிறார். ருஷியாவைச் சேர்ந்த ஒவ்வொரு பெரிய மாகாணத்துக்கும் அவை பிரிந்துபோகும் உரிமையைக் கொடுத்திருக்கிறார்.

பிரிந்துபோகும் உரிமையை அஸ்திவாரமாகக் கொண்டுதான் ருஷ்ய சோவியத் அரசாங்கம் ஸ்தாபிக்கப் பட்டது. அந்த உரிமையை எடுத்து விட இடையிடையே பிரசாரம் செய்த முயற்சிகளை யெல்லாம் ஸ்டாலின் எதிர்த்துத் தோற்கடித்திருக்கிறார்.

ருஷ்யா, மாகாணங்களுக்குச் சுய நிர்ணய உரிமை கொடுத்ததினால் ருஷ்யா எந்த விதத்திலும் நஷ்டம் அடையவில்லை.

நம் கண் முன்னால் மகத்தான, மகோந்நதமான வெற்றியைத்தான் அடைந்திருக்கிறது.

இந்தியாவிலேயும் அத்தகைய உரிமையை வேண்டுகிறவர்களுக்கு நாம் கொடுத்து அந்த அஸ்திவாரத்தின்மேல் சுதந்திர மாளிகையை ஸ்தாபிப்பதில் என்ன கெடுதல் வந்துவிடும்?

ஒரு கெடுதலும் வராது; எல்லாம் நன்மையாகத்தான் ஏற்படும்.

இதற்கு அறிகுறி இப்போதே புலனாகத் தொடங்கியிருக்கிறது.

ஜனாப் ஜின்னாவின் பேச்சு தோரணையில் இதற்குள்ளாகவே ஒரு மாறுதலைக் காண்கிறோம். மாணாக்கருடைய பிரதிநிதிகளுக்கு அவர் கொடுத்த பதில்களில், "பாகிஸ்தான் ஏற்பட்டாலும், இந்தியா முழுவதும் சேர்ந்து செய்ய வேண்டிய காரியங்களும் இருக்கத்தான் இருக்கும்" என்கிறார்.

"பொது எதிரியை ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்தே எதிர்ப்போம்" என்கிறார்.

"ஆப்கானியனோ பட்டாணியனோ இந்தியாவுக்குள் எட்டிப் பார்த்தால் தொலைத்து விடுவோம்" என்கிறார்.

மொத்தத்தில், வைஸ்ராய் வேவல் ஜமாய்த்ததினாலும், ஜனாப் ஜின்னாவுக்கு ஜுரம் வந்ததினாலுங்கூட தேசத்துக்கு நன்மைதான் விளைந்திருக்கிறதென்று தோன்றுகிறது.

பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் நோக்கம் இன்னதென்பது முன்னைக் காட்டிலும் வெட்ட வெளிச்சமாகவும் துலாம்பரமாகவும் தெரிய வந்திருக்கிறது.

சாக்குருவிகள் தங்கள் அபாரமான பல்லவிகளைப் பாடிப் பாடி ஓய்வதற்குச் சாவகாசம் கிடைத்திருக்கிறது.

இவையெல்லாம், தள்ளிப் போட்ட காந்திஜி-ஜின்னா சந்திப்பு மறுபடி ஏற்படும்போது ஒரு வேளை வெற்றி யடையலாம் என்ற நம்பிக்கைக்குக் கூட இடம் ஏற்பட்டிருக்கிறது.

ஆடல் பாடல்

"கர்நாடகம்"

நமது சொந்தக் கலைகளிலேயே எது நல்லது, எது மட்டமானது என்று தெரிந்து கொள்வது கடினமான காரியம். நமக்குப் பழக்கமில்லாத வெளியூர்க் கலைகளில் நல்லது, கெட்டது கண்டு பிடிப்பது அசாத்தியமான காரியம் என்றே சொல்லலாம்.

ஆகவே, வெளியூர்க் கலைகளைப் பற்றிய வரையில் மிகவும் உயர்ந்தவை, மேலான வற்றைத்தான் நாம் பார்க்கவேண்டும்; கேட்க வேண்டும்.

ஹிந்துஸ்தானி சங்கீதத்துக்கு இது முக்கியமாகப் பொருந்தும். ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் மட்டமானது எதுவோ, அதுவே டாக்கி திரைகளிலும், இசைத் தட்டுகளிலும் தமிழ் நாட்டுக்குப் பெரும் பாலும் வந்து சேருகின்றன. அதையே உயர்ந்த ஹிந்துஸ்தானி சங்கீதமென்று நம்மில் பலர் நினைத்துக்கொண்டு விடு கிறார்கள். இப்படி நினைத்துக்கொண்டு ஹிந்துஸ்தானி சங்கீதத்தை வெறுப்பவர்கள் சிலர்; அதிலே அசாத்தியமான மோகங் கொள்பவர்கள் பலர்.

இந்த நிலைமைக்குப் பரிகாரமாக, உயர்தர ஹிந்துஸ்தானி சங்கீதம் எப்படி யிருக்கு மென்பதைச் சென்னை ரஸிகர்கள் தெரிந்து கொள்வதற்கு மயிலை சங்கீத சபையார் ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தந்தார்கள்.

* * *

வடநாட்டிலே இப்போது பிரபலமா யுள்ள உயர்தர ஹிந்துஸ்தானி பாடகிகளுக்குள்ளே ஸ்ரீமதி கேஸரிபாய் மிகவும் உன்னத ஸ்தானம் பெற்றவர் என்பது பிரசித்தியான விஷயம். இந்த ஸ்தானத்தை அவர் வெகு காலமாகவே வகித்து வருகிறார்.



அவருடைய கச்சேரி மயிலை சங்கீத சபையில் இரண்டு நாள் நடந்தது.

முதல் நாள் கூட்டம் நிறைய இருந்தது; இரண்டாம் நாள் அதைவிட அதிகக் கூட்டம் இருந்தது.

இதிலிருந்து, கர்நாடக சங்கீதமானாலும் ஹிந்துஸ்தானி சங்கீதமானாலும், உயர்தரக் கலையை விரும்பி அநுபவிக்கக் கூடியவர்கள் சென்னையில் ரொம்பப் பேர் உண்டு என்று வெளியாயிற்று.

என் வரையில், இரண்டு நாளும் ஸ்ரீமதி கேஸரிபாயின் கச்சேரியை நான் முழுதும் கேட்டேன். இதற்கு முன்னால் ஹிந்துஸ்தானி சங்கீதத்தை மணிக் கணக்கில் உட்கார்ந்து என்னால் கேட்க முடிந்ததே கிடையாது. அகில இந்திய சங்கீத காங்கிரஸில் பலே பலே மேதைகள் வந்து பாடியபோதுகூட, அரை மணி நேரத்திற்குள் போதும் போதும் என்று ஆகிவிடும்.

ஆனால் கேஸரிபாயின் கச்சேரியை இரண்டு நாளும் முழுதும் கேட்க முடிந்தது என்பதே அவருடைய சங்கீதமேன்மைக்குச் சிறந்த அத்தாட்சி யாகும்.

இதற்கு முக்கிய காரணம், கேஸரிபாயின் சாரீர இயல்பாகும். சாதாரணமாக நாம் கேட்கும் ஹிந்துஸ்தானி பாடகிகளைப் போல் அவருடைய குரல் கீச்சுக் குரல் அல்ல. மேல் ஸ்தாயிக்குப் போகும்போது நமது செவிகள் துளைபடுவது போன்ற வேதனை உணர்ச்சி ஸ்ரீமதி கேஸரிபாயின் சாரீரத்தில் கிடையாது. மதுரமும் கன பாவமும் பொருந்திய சாரீரம். அதோடு, அபாரமான சாதகத்தினால் அபூர்வமான சப்த ஜாலங்களை யெல்லாம் செய்வதற்கு அந்தக் குரலைப் பயிற்சி செய்து வைத்திருக்கிறார்.

எனவே, அவருடைய கச்சேரியின் போது கண்ணை மூடிக் கொண்டு காதுகளை மட்டும் திறந்து வைத்துக் கொண்டோமானால், மலையருவியைப் போல் இடைவிடாது பொழிந்து கொண்டிருக்

ரும் இனிய கானப் பிரவாகமானது நமது செவிகளை நிறைத்துக் கொண்டே யிருக்கக் காண்கிறோம்.

* * *

சாதாரணமாக, ஹிந்துஸ்தானி சங்கீதத்தைப் பாராட்டுகிறவர்கள் சிலர், "ஆகா! ஹிந்துஸ்தானிப் பாடகர்கள் எவ்வளவு நன்றாய்ச் சுருதியோடு சேர்கிறார்கள்!" என்று ஆச்சரியப்படுவார்கள். ஹிந்துஸ்தானிப் பாடகர்களைப் பற்றி, "ஆகா! அவர்களுடைய குரல் எவ்வளவு விரைவாக ஸ்வர சஞ்சாரங்கள் செய்கின்றன! கண்ணிமைக்கும் நேரத்தில் எவ்வளவு ஸ்வரங்கள் பேசிவிடுகின்றன? மேல் ஸ்தாயியில் எவ்வளவு தூரம் அவர்கள் குரல் போய் எட்டுகிறது!" என்றெல்லாம் ஆச்சரியப் படுவதுண்டு.

இதெல்லாம் உண்மையில் வியக்கத்தக்க விஷயங்கள் அல்ல வென்று நான் கருதுகிறேன்.

சுருதியோடு சாரீரம் சேரவேண்டும் என்பது சங்கீதத்தின் அடிப்படை; சுருதி சேராதவர்கள் பாடவே கூடாது. நம் நாட்டில் அப்படிச் சுருதி சேராத பாடகர்கள் பாடுகிறார்களே என்றால், அது நமது துரதிர்ஷ்டம். மற்றப்படி, "சுருதி சேர்ந்து விட்டதே!" என்று ஆச்சரியப்படவேண்டிய இல்லை.

அதே மாதிரி, குரல் எவ்வளவுதான் விரைவாகப் பேசினாலும், எவ்வளவு உச்சாணிக் கிளைக்குத்தான் போய் எட்டினாலும், அதனால் சங்கீத மேன்மை ஏற்பட்டுவிடாது. அவை யெல்லாம் உயர்ந்த சங்கீதத்துக்கு அவசியமில்லாத வெறும் கொடி வித்தைத் திறமையேயாகும். குரல் எவ்வளவு உயரம் போனாலும், அதில் மாதுரியம் இல்லா விட்டால் பயனில்லை. சாரீரம் எவ்வளவு விரைவாகப் பேசினாலும், பாட்டைக் கேட்கும்போது மனதில் நிம்மதி யுண்டாகா விட்டால் பிரயோஜனமே இல்லை.

ஸ்ரீமதி கேஸரிபாயின் பாட்டு மேற்கூறிய ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் சாதாரண அம்சங்களோடு மிக மேலான அம்சங்களும் பொருந்தி விளங்குகிறது.

அவருடைய மாதுரியமான சாரீரத்திலிருந்து தைல தாரைபோல் இடைவிடாத கானம் பெருகும்போது செவிகள் குளிர்ந்து மனம் நிம்மதி அடைகிறது.

* * *

நம்முடைய சொந்த நாட்டிலே, சொந்த ஊரிலே, ஒரு திருவிழா நடக்கிறது. திருவிழாவிலே ஜே ஜே என்று கூட்டம். கூட்டத்திலே நாமும் புகுந்து செல்கிறோம். நண்பர்களும், உறவினர்களும், தெரிந்தவர்களும், நமது பக்திக்குரிய பெரியார்களும் எதிர்ப்படுகிறார்கள். அவர்களை யெல்லாம் காண்பதில் நமக்கு எவ்வளவோ மகிழ்ச்சி. ஆங்காங்கு நின்று யோக க்ஷேமம் விசாரிக்கிறோம். சிலருக்குக் கும்பிடு போடுகிறோம். சிலரை முதுகில் தட்டிக் கொடுக்கிறோம். சிலரைப் பார்த்துப் புன்னகை புரிந்து விட்டு மேலே போகிறோம்.

கர்நாடக சங்கீதம் கேட்கும்போது நாம் அநுபவிக்கும் சந்தோஷம், மேற்கூறிய வகையைச் சேர்ந்தது. சங்கராபரணம், காம்போதி, கல்யாணி, பைரவி, தோடி ஆகிய ராகங்கள் நமது வெகு நாள் சிநேகிதர்கள். அவர்களுடன் நின்று அளவளாவுகிறோம். கொஞ்சம் பழக்கமுள்ள அபூர்வ ராகங்களும் எதிர்ப்படுகின்றன. அவர்களுக்கு முகமன் கூறி விட்டு மேலே போகிறோம்.

வடக்கே பிரயாகை அல்லது காசி அல்லது பூரி முதலிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போவதாக வைத்துக் கொள்ளலாம். அங்கேயும் திருவிழாக்கள் நடக்கின்றன. சொல்ல முடியாத கூட்டம். கூட்டத்தில் புகுந்து போகும்போது நமக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லை. எல்லாம் வேற்று முகமா யிருக்கின்றன. ஆயினும், இப்படிப்பட்ட பழக்க மில்லாத கூட்டத்தில் புகுந்து திரிந்து யதேச்சையாக வேடிக்கை பார்த்துக்கொண்டு வருவதிலும் ஒரு வகையான சுகம் இருக்கத்தான் செய்கிறது.

ஹிந்துஸ்தானி சங்கீதம் கேட்பதில் நாம் அநுபவிப்பது இம்மாதிரி சந்தோஷம்.

அவ்வாறு, தெரியாத ஊரில் புரியாத பாஷை பேசுகிறவர்களுக் கிடையில் நம் இஷ்டப்படி உலாவிக்கொண்டு வரும்போது, சில சமயம் தலைக் குடுமியுடன் ஒரு ஆசாமியைப் பார்த்து விடுகிறோம். அவரை ஓடிப் போய்ப் பிடித்து, "என், ஸார், உங்களுக்கு எந்த ஊர்?" என்கிறோம். அவர் "எனக்குத் திருச்சிராப்பள்ளி, அல்லது மதுரை அல்லது மயிலாப்பூர்" என்று சொன்னதும், நமக்குக் காணாதது கண்டதுபோல் சந்தோஷம் உண்டாகி விடுகிறது.

இம்மாதிரிதான் ஹிந்துஸ்தானி சங்கீதம் கேட்கும்போதும், நம்முடைய தோடி, இந்தோளம், மோகனம், பியாக் — இவற்றின் சாயை தெரிந்து விட்டால் நமக்கு வெகு குஷியாய்ப் போய் விடுகிறது. வேஷம்

போட்டுக்கொண்டு வரும் கிரேஸிதர்களைக் கண்டு பிடிப்பதில் உண்டாகும் சந்தோஷம் ஏற்படுகிறது.

* * *

ராக ஆலாபனத்தைப் பொறுத்த வரையில் நமது கர்நாடக சங்கீதத்துக்கும் ஹிந்துஸ்தானி சங்கீதத்துக்கும் உள்ள ஒரு வித்தியாசத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஹிந்துஸ்தானி பாணியில், நாம் பல்லவி பாடுவதைப்போல் ராக ஆலாபனம் செய்கிறார்கள். அதாவது அடிப்படையாக ஒரு இடத்தை வைத்துக் கொள்கிறார்கள். அங்கிருந்து மேலேயும் கீழேயும் சென்று விதவிதமான ஸ்வர வட்டங்கள் இடுகிறார்கள். ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒவ்வொரு தடவை அடிப்படைக்கு வந்து சேர்கிறார்கள்.

இது எப்படியிருக்கிறதென்றால், ஒரு பையன் கையிலே கயிற்றின் நுனியைப் பிடித்துக்கொண்டு ஆகாசத்திலே பட்டம் விடுவது போலிருக்கிறது.

ஆனால், கர்நாடக முறையில் ராக ஆலாபனமோ, பட்சிகள் யதேச்சையாக ஆகாசத்திலே பறப்பதை யொத்ததாகும். சில சமயம் பட்சிகள் சிறகுகளைச் சட சட வென்று அடித்துக் கொண்டு பறக்கின்றன; சிலசமயம் சிறகுகளை அடிக்காமல் காற்றிலே மிதக்கின்றன; வான வெளியில் மேலே மேலே போகின்றன; கீழேயும் வருகின்றன; இஷ்டப்படி யெல்லாம் சுற்றிச் சுற்றி வட்டமிடுகின்றன. கடைசியாக அவற்றுக்கு விருப்பமானபோது மரக்கிளையில் வந்து உட்காருகின்றன.

மேற்கூறிய இரண்டு ஆலாபன முறைகளில், பட்டம் விடுவதைக் காட்டிலும் பட்சி பறப்பதைத்தான் நான் அதிகமாய் விரும்புகிறேன்.

ஆகக்கூடி, ஸ்ரீமதி கேஸரிபாயின் இரண்டு ஹிந்துஸ்தானி சங்கீதக் கச்சேரிகளையும் கேட்டதில் என்னுடைய முடிவு இதுதான்.

நம்முடைய கர்நாடக சங்கீதத்துக்கு இணையான சங்கீதம் கிடையாது. அதைப் போல் மேம்பட்ட சங்கீதத்தையும் நம்மால் அனுபவிக்க முடியாது.

ஆனால், ஹிந்துஸ்தானி சங்கீதத்தை ஓரளவு நாம் கேட்டு அனுபவிக்கலாம்; அதன் இயல்பை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

அப்படி ஹிந்துஸ்தானி சங்கீதம் கேட்பதாயிருந்தால், ஸ்ரீமதி கேஸரிபாயின் பாட்டைப் போன்ற உயர்தரமான பாட்டைத்தான் கேட்கவேண்டும்.

வான சஞ்சாரம்

"இசைத் தேவி"

நமது புகழ்பெற்ற வித்வான்களில் மகாராஜபுரம் விசுவநாதய்யர் விசித்திரமானவர். இம்மாதம் 17உ திருச்சி நிலையத்தில் அவர் செய்த கச்சேரியும் அப்படியே விருந்தது. ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு விதம். கேதார கௌள ராகத்துடன் தொடங்கினார். மேலும் மேலும் கொஞ்சம் நினைந்தார். அடுத்து வந்த பைரவியில் சரீர மோட்டார் 'ஸ்லிக்' பிடித்துக் கொண்டது. வழி நிறைய பிர்க்காக்களை உதறிக்கொண்டு போனார். 'முகத்தைக் காட்டிய' என்ற பதத்தில் சரீரத்தையும் காட்டிய போதிலும், பிர்க்கா வெள்ளத்தில் சாஹித்யம் அமிழ்ந்து போய்விட்டது. கானடா ராகம் முழுவதும் இழுப்பும் வளைவுகளுமாய் கம்பீரமாய்க் கேட்டது. பின்வந்த பந்துவராளி தேனொழுகும் கமகப் பிடிகள் நிறைந்திருந்தது. 'நேற்று வாரேனென்று' என்ற பதத்தில், சாஹித்யம் அழுத்தம் திருத்தமாயிருந்தது. எல்லா வற்றையும் சேர்த்து கல்போதிலை அமர்க்களமாய்ப் பாடினார். ஆரம்பத்தில் மக்கர் பண்ணிய தொண்டை இதில் கீழ் பஞ்சமம் முதல் மேல் பஞ்சமம் வரை சர்வ சகஜமாய்ப் பேசியது.

சென்னையில் சென்ற வாரக் கச்சேரிகளுக்கெல்லாம் சிகரம்போல் விளங்கியது ஸ்ரீ கே. எஸ். நாராயணய்யங்காரின் கோட்டு வாத்தியம்தான். பந்துவராளி, சாரங்கா பைரவி, பௌளி, ஸிம்மேந்திர மத்திமம் முதலிய ராகங்களைக் கர்ணாம்ருதமாய்ப் பொழிந்தார். அவைகளின் உருப்படிகளும் கச்சிதமாயிருந்தன. இன்னும் பல ராகங்களடங்கிய ஒரு ராகமாலிகையும் வாசித்தார். வெறும் வாத்யக் கச்சேரியாக மாத்திரம் தோன்றவில்லை. சிற்சில இடங்களில் இழையும் குரலில் வாய்ப்பாட்டு போல் பிரமை தட்டியது.

திருச்சி நிலையத்தில் 21உ மதுரை மணி வழக்கம்போல் அபாரமான ஸ்வரக் கச்சேரி செய்தார். ஆபோகி, பஹுதாரி, தோடி முதலிய ராகங்களும் பல்லவி ராகமான பிலஹரியும் அழகாயிருந்தன. பாடிய ராகங்களும் உருப்படிகளும் சரளமாய் வெளி வந்தன. கைத்தாளம் கொஞ்சமாயினும் தொண்டையில் பேசுவதெல்லாம் மத்திம துரிதகாலங்களே. விளம்ப காலத்திலமைந்த 'கத்தன வாரிகி' கீர்த்தனம்கூட அப்படித்தானிருந்தது. இந்த வித்வானுடைய ஞானமும் சாமர்த்தியமும் அபாரந்தான். ஆனால் பாடுவதை யெல்லாம் ஏன் சிறு சிறு துண்டுகளாகக் கத்தரித்து வீசுகிறார் என்பதுதான் தெரியவில்லை.

22உ சென்னையில் நடந்த துவாரம் வெங்கடசாமி நாயுடு அவர்களின் பிடில் கச்சேரியும் மிக நேர்மையாயிருந்தது. இதற்குச் சேர்ந்து 'ஸ்ட்ராடி வேரியஸ்' இனத்தைச் சேர்ந்த இவரது பிடில் இணையற்ற சிறப்பு வாய்ந்தது. அபூர்வ நாதப் பொலிவும் சஞ்சாரமும் உடையது. அத்துடன் கை வில் சுத்தத்தில் நாயுடுகாரு விசேஷ கவனம் செலுத்துகிறார். சாமோஜனி கானடா வசந்தா முதலிய ராகங்களில் அழுத்தமாய் இழையும் பிடிகளைப் படிப்படியாய் அமைத்து வாசித்தது விசேஷமாயிருந்தது.



எல்லாவற்றையும் விட கடைசி ராகத்தில் அவர் வாசித்த தானத்துக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும்.

19உ இரவு சென்னையில் பாடிய எஸ். நரஸிம்முலு அவர்களுக்கு சற்று விரிந்த சாரீரம். ஆனால் ராகங்களும் உருப்படிகளும் பிசுவுடன் வெளிவந்தன. மனோரஞ்ஜனி என்ற ராகத்தையும் அதில் 'அடுகாரதனி' என்ற தியாகராஜ கிருதியையும் பாடினார். இரண்டும் அபூர்வமானவை. இந்த ராகம் 1-வது சக்ரத்தில் 5-வது மேளகர்த்தா 'மானவதி'யின் ஜன்யம். இதில் சுத்த ரிஷபமும் 'அந்தர காந்தாரம்' என்ற பெயர் பூண்ட 'சதுஸ்ருதி ரிஷப'மும் சேர்ந்தாற் போல் அடுத்து வருகின்றன. அவைகளை அடிக்கடி சாதுர்யமாய் இழைத்துப் பிடித்து ராகஸ்வரூபத்தையும் கிருதியின் அழகையும் வெளிப்படுத்தினதைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

சென்னையில் 20உ ரேடியோ விசைகளை எவ்வளவு அடக்கினாலும் வீறிட்டுக் கொண்டு கணீர் என்று கேட்டது ஒரு குரல். அதுதான் டி. வி. கப்புத்தாயி அம்மாளது. இவர் பாடியதிலெல்லாம் அழுத்தமும் சாவகாசமும் கொண்ட பிடிகள் நிறைந்திருந்தன. காம்போதியிலும் ஸிம்மேந்திர மத்திமத்திலும் தென்பட்ட சில பிடிகள் காலஞ்சென்ற கிட்டப்பாவின் குரலையும் வழியையும் ஞாபகமூட்டின.

திருச்சியில் 20உ கே. வி. சுப்ரமணியம் முதல்பாகத்தில் பாடியது எதிர்பார்த்த அளவுக்கு வரவில்லை. மாலையில் அதற்கு நன்கு பிராயச் சித்தம் செய்து விட்டார். ஹிந்தோளம், கல்யாணி, ஆபோகி, பந்துவராளி ஆகிய ராகங்களை ஒரு கை பார்த்தார். 'என்னகானு ராம பஜன' என்ற கிருதியின் ஸ்வரம் பாடியது ஜிலுஜிலுப்பாயிருந்தது.

கேட்டுப் பாருங்கள் !

ஆகஸ்டு 27உ திருச்சியில் ஸ்ரீ வாஜிராஜ பாகவதரின் நிருத்யகண்ட நாமஜுத் சித்திர ஸங்கீத உபந்நியாஸம்.

28உ தஞ்சாவூர் நாராயணசாமிப் பிள்ளையின் முழு நேரக் கச்சேரி.

29உ சென்னையில் ஸ்ரீ பி. எஸ். வேதாசலம் செட்டியார் பாடுகிறார். செட்டியார் முடுக்குடன் சரக்கு முடுக்கும் இருக்கும்.

30உ சென்னை ரேடியோவில் ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் சேர்ந்து பாடுகிறார்கள். ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் சேர்ந்திருப்பதே ஒரு விசேஷந்தான்; பாட்டும் விசேஷமாயிருக்க வேண்டும்.

அன்றைக்குத் திருச்சியில் "வாக்கி" இசை நாடகம் நடக்கிறது. "கல்யாணன்" எழுதி, டி. வி. நண்பர்களால் நடிப்பது.

31உ காலையில் ஸ்ரீமதி எம். ஆர். குஞ்சம்மாள் "நல்லோ நல்ல நாள்" என்று பாடுகிறார். அன்று ரேடியோ ரசிகர்களுக்கும் நல்ல நாள்தான். ஏனெனில், இரவு 7-45க்கு தஞ்சாவூர் நாணுவின் திவ்யமான கச்சேரி.

ஜூரஸ்தான் கடிதங்கள்

எம். எஸ். வி.

லாகூர், 12-8-44.

ஸ்ரீ மலேரியாவுக்கு ஜனுப் சாதா ஜூரம் எழுதிக் கொள்வது :—

தங்கள் கடிதம் கிடைத்தது. "ஜூரஸ்தான்" விஷயமாக தங்களிஷ்டம் போல் தங்களிடம் கலந்து பேச விரும்புகிறேன். அடுத்த வாரத்தில் பம்பாய்க்கு வர உத்தேசித்திருக்கிறேன். ஆகஸ்டு 19உ யன்று மலபார் குன்றிலுள்ள என்னுடைய சொந்த கிரகத்தில் தங்களை வரவேற்கத் தயாரா யிருக்கிறேன்.

(ஒப்பம்) சாதா ஜூரம்.

அறிக்கை நெ. 1.

மிஸ்டர் குண்டார்நடியார்—பம்பாய்.

அபாயம்! அபாயம்! என்னுடைய உத்தரவின்றி யாரும் மலபார் குன்றின் சமீபம் செல்லக் கூடாது. காரணம் அந்தக் குன்றில் மனித சமூகத்துக்கே பெரும் எதிரிகளான மலேரியா ஜூரமும் சாதா ஜூரமும் தேசத்தைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்ளும் விஷயமாகச் சந்திக்கப் போகின்றனவாம். ஆகையால், பொது ஜனங்கள் யாரும் அந்தப் பக்கம் கூட வேண்டாம். அப்புறம் ஜூரம் உங்களைத் தொற்றிக் கொள்ளும். உஷார்!

குண்டார்நடி.

அறிக்கை நெ. 2.

மகா-ள-ள-ஸ்ரீ மிதவாதம் — சென்னை.

ஐயோ, ஐயையோ, போச்சு; கெட்டுப் போச்சு. மலேரியா சுரமாம்; மலபார் ஹில்லாம். சாதா சுரமாம்; அதைச் சந்தித்துப் பேசுவதாம். "ஜூரஸ்தான்" கேட்பதாம். அதற்குத் திட்டம் ஒரு கேடாம். நம்மை ஆளும் மிஸ்டர் பிடிவாதம் இருக்கிறவரை இந்த ஜூரங்களெல்லாம் என்ன பேசித்தான் என்ன? நான் இருக்கிறேனே மிதவாதம். தெரியாமலா சும்மா இருந்த இடத்திலிருந்தே அறிக்கை மட்டும் விட்டுக் கொண்டிருக்கிறேன்?

(ஒப்பம்) மிதவாதம்.

அறிக்கை நெ. 3.

ஹிஸ் ஹைனஸ் ஜரிகைத் தலைப்பாகை.
—திருவாங்கூர் சமஸ்தானம்.

உஷார்; தேகோ! நான் இருக்கிறேன் ஜரிகைத் தலைப்பாகை. என்னதான் இந்த ஜூரக்களெல்லாம் கூடிக் கூடிப் பேசினாலும் அப்புறம் அடுத்தபடி என்னிடம் தான் வரவேண்டும். நான் சும்மா இருக்கப் போவதில்லை. என் ஜரிகைத் தலைப்பாவுக்கு ஆபத்து இல்லை என்பது என்ன நிச்சயம்? அதற்கு ஏதேனும் முதலில் உறுதி கூறுங்கள். பிறகுதான், தேசிய சர்க்கார், சுயராஜ்யம் எல்லாம்.

(ஒப்பம்) ஜரிகைத் தலைப்பாகை.

அறிக்கை நெ. 4.

ஸர்தார் 'சீக்' சிங் — பகதூர்புரி

'சீக்'குக்கும் ஒரு ஸ்தானம் கொடுக்காத வரை நான் சும்மா இருக்கப் போவதில்லை. ஆமாம்; 'ஜூரஸ்தான்' கொடுக்கும்போது 'சீக்'(கிய) ஸ்தானமும் கொடுத்தால்தான் விடுவேன். இல்லாவிட்டால், குறுக்கே விழுந்து குளறுவேன்.

(ஒப்பம்) 'சீக்' சிங்.

மிஸ்டர் பிடிவாதம் ஸ்ரீ மலேரியா சுரத்துக்கு எழுதுவதாவது :—

வைஸ்ராய் ஹவுஸ், 17—8—44.

டியர் மலேரியா,

நீ எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேசிய சர்க்கார் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறாய். யுத்தம் முடிகிற வரையில் எனக்கு அதெல்லாம் பற்றிப் பேச நேரமில்லை. உனக்கு இப்போது என்னால் ஏதேனும் செய்வதும் சாத்தியமில்லை. உன்னுடன் சாதா ஜூரம் 'ஜூரஸ்தான்' விஷயமாகப் பேசி ஒரு முடிவுக்கு வந்தால் மட்டும் போதாது. அப்புறம் எத்தனை மைனாரிட்டி ஜூரங்கள் நாட்டில் இல்லை? அதற்கெல்லாம் என்ன பாதுகாப்பு?

(ஒப்பம்) பிடிவாதம்.

ஸ்ரீ மலேரியா சுரத்துக்கு ஜனுப் சாதா சுரம் எழுதும் இரண்டாவது கடிதம் :—

நமது பம்பாய் சந்திப்பைத் தள்ளிவைக்கும்படி நேர்ந்து விட்டது. காரணம் என்னை 'ஜின்னு' என்றொரு வியாதி பிடித்திருக்கிறது. தங்களை எப்படி 'காந்தி' என்றொரு வியாதி பிடித்துக் கொண்டு தந்திரமாக ஆகாகான் அரண்மனையிலிருந்து தப்பித்துக் கொண்டதோ, அதே மாதிரி இந்த 'ஜின்னு' வியாதியும் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது போலும்! நான் என்ன செய்ய? எனவே, நமது சந்திப்பைத் தள்ளிப் போடவேண்டி யிருப்பதற்காக வருந்துகிறேன்.

(ஒப்பம்) சாதா சுரம், C/o. ஜனுப் ஜின்னு.

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 10

“பயங்கொள்ளிப் பல்லவன்”

சிவகாமி ஆடியபோது, சுய உணர்வுடன் இருந்தவர் ஒருவரும் நல்ல வேளையாக அங்கே இருந்தார். அவர் பிக்ஷு நாகநந்திதான் என்று சொல்ல வேண்டியதில்லை.

“போதும், ஆயனரே! ஆட்டத்தை நிறுத்துங்கள். இனிமேல் ஆடினால் சிவகாமியும் தாங்கமாட்டாள். உலகமும் தாங்காது!” என்ற நாகநந்தியின் வார்த்தைகளைக் கேட்டு, ஆயனர் தாளத்தையும் சிவகாமி ஆட்டத்தையும் நிறுத்தினார்கள்.

புத்தபிக்ஷு கூறினார்:—“ஆயனரே! நீர் எத்தகைய துரோகம் செய்து கொண்டிருக்கிறீர்? இப்படிப்பட்ட தெய்வீகமான கலையை இந்த நடுக்காட்டிலே ஒளித்து வைத்துக் கொண்டிருக்கலாமா? லோபி ஒருவன் தனக்குக் கிடைத்த மதிப்பில்லாத இரத்தினத்தைப் பெட்டிக்குள்ளே பூட்டி வைத்திருப்பதுபோல அல்லவா இருக்கிறது நீர் செய்யும் காரியம்? தீபத்தை ஏற்றி நடுக்கூடத்தில் வைக்க வேண்டும். அப்படிக்கின்றி, மூலை முடுக்கிலே வைத்துத் துணியைப் போட்டு மூடினால், தீபம் அணைந்து போவதுடன், துணியும் அல்லவா எரிந்து போகும்? உலகம் பார்த்துப் பிரமிக்கும்படியான கலைச் செல்வம் உமது குமாரியிடம் இருக்கிறது. அதைப் பார்த்து ஆனந்திக்க உலகமும் காத்திருக்கிறது. நான் சொல்கிறதைச் சற்று செவி கொடுத்துக் கேளுங்கள். என்னுடன் கிளம்பி வாருங்கள். தில்லைப் பதிக்குப் போவோம். அங்கே, பரமசிவனுக்குப் போட்டியாக பார்வதி ஆடியது போல் சிவகாமியும் ஆடட்டும். ஆனால் பார்வதியைப் போல் சிவகாமி சிரமப்படுவதற்கே இடமிராது. எடுத்த எடுப்பிலேயே நடராஜா தோற்றுப் போவார். அவருடைய தூக்கிய திருவடியைப் பூமியின் மேல் வைத்து இளைப்பாறுவார். தில்லையிலிருந்து நாகப்பட்டினத்துக்குப் போகலாம். நாகப்பட்டினத்திலே புத்த பிக்ஷுக்களின் மகா சங்கம் கூடப் போகிறது. இந்தக் கூட்டத்துக்காகக் கன்யாகுப்ஜத்திலிருந்தும், காசியிலிருந்தும், கயையிலிருந்தும், கடல்களுக்கப்பாலுள்ள சாவகத் தீவிலிருந்தும், சீன தேசத்திலிருந்தும் பௌத்தர்கள் வருகிறார்கள். உலகத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் சிற்பக் கலைஞர்களும், இசை வல்லார்களும், நடன சாஸ்திர மேதைகளும் நாகப்பட்டினத்தில் கூடுகிறார்கள். அந்த மகா சங்கத்திலே உங்கள் புதல்வி நடனம் ஆடட்டும்; அவளுடைய புகழும் அவளைப் பெற்ற உம்முடைய புகழும் உலகமெல்லாம் பரவட்டும். நாகப்பட்டினத்திலிருந்து உறையூருக்குப் போவோம். உறையூர்ச் சோழர்கள் இன்று தாழ்வடைந்து பல்லவர்களுக்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசர்களாயிருக்கிறார்கள். இருந்தாலும், பூர்விகப் பெருமையுடையவர்கள். கலைகளில் அபாரப் பற்று உடையவர்கள். பார்த்திபன் என்னும் சோழ இராஜகுமாரன் அங்கே இருக்கிறான்.



குழந்தைகளுக்கு ஆரோக்கியத்துடன் திரேக புஷ்டியையும் முகமலர்ச்சியையும் கொடுப்பது பெரீஸ் பிஸ்கட்டுகள் என்று ஒவ்வொரு தாய் தந்தையர்களும் அறிந்திருப்பதால் அவர்கள் எப்பொழுதும் பெரீஸ் பிஸ்கட்டுகளையே விரும்புகிறார்கள்

பெரீஸ்

பிஸ்கட்ஸ்

குழந்தைகளைப் போஷித்து வளர்க்கும் ஆகாரம்

சிற்றுண்டிகளுக்கு சிறந்ததோர் உணவு.

PERRY & COMPANY, BISCUITS MANUFACTURERS, USILAMPATTI

சித்திரக் கலையில் தேர்ந்தவன். சிவகாமியின் நடனத்தைப் பார்த்தால், அவனுடைய ஆனந்தத்துக்கு அளவே இராது. அப்புறம் அங்கிருந்து கிளம்புவோம். சித்தர் வாச மலையின் சித்திர விசித்திரங்களைச் சிவகாமிக்குக் காட்டி விட்டு மதுரைமா நகருக்குச் செல்வோம். அங்கே மாறவர்ம பாண்டியன் சமீபத்திலேதான் காலமாகி, அவன் மகன் சடையவர்மன் பட்டத்துக்கு வந்திருக்கிறான். சடையவர்மன் மகா ரஸிகன். ஆஹா! சடைய வர்ம பாண்டியன் மட்டும் சிவகாமியின் நடனத்தைப் பார்த்து விட்டால், உங்களை இந்த அரண்ய வீட்டிலே இப்படி நிர்க்கதியாக விட்டிருப்பானா? மதுரை நகரிலுள்ள மாட மாளிகைகளுக்குள்ளே மிக உன்னதமான மாளிகை எதுவோ, அதிலேயல்லவா உங்களை வைத்துப் போற்றுவான்? ......"



இவ்விதமாக நாகநந்தி பேசி வருகையில், ஆயனரும் சிவகாமியும், பாம்பாட்டியின் மகுட வாத்தியத்தில் மயங்கிப் படமெடுத்தாடும் சர்ப்பத்தைப்போல், அவருடைய மொழிகளைக் கேட்டு வந்தார்கள்.

கடைசியில், "என்ன சொல்கிறீர், ஆயனரே!" என்று நாகநந்தி கூறி நிறுத்தியபோது, ஆயனருக்கு உண்மையில் இன்னது சொல்வதென்றே தெரியவில்லை. அவருடைய மனதில், "சக்கரவர்த்தியின் கட்டளைக்கும் நாகநந்தியின் யோசனைக்கும் வெகு பொருத்தமாயிருக்கிறதே!" என்ற எண்ணம் தோன்றிக் கொண்டேயிருந்தது. இருந்தாலும், காரணம் தெரியாத ஒருவித தயக்கமும் உண்டாயிற்று. எனவே, "நான் என்ன சொல்வது? சிவகாமியைத்தான் கேட்க வேண்டும்" என்று சொல்லி, சிவகாமியை நோக்கினார்.

சிவகாமிக்கோ, சிதம்பரத்தையும் நாகப்பட்டினத்தையும் உறையூரையும் மதுரையையும் பற்றிக் கேட்டபோது, அங்கெல்லாம் அவள் போவது போலவும், பல்லாயிரக் கணக்கான மக்களின் முன்னே ஆடுவது போலவும், அவர்களுடைய பாராட்டுதலைப் பெற்று மகிழ்வது போலவும் மனக் கண் முன்னால் தோன்றிக்கொண்டே வந்தது. ஆனால் அவள் மனத்திலும் ஒரு தடை; இன்னதென்று விளங்காத ஏதோ ஒரு சந்தேகம்; குறுக்கிட்டுக் கொண்டேயிருந்தது. "ஆ! இந்தப் பொல்லாத புத்த பிக்ஷு எதற்காக இதையெல்லாம் நமக்குச் சொல்கிறார்? ஏதோ ஒரு துர்நோக்கம் இதில் இருக்குமோ? அல்லது உண்மையாகவே நாட்டியக் கலையிலுள்ள ஆர்வங் காரணமாகத்தான் சொல்கிறாரா?" என்ற எண்ணம் அடிக்கடி எழுந்தது. அது மட்டுமல்ல; பெரிய மகா சபைகளில் தான் நடனமாடுவதைப் பற்றிய காட்சி மனக் கண்ணின் முன்னால் தோன்றும் போதெல்லாம் அதை மறைத்துக் கொண்டு குமார சக்கரவர்த்தியின் உருவமும் எதிரில் தோன்றியது. காதல் கனிந்து ஏமாற்றம் நிறைந்த கண்களினால் மாமல்லர் தன்னைப் பார்த்து, "சிவகாமி! உனக்காக நான் பல்லவ சாம்ராஜ்யத்தையே விட்டுவிடச் சித்தமாயிருந்தேன். நீ என்னை மறந்து விட்டு இப்படி ஊர் ஊராய்ச் சென்று ஆட ஆரம்பித்து விட்டாய் பார்த்தாயா?" என்று கேட்பது போலவும் இருந்தது.

எனவே, ஆயனர் மேற்கண்டவாறு கேட்டதும், சிவகாமி சற்று யோசித்து, "எனக்கு என்ன தெரியும், அப்பா! உங்களுக்கு எது உசிதமாகத் தோன்றுகிறதோ, அப்படிச் செய்யுங்கள். ஆனால், இந்த வீட்டை விட்டுப் போனால் நீங்கள் நிம்மதியாயிருப்பீர்கள் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றாள்.

அப்போது, நாகநந்தி "ஆமாம்; ஆயனரே! உம்முடைய காலந்தான் எவ்விதம் போய்க் கொண்டிருக்கிறது? இங்கே புதிய நடனச் சிலை எதையும் காணோமே? நான் கடைசி முறையாக வந்து போன பிறகு, புதிதாக

ஒரு சிலை கூட அமைக்க வில்லையா?..." என்று வினவினார்.

ஆயனர் ஏக்கம் நிறைந்த குரலில், "இல்லை; உளியைக் கையினால் தொட்டு வெகு காலமாயிற்று" என்றார்.



"ஏன் அப்படி? சிற்பக் கலை என்ன பாவத்தைச் செய்தது? தென் தேசத்தின் ஒப்பற்ற மகா சிற்பி எதற்காகக் கல்லுளியைக் கையினால் தொடாமலிருக்க வேண்டும்?" என்று பிக்ஷு கேட்டார்.

சிவகாமி அப்போது குறுக்கிட்டு, "எல்லாம் உங்களால் வந்த வினைதான், அடிகளே! அஜந்தா வர்ண இரகசியத்தைக் கண்டு பிடிப்பதில் அப்பா முனைந்திருக்கிறார். தினம் தினம் விதவிதமான பச்சிலைகளைக் கொண்டு வருவதும் அரைப்பதுந்தான் ஏழு மாதமாய் அப்பாவுக்கு வேலை" என்றாள்.

"ஆகா! வீண் வேலை! நான்தான் எப்படியும் உங்களுக்கு அதை அறிந்து சொல்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறேனே?"

ஆயனர் சிறிது பரபரப்புடன், "வாக்குக் கொடுத்தது நிஜந்தான். ஆனால், அதை நிறைவேற்றுவதாகக் காணோமே? நீங்கள் ஓலை கொடுத்தனுப்பியதுதான் பிரயோஜனப்படவில்லையே! அந்தப் பிள்ளையாண்டான் இப்போது சைன்யத்தில் சேர்ந்து பெரிய தளபதியாகி விட்டான்; தெரியுமோ, இல்லையோ?" என்றார்.

"அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். நேற்றைக்குத்தான் காஞ்சிக்கு வந்தானாமே?"

"ஆகா! இன்று காலை அந்தப் பிள்ளையே இங்கே வந்திருந்தான். காஞ்சிக் கோட்டைக் காவலுக்காக அவனைச் சக்கரவர்த்தி அனுப்பி வைத்திருக்கிறாராம். அடேயப்பா! எட்டு மாதத்திற்குள் பையனிடம் எவ்வளவு வித்தியாசம்? அடக்க ஒடுக்கத்துடனும் நாணம் அச்சத்துடனும் அன்றைக்கு உங்களுடன் வந்தானே, அந்தப் பரஞ்சோதி எங்கே? இன்று காலை காஞ்சி தளபதியாக வந்த பரஞ்சோதி எங்கே? என்ன அகம்பாவம்? என்ன கர்வம்?"

"அப்பா! அவரிடம் அகம்பாவம் ஒன்றுமில்லையே! தங்களிடம் எவ்வளவோ பயபக்தியுடன்தான் நடந்து கொண்டார்?" என்று சிவகாமி மீண்டும் குறுக்கிட்டுச் சொன்னாள்.

"அதெல்லாம் வேஷம், சிவகாமி! வேஷம்! இந்த வீட்டை விட்டுப் போகும்படி இவன் யார் என்னைச் சொல்வதற்கு? சக்கரவர்த்தியின் கட்டளையாயிருந்தாலும் இவன் எதற்காக அதைக் கொண்டு வர வேண்டும்?" என்று ஆயனர் கோபக் குரலில் பேசினார்.

"ஆயனரே! சக்கரவர்த்தியின் கட்டளைதான் என்ன? நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று புத்தபிக்ஷு கேட்டார்.

"எங்களை இந்த வீட்டை விட்டுப் போகச் சொல்லக் கட்டளை, அடிகளே! எப்படியிருக்கிறது கதை? ஆகா! இந்த மகேந்திரபல்லவர் ஒரு காலத்தில் சிற்பக் கலையில் எவ்வளவு பற்று உடையவராயிருந்தார்? அவரைப் பற்றி நான் என்னவெல்லாம் எண்ணியிருந்தேன்?" என்று ஆயனர் எதையோ பறி கொடுத்து விட்ட குரலில் கூறினார்.

"நானும் உங்கள் சக்கரவர்த்தியைப் பற்றி என்ன வெல்லாமோ எண்ணியிருந்தேன். அவருடைய சாமர்த்தியம் இப்போதுதான் தெரிகிறது. உங்கள் சக்கரவர்த்தி எப்பேர்ப்பட்ட காரியத்தைச் சாதித்திருக்கிறார், தெரியுமா, ஆயனரே? பல்லவ சைன்யத்தில் ஐம்பதாயிரம் வீரர்களுக்கு மேலே இருக்க மாட்டார்கள். இந்தச் சின்ன சைன்யத்தை வைத்துக் கொண்டு வாதாபி சைன்யத்தை எட்டு மாதத்துக்கு மேல் வட பெண்ணைக் கரையிலேயே நிறுத்தி வைத்திருந்தாரே; அதை நினைத்தாலே எனக்குப் பிரமிப்பாயிருக்கிறது. மகேந்திர பல்லவர் மகா கெட்டிக்காரர். ஆய



னரே! மகா கெட்டிக்காரர்!"

"அடிகளே! வாதாபி சைன்யம் அப்படி ரொம்பப் பெரிதா, என்ன? நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று சிவகாமி கேட்டாள்.

"பார்க்காமல் என்ன, அம்மா! அஜந்தா மலைக்கு நான் யாத்திரை போயிருந்த சமயத்தில், ஹர்ஷ வர்த்தனரோடு போராடிவிட்டு நர்மதைக் கரையிலிருந்து திரும்பி வந்த வாதாபி சைன்யத்தைக் கண்டேன். சைன்யமா, அது? சமுத்திரந்தான்! இருக்கட்டும்; ஆயனரே! பரஞ்சோதி அவன் போன காரியத்தைப் பற்றி என்ன சொன்னான்? ஓலையை என்ன செய்தானாம்? அதைப் பற்றி நீங்கள் ஒன்றும் கேட்கவில்லையா?" என்று புத்த பிக்ஷு வினவினார்.

"கேட்காமல் என்ன? பாவம்! அந்தப் பிள்ளைக்கு வழியிலே பெரிய விபத்து நேர்ந்து விட்டதாம். சளுக்க வீரர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு விட்டார்களாம். வாதாபி சக்கரவர்த்தியின் முன்னிலையிலேயே கொண்டு போய் நிறுத்தி விட்டார்களாம்."

"அடடா! பெரிய விபத்துத்தான்! அப்புறம்?"

"எப்படியோ பையன் சளுக்க வீரர்களிடமிருந்து தப்பித்து வந்து விட்டானாம். நல்ல வேளையாக, சிறை பிடிக்கப்பட்டதும் ஓலையை மலைப் பள்ளத்தாக்கில் ஓடிய அருவியிலே எறிந்து விட்டானாம் புத்திசாலிப் பையன்."

"புத்திசாலி; அதோடு அதிர்ஷ்டசாலி. முதன் முதலில் சாலை ஓரத்தில் அவன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த போது பார்த்தவுடனேயே இவன் மகா அதிர்ஷ்டசாலியாவான் என்று எனக்குத் தெரிந்து போயிற்று. ஆனால், நான் அவனுக்கு எதிர்பார்த்த அதிர்ஷ்டம் வேறு! ஆஹா! என்ன தவறு செய்து விட்டேன்" என்று நாகநந்தி கூறியபோது மிகமிக இலேசாக ஒரு பெருமூச்சு விட்டார்.

"அடிகளே! பரஞ்சோதிக்கு இப்போது அதிர்ஷ்டம் ஒன்றும் குறைவாகப் போய்விடவில்லையே? தமிழ் படிக்கவும் சிற்பம் கற்கவும் வந்த பட்டிக்காட்டுப் பிள்ளைக்கு இதை விட என்ன அதிர்ஷ்டம் கிடைக்க முடியும்?"

"உங்களுக்குத் தெரியாது ஆயனரே! இன்னும் எவ்வளவோ பெரிய அதிர்ஷ்டம் அவனுக்கு வருவதற்கிருக்கது. ஏதோ ஒரு அசுபக்கிரஹம் வந்து குறுக்கிட்டிருக்கிறது......"

"நல்ல வேளை; இவ்வளவு அதிர்ஷ்டத்தோடேயே நிற்கட்டும். இன்னும் அதிகமானால், பையனுக்குத் தலை தெரியாமல் போய்விடும்" என்றார் ஆயனர். அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து கொள்ளாமல் வந்ததில் பரஞ்சோதியின்மேல் அவருக்குண்டான வெறுப்பு கொஞ்சமும் குறையவில்லை.

இப்போது சிவகாமி குறுக்கிட்டு, "அப்பா! அப்பா! ஒரு செய்தி கேட்டீர்களா? மகேந்திர சக்கரவர்த்தி ஒருவேளை பல்லவ இராஜ்யம் மாமல்லருக்கு இல்லையென்று சொல்லிவிட்டுப் பரஞ்சோதிக்கே கொடுத்தாலும் கொடுத்து விடுவாராம். ஜனங்கள் அப்படிப் பேசிக் கொள்வதாகச் சாரதி கண்ணபிரான் சொன்னார்" என்று கூறிவிட்டுக் கன்னங்கள் குழியக் கலகலவென்று சிரித்தாள்.

"யார், கண்ணபிரானா? அவன் கிடக்கிறான் பைத்தியக்காரன்! இப்படித்தான் ஏதாவது உளறுவான்" என்றார் ஆயனர்.

அப்போது நாகநந்தி, "இல்லை, ஆயனரே, இல்லை! சாரதி கண்ணபிரான் சொன்னது அப்படி ஒன்றும் உளறல் இல்லை. அவன் சொன்னபடி நடந்தால், அதில் எனக்கு வியப்பு இராது. காஞ்சி சிங்காதனத்தில் பயங்கொள்ளிப் பல்லவனை வைத்துப் பட்டம் கட்டுவதைக் காட்டிலும் பரஞ்சோதிக்கு ராஜ்யத்தைக் கொடுப்பதே வீர மகேந்திர பல்லவருக்கு உகப்பாயிருக்கும்" என்றார்.

அத்தியாயம் 12

உள்ளப் புயல்

எதிர்பாராத நேரத்தில் வானத்திலிருந்து ஒரு மின்னல் பாய்ந்து வந்து மண்டையைப் பிளந்து கொண்டு செல்வது போன்ற உணர்ச்சி "பயங்கொள்ளிப் பல்லவன்" என்ற சொற்களைக் கேட்டதும் சிவகாமிக்கு ஏற்பட்டது.

ஆயனாரும் திடுக்கிட்டவராய், "அடிகளே! என்ன சொல்கிறீர்? யாரைச் சொல்கிறீர்? பயங்கொள்ளிப் பல்லவன் யார்?" என்று கேட்டார்.

"தெரியாதா ஆயனரே? பயங்கொள்ளிப் பல்லவனைப் பற்றி உலகமெல்லாம் அறியுமே? நாடு நகரமெல்லாம் பேச்சாயிருக்கிறதே? உங்களுக்குத் தெரியாதா? ஆனால், நீங்கள் இந்தக் காட்டுக்குள்ளே இருக்கிறீர்கள்! உங்களுக்குத் தெரியாதுதான்!" என்றார் பிக்ஷு. பேசும் போதே அவருடைய குரலில் பாம்பின் சீறல் சத்தம் கலந்து வந்தது.

"என்ன தெரியாது? யாரைப்பற்றி உலகம் என்ன சொல்கிறது? ஒரே மர்மமாயிருக்கிறதே!" என்றார் ஆயனர்.

"ஒரு மர்மமும் இல்லை. உலகமெல்லாம் தெரிந்த விஷயத்தை உங்களுக்கு நான் சொன்னால்தான் என்ன? மாமல்லன் என்று பட்டப் பெயர் பெற்ற குமார சக்கரவர்த்தி நரசிம்ம பல்லவனைப் பற்றித்தான் சொல்கிறேன். அவன் பெரிய பயங்கொள்ளி, கோழை — என்பது உலகப் பிரசித்தமாயிற்றே? முதன் முதலில், வாதாபி சைன்யம் படையெடுத்து விட்டது என்று கேள்விப்பட்டதுமே மாமல்லனுக்கு உடம்பெல்லாம் நடுக்கமடைந்து மயங்கி விழுந்து விட்டானாம். அதுவும் அந்தச் சமயத்தில் அவன் அரண்மனை அந்தப்புரத்து மாதர்களுக்கு மத்தியில் இருந்தானாம். சக்கரவர்த்திக்கு மானமே போய் விட்டதாம். ஆயனரே! மாமல்லனை ஏன் சக்கரவர்த்தி யுத்த களத்துக்கு அழைத்துப் போகவில்லை என்று நீர் கேள்விப்படவில்லையா? ஏன் காஞ்சிக் கோட்டைக்கு வெளியிலே மாமல்லன் வரக்கூடாது என்று திட்டம் செய்துவிட்டு மகேந்திர பல்லவர் போர்க்களம் போனார் என்று நீர் கேள்விப்படவில்லையா?......"

"ஓ பொல்லாத பிக்ஷுவே! எப்பேர்ப்பட்ட அவதூறு சொல்கிறீர்? எம்மாதிரி அபசாரம் பேசுகிறீர்? பதினெட்டு வயதுக்குள் தென்னாட்டிலுள்ள பிரசித்த மல்லர்களையெல்லாம் வென்று 'மகா மல்லன்' என்று பட்டம் பெற்ற மகா வீரனைப்பற்றி இவ்விதம் சொல்ல உமது நாக்குக் கூசவில்லையா?" என்று ஆயனர் சற்று ஆத்திரத்துடனேயே கேட்டார்.

"ஓ மகா சிற்பியே! தங்களுக்கு இந்த விஷயமெல்லாம் தெரியாதென்பது எனக்குத் தெரியாது. பெரிய இடத்து சமாசாரம்; நமக்கு என்ன கவலை? ஆனாலும், என் வார்த்தையில் நீங்கள் அவநம்பிக்கை கொள்வதால் சொல்கிறேன். அந்த 'மகாமல்லன்' பட்டமெல்லாம் வெறுங்கதை. நரசிம்ம வர்மனோடு போரிட்ட மல்லர்களுக்கெல்லாம் முன்னாலேயே கட்டளையிடப்பட்டிருந்தது; சீக்கிரத்தில் தோற்றுப்போய்விட வேண்டுமென்று. இப்படியெல்லாம் செய்தாலாவது பிள்ளைக்கு வீரமும் தைரியமும் வராதா என்று சக்கரவர்த்தி பார்த்தார். பாவம்! பலிக்கவில்லை! யுத்தம் என்று வந்ததும் நடுங்கிப் போய்விட்டான். 'போர்க்களத்துக்கு என்னுடன் வருகிறாயா?' என்று சக்கரவர்த்தி கேட்டதற்கு, 'நான் போருக்கும் வரவில்லை; எனக்கு ராஜ்யமும் வேண்டாம்!' என்றானாம் பிள்ளை. உத்தர குமாரனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர் அல்லவா? அந்த சாக்ஷாத் உத்தர குமாரனுடைய அவதாரந்தானாம் நரசிம்மவர்மன். ஊர் ஊராகப் பாரதமண்டபம் கட்டிப் பாரதம் படிக்க வேண்டுமென்று சக்கரவர்த்தி ஏற்பாடு செய்திருக்கிறாரே, எதற்காகத் தெரியுமா? முக்கியமாக, அவருடைய திருக்குமாரனை உத்தேசித்துத்தான்!..."

"அடிகளே! நிறுத்துங்கள்! குமார சக்கரவர்த்தியைப் பற்றி இப்படியெல்லாம் கேட்க என் மனம் சகிக்கவில்லை" என்றார் ஆயனர்.

"இன்னும் "மிச்சமுள்ள உண்மையையும் கேட்டால் என்ன சொல்வீர்களோ, தெரியவில்லை. ஆனால், உங்கள் குமாரி சிவகாமி இருக்கும்போது சொல்லக் கூடாது..." என்று கூறி நாகநந்தி சிவகாமி இருந்த இடத்தை நோக்கினார்.

சிவகாமி ஏழெட்டு வயதுச் சிறுமியாயிருந்தபோது ஒரு சமயம் ஒரு தேன் கூட்டில் கையை வைத்து விட்டாள். கையிலும் உடம்பிலும் தேனீக்கள் கொட்டி விட்டன. ஒரு நாளெல்லாம் நரக வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தாள். அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு வேதனையை நாகநந்தி நரசிம்ம வர்மரைப் பற்றிச் சொல்லி வந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த போது சிவகாமி அனுபவித்துக் கொண்டிருந்தாள். குறுக்கிட்டுப் பேசி பிக்ஷுவின் பேச்சைத் தடை செய்ய அவளால் முடியவில்லை. அவளுடைய நெஞ்சிலிருந்து இருதயம் எழும்பித் தொண்டையில் வந்து அடைத்துக் கொண்டிருந்தது. மூச்சு விடவே கஷ்டமாயிருந்தது. பேசுவது எப்படி? அங்கிருந்து எழுந்து போவதற்கும் தைரியம் இல்லை. ஏதாவது சந்தேகம் ஏற்படக் கூடுமல்லவா? தன் மனோநிலை முகத்தில் தெரிந்துவிடப் போகிறதே என்ற பயம் ஒரு பக்கம் அவளை வருத்தியது. எனவே, மற்ற இருவரையும் கண்ணெடுத்தும் பார்க்காமல் தலை குனிந்து கொண்டிருந்தாள். பிக்ஷுவின் வார்த்தை ஒவ்வொன்றும் பழுக்கக் காய்ச்சிய ஈயத் துளியைப் போல் அவள் காதில் விழுந்து கொண்டேயிருந்தது.



பிக்ஷு, "உங்கள் குமாரி இருக்கும்போது சொல்லக் கூடாத விஷயங்கள்" என்று கூறியதும், இதுதான் சமயம் என்று சிவகாமி சட்டென்று எழுந்திருந்தாள். அவர்கள் பக்கமே பாராமல் கடந்து வீட்டின் இரண்டாங் கட்டுக்குள் பிரவேசித்தாள்.

சிவகாமியின் செம்பஞ்சு ஊட்டிய பாதங்களைக் கதவின் அடியில் இருந்த இடைவெளியிலே புத்த பிக்ஷு பார்த்து விட்டு, கொஞ்சம் உரத்த குரலில் சொன்னார் :—

"ஆயனரே! உமது குமாரி சிறந்த கலைவாணி மட்டுமல்ல; ரொம்பவும் இங்கிதம் தெரிந்தவள். எப்படிச் சட்டென்று எழுந்து போனாள், பாரும்!......நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், சக்கரவர்த்திக்குத் தம் புத்திரன் விஷயத்தில் இன்னொரு பெரிய கவலையாம். பல்லவ குலத்தில் இவ்வளவு இளம் வயதில் இவனைப் போல் ஸ்திரீ லோலன் ஆனவனே கிடையாதாம். காஞ்சிக்கு அக்கம் பக்கத்துக் கிராமங்களில் உள்ள பெண்கள் எல்லாம், எங்கே மாமல்லன் வந்து விடுவானோ என்று நடுங்கிக் கொண்டிருக்கிறார்களாமே! லஸ்தவமாகவே, இதெல்லாம் உமக்குத் தெரியாதா? ஒரு சமயம் மாமல்ல பல்லவன் ஒரு பெண்ணுக்கு எழுதிய



காம விகாரம் ததும்பிய ஓலை சக்கரவர்த்தியிடம் அகப்பட்டு விட்டதாம்! இதை யெல்லாம் உத்தேசித்துத்தான், மாமல்லனைக் காஞ்சி அரண்மனையிலேயே இருக்க வேண்டுமென்று சக்கரவர்த்தி திட்டம் செய்திருக்கிறாராம்!......"

இப்படி நாகநந்தி சொல்லிக்கொண்டிருந்தபோது, கதவிடுக்கில் தெரிந்த பாதங்கள் மறைந்தன. நாகநந்தியும் பிறகு தமது குரலைத் தாழ்த்திக் கொண்டு பேசலானார்.

*　　　*　　　*

ஆயிரம் பேய்களினால் துரத்தப்பட்டவளைப் போல் சிவகாமி வீட்டின் பின்கட்டுகளைத் தாண்டிக் கொல்லைப் பக்கம் ஓடினாள். காட்டுக்குள்ளே எங்கே போகிறோம் என்ற உத்தேசமில்லாமல் ஓடினாள். ஓடி ஓடிக் களைத்துக் கடைசியில் ஒரு மரத்தடியில் வேரின் மீது உட்கார்ந்தாள்.

சிவகாமியைப் பின் தொடர்ந்து மானும் கிளியும் பின்னால் வந்து கொண்டிருந்தன. அவற்றை அவள் கவனிக்கவே யில்லை. மரத்தடியில் உட்கார்ந்த சிறிது நேரத்திற்குப் பிறகு ரதி அருகில் வந்து மெதுவாக அதன் முகத்தை அவள் கரத்தின் மீது வைத்தது. சிவகாமி அதை ஒரு தள்ளுத் தள்ளி "சீ! தரித்திரமே! பீடை! ஒழிந்து போ!" என்று கத்தினாள்.

பக்கத்திலிருந்த கிளி — சந்தர்ப்பம் தெரியாத அசட்டுச் சுகரிஷி — "மாமல்லா! மாமல்லா!" என்றது. சிவகாமி கையை ஓங்கி "சனியனே! மூதேவி!" என்று அதை அடிக்கப் போனாள். கிளி இறகுகளை அடித்துக்கொண்டு அவளிடம் அடிபடாமல் தப்பிச் சென்றது.

திடீரென்று தாமரைக் குளக் கரையில் மகிழ மரப் பொந்தில் இருந்த ஓலைகளின் நினைவு வந்தது.

அந்த ஓலைகளை உடனே எடுத்து நெருப்பிலே போட்டு எரித்துச் சாம்பராக்கி விட வேண்டுமென்று நினைத்துத் தாமரைக் குளத்தை நோக்கி ஓடினாள். அதி சீக்கிரத்தில் குளக் கரையை அடைந்து, உட்காரும் பலகையின்மீது காலை வைத்து ஏறி மரப் பொந்திலே கையை விட்டாள்.

ஐயோ! அந்தப் பொந்திலே ஏதாவது நாக சர்ப்பம் இருந்து அவள் கரத்தைத் தீண்டி விட்டதா என்ன? அவள் முகத்திலே ஏன் அவ்வளவு பயங்கரம்? கையை ஏன் அவ்வளவு அவசரமாய் வெளியில் எடுத்தாள்?

இன்னும் கொஞ்சம் மேலே ஏறினாள். பொந்திற்குள்ளே உற்றுப் பார்க்கிறாளே, என்னத்திற்கு? மறுபடியும் கையை விட்டுத் துளாவுகிறாளே, ஏன்?


அந்தப் பொந்து வெறுமையாய், சூனியமாயிருந்ததுதான் காரணம். எவ்வளவு துளாவியும் ஓலைகள் அகப்படாததுதான் காரணம்.

காலையில் அந்தப் பொந்தில் இருந்த ஓலைகள் எங்கே போயிருக்கும்?

*　　　*　　　*

சிவகாமி அந்த மகிழ மரத்தை ஓடி அடைந்த அதே சமயத்தில், தாமரைக் குளத்தின் எதிர்க்கரையில் இருந்த காட்டில் புத்த பிக்ஷு விரைந்து வந்து கொண்டிருந்தார். சிவகாமி மரத்தை யடைந்து விட்டதைப் பார்த்ததும் அவர் முகத்தில் அளவில்லாத ஏமாற்றக் குறி காணப்பட்டது. மரப் பொந்தில் அவள் கையை விட்டு வெறுங் கையை வெளியில் எடுத்ததும், அப்போது அவளுடைய முகத்தில் தோன்றிய வியப்பும் பயமும், பிக்ஷுக்கு எல்லையற்ற ஆச்சரியத்தை உண்டாக்கிற்று என்பது அவருடைய முகக் குறியினால் தெரிய வந்தது.





கிருஷ்ணன் பிரதிக்ஞை

பாண்டவர்கள் காட்டுக்குத் துரத்தப்பட்டதைக் கேட்டு அவர்களிடம் மிக்க அன்பு வைத்திருந்த போஜ குலத்தவர்களும் விருஷ்ணி குலத்தவர்களும், சேதி தேசத்து ராஜா திருஷ்டகேதுவும், கேகயர்களும் இன்னும் பலரும் வனத்தில் பாண்டவர்கள் இருந்த ஆசிரமத்துக்குச் சென்றார்கள். பாண்டவர்களைக் கண்டு பேசி, துரியோதனனுடைய செய்ததைக் கேட்ட இவர்கள் மகா கோபங்கொண்டு "இவர்களுடைய ரத்தத்தை பூமி குடிக்கப் போகின்றது" என்றார்கள்.

விசாரிக்க வந்த அரசர்களின் பேச்சு முடிந்த பின் திரௌபதி கிருஷ்ண பகவானிடம் வந்தாள்.

"ஒற்றை வஸ்திரத்தைத் தரித்திருந்த நிலையில் நான் சபைக்கு இழுக்கப்பட்டேன். திருதராஷ்டிர புத்திரர்கள் என்னை அவமானப்படுத்திப் பரிகசித்தார்கள். தாசி என்று என்னை எண்ணினார்கள். பீஷ்மரும் திருதராஷ்டிரரும் நான் யார் என்பதையும் அவர்களுக்கு நான் மருமகள் என்பதையும் மறந்துவிட்டார்கள். ஜனார்த்தனரே! என் கணவர்களும் என்னைக் காப்பாற்றவில்லை. அற்பர்களால் துன்பப்படுத்தப் பட்டேன். பீமனுடைய தேக பலம் பயன்படாமல் போயிற்று. அர்ச்சுனனுடைய காண்டீபமும் பயன்படாமல் சும்மாக் கிடந்தது. கேவலம் பலவீனர்களுங்கூட உலகத்தில் தங்கள் மனைவிகளை ரக்ஷிப்பார்கள். இவ்வளவு பாவம் செய்த துரியோதனன் எவ்வாறு உயிருடன் இருக்கலாம்? ராஜாதி ராஜனாக இருந்த பாண்டுவின் மருமகளாகிய நான், இழுக்கப்பட்டேன். ஐந்து வீரர்களுடைய மனைவியாகிய நான் அவமானப் படுத்தப்பட்டேன். நான் எவ்வாறு உயிருடன் இருக்க முடியும்? மதுசூதனா! எனக்குப் பதிகள் இல்லை, புத்திரர்களில்லை, பந்துக்களுமில்லை, சகோதரர்களுமில்லை, நீரும் இல்லாமற் போனீர்!" என்று கோபாவேசமாய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டு ரத்தக் கண்ணீர் கலந்த சொற்களைச் சொன்னாள்.

இவ்வாறு புலம்பிய திரௌபதியைக் கிருஷ்ணன் சமாதானம் செய்து, "உன்னை யார் இவ்வாறு துன்பப்படுத்தினார்களோ, அவர்கள் எல்லாரும் யுத்த களத்தில் இரத்தத்தில் நனைந்து உயிரற்றுக் கிடப்பார்கள்; நீ துயரப்பட வேண்டாம். நான் உனக்குப் பிரதிக்ஞை செய்கிறேன். பாண்டவர்களுக்கு என்ன துணை செய்ய வேண்டுமோ அதை நான் செய்வேன். நீ அரசர்க்கரசியாகப் பட்டம் பெறுவாய். ஆகாயம் விழுந்தாலும் இமயமலை பொடிந்தாலும் பூமி உடைந்து போனாலும் கடல் வற்றினாலும் என் வார்த்தை பொய்யாகாது. சத்தியம்" என்று கண்ணன் திரௌபதிக்குச் சபதம் செய்தான்.

இந்தப் பிரதிக்ஞையைக் கண்ணன் செய்ததும் திரௌபதி சமாதானம் அடைந்து அர்ச்சுனனைக் கடைக்கண்

னால் கண்ணீர்த் துளிகளின் வழியாகப் பார்த்தான்.

"அழகிய கண்ணை யுடையவளே! கண்ணபிரான் என்ன சொன்னாரோ அது நடக்கும். மாறாது!" என்று அருச்சுனனும் பிரதிக்ஞை செய்தான்.

"நான் துரோணரை எதிர்த்துக் கொல்லுவேன். சிகண்டி பீஷ்மரைக் கொல்லுவான். பீமன் அந்தத் துராத்மாவான துரியோதனனைக் கொல்லுவான். அருச்சுனன் அந்தத் தேரோட்டி மகன் கர்ணனுக்கு யமனாவான்" என்று திருஷ்டத்யும்னன் சபதம் செய்து தங்கைக்கு ஆறுதல் சொன்னான்.

"நான் துவாரகையில் இருக்கவில்லை. இருந்திருந்தால் கட்டாயம் இந்தச் சூதாட்ட மோசத்தை நடவாமல் செய்திருப்பேன். திருதராஷ்டிரனும் துரியோதனனும் என்னைச் சபைக்கு அழைக்காமலிருந்தாலும் நான் போயிருப்பேன். பீஷ்மர், துரோணர், கிருபர் முதலிய பெரியோர்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி இந்த நாசகரமான சூதாட்டத்தை நிறுத்தி யிருப்பேன். நான் சால்வராஜனை எதிர்க்க வேண்டியதாகி நாட்டை விட்டு வெளியே போயிருந்தேன். சிசுபாலனை நான் யாகத்தில் வதம் செய்தேன் என்கிற கோபத்தால் நான் துவாரகையில் இல்லாத காலத்தில் துவாரகை நகரத்தை சால்வன் முற்றுகை யிட்டான். பிறகு நான் துவாரகை சென்றதும் விஷயம் தெரிந்து அவனைத் துரத்திச் செல்ல நேரிட்டது. அவனை வென்று வதம் செய்த பின்னரே இந்தச் சூதாட்ட நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு உங்களைப் பார்க்க இங்கே வந்தேன். அணை உடைந்த பின் ஜலத்தைத் தடுக்க முடியாததுபோல் உங்கள் துக்கத்தை இப்போது போக்க இயலாதவனாக இருக்கிறேன்" என்றான்.


பிறகு கிருஷ்ணன் விடை பெற்றுக் கொண்டு அருச்சுனன் மனைவி சுபத்திரையையும் அவர்கள் குழந்தை அபிமன்யுவையும் அழைத்துக் கொண்டு துவாரகை சென்றான். திருஷ்டத்யும்னன் திரௌபதியின் புத்திரர்களை அழைத்துக் கொண்டு பாஞ்சாலம் சென்றான். பாண்டவர்கள் வனவாசம் செய்தார்கள்.

கிருஷ்ணன் இல்லாத சமயத்தில் துவாரகை நகரம் சால்வனால் முற்றுகை யிடப்பட்ட பொழுது, உக்கிரசேனன் அதை எவ்வாறு காவல் காத்தான் என்பதைக் கிருஷ்ணன் பாண்டவர்களுக்குச் சொன்னான். அதைப் படிக்கும்போது தற்கால நடவடிக்கைகள் போலவே எல்லாம் காணப்படுகிறது. துவாரகா நகரத்துக் கோட்டை நன்றாக அமைக்கப் பட்டிருந்தது. கொடிமரம், வெளிவாசல், பல்லாயிரக்கணக்கான போர் வீரர்கள் இருப்பதற்குத் தகுந்த இடங்கள், எல்லாம் அமைக்கப் பட்டிருந்தன. யந்திரங்களும், சுரங்க வழிகளும் இருந்தன. பலவித ஆயுதங்கள், கவண் கற்களை எறிகின்ற பொறிகள், வெடி மருந்து உள்பட எல்லாம் சேகரித்து வைக்கப் பட்டிருந்தன. புகழ் பெற்ற வீரர்களின் பெருங் கூட்டம் நகரத்திற் குள்ளிருந்தது. அனைவரும் சாந்த மடைந்த பின் கிருஷ்ணன் மறுபடியும் சொன்னான்: முற்றுகை இடப்பட்ட காலத்தில் நகரத்தில் யாரும் கள் குடிக்கக் கூடாது என்று உக்கிரசேனனுடைய கண்டிப்பான உத்தரவு மூலம் அறைந்து பகிரங்கப் படுத்தப்பட்டது. நகரத்திலிருந்து நர்த்தனம் முதலிய வேடிக்கை ஆட்டக்காரர்களை யெல்லாம் அப்புறப்படுத்தி விட்டனர். ஜலத்தைத் தாண்டி வரும் எல்லாப் பாலங்களும் உடைத்து விடப்பட்டன. கப்பல்கள் தடுக்கப்பட்டன. (துவாரகை என்பது ஒரு தீவில் கட்டப்பட்ட கோட்டை..) அகழிகளில் ஜலத்துக்குள் இரும்புச் சூலங்கள் நடப்பட்டன. மதில்கள் எல்லாம் பழுது பார்க்கப் பட்டன. வழிகளிலெல்லாம் இரும்பு முள்ளாணி கம்பிகள் நடப்பட்டன.

இயற்கையாகவே பிரவேசிப்பதற்குக் கடினமாக இருந்த நகரத்துக்கு இன்



ளும் அதிகக் கடினமான பந்தோபஸ்து செய்யப்பட்டது. நகரத்திலிருந்து யாரும் முத்திரையிட்ட ராஜாவின் சீட்டின்றி வெளியே போகாமல் தடுக்கப்பட்டார்கள். அவ்வாறே நகரத்துக்குள் பிரவேசிப்பதற்கும் கடுமையான உத்தரவு. சேனைகளுக் கெல்லாம் சம்பளம் உயர்த்தப்பட்டது. கொடுக்க வேண்டிய ஊதியங்கள் எல்லாருக்கும் தாமதமின்றித் தாராளமாகத் தரப்பட்டது. சேனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆட்கள் எல்லாரும் நன்றாகப் பரிசோதிக்கப்பட்டார்கள். இவ்வளவு ஏற்பாடுகள் செய்திருந்த போதிலும் சால்வன் துவாரகை வாசிகளைப் பலவிதத்தில் இம்சை செய்தான். கிருஷ்ணன் வந்து நகரத்தில் ஏற்பட்ட கஷ்டங்களைப் பார்த்து மகா கோபங்கொண்டு சால்வன் மேல் படை எடுத்துச் சென்று தாக்கினான். அதன் பிறகே காட்டில் பாண்டவர்கள் இருந்த இடத்துக்குச் சென்றது.



ஆகாசவெடி

“ஒரு காலத்தில் ஸ்காட்லாந்தில் பணத்துக்குப் பதிலாக ஆணியைப் பரிவர்த்தனை செய்து வந்தார்கள்.”

—பத்திரிகைச் செய்தி.

இந்த ஆணித்தரமான யோசனை ஸ்காட்லாந்து வாசிகளுக்கு எப்படி உதித்ததோ?

★

“பத்திரிகைத் தொழில் ஓர் அற்புதம்!”

—திருவாங்கூரின் க. மி. ஆசிரியர்.

சில பத்திரிகைகளின் அரசியல் அபிப்பிராயங்களைப் படிக்கும்போது நமக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது.

★

“ராஜாஜி திட்டத்தை நான் ஆதரிப்பதாகப் பொதுஜனங்களிடை ஒரு தப்பெண்ணம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது தவறாகும்.”

—ஸ்ரீ கே. எம். முன்ஷி.

பொது ஜனங்கள் அவ்வாறு தப்பெண்ணம் கொண்டிருப்பதாக ஸ்ரீ முன்ஷி தப்பெண்ணம் கொண்டிருப்பதுதான் தவறாகும்.

★

“இந்திய சர்க்கார் சமீபத்தில் வெளியிடப் போகும் புதிய பத்து ரூபாய் நோட்டு மிக சௌகர்யமாகவும் கவர்ச்சிகரமாகவும் பளபளப்பாகவும் சிறந்த சித்திர வேலைப்பாடோடும் வெளிவருமாம்.”

—ஒரு செய்தி.

கேவலம் ஒரு பத்து ரூபாய்க்கா இத்தனை வேலை செய்திருக்கிறார்கள்?

★

“கார்ப்பொரேஷன் வேண்டுகோளுக் கிணங்கிச் சாக்கடைகள் அபிவிருத்திக்காக சர்க்கார் இரண்டு லட்ச ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள்.”

—சென்னைச் செய்தி.

பணப்பெருக்கத்தைக் குறைக்க பணத்தை லட்ச லட்சமாகச் சாக்கடையில் போடுவதும் ஒரு வழி போலும்!

அது ஒரு காலம்!



காலேந்து வருஷங்களுக்குமுன், தான். நீங்கள் எந்த விடுமுறைக்கும் சவுகரியமாகவும் அதிகச் செலவில்லாமலும் போகமுடியும். இப்பொழுது பிரயாணச் செலவு ஒன்றுக்கு நாலாகிவிட்டது. தாமதமின்றி டிக்கட்பெறும் காலமும் ஒன்று இருந்தது. இப்பொழுதோ அரைமணி நேரத்துக்கு மேலாக க்யூ நின்று டிக்கட்டு பெறவேண்டியிருக்கிறது; சார்ஜும் அதிகமாகி விட்டது. ஒரு அணாவுக்கோ அரை அணாவுக்கோ உங்களுக்கு வேண்டிய வேலைகளைச் செய்ய கூலிகள் தயாராக நின்றிருந்த காலமும் இருந்தது. இப்பொழுது ஆளைப்பிடிப்பதே கஷ்டம். உங்களிஷ்டப்படியே வண்டியும், வண்டியில் உட்காரும் இடமும் கிடைக்கப்பெறும் காலமும், இருந்தது. இன்று வண்டியில் நுழையமுடிந்தாலே அதிர்ஷ்டம்தான். பல தடவைகளில் ஏறிப்பார்க்க முடியாமலே போய்விடுகிறது. உள் நுழைய முடிந்தாலும், பல மணி நேரம் நிற்கவேண்டியும் நேரிடுகிறது. இந்த கலாட்டாவில் உங்கள் சாமான்களை இழக்க நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன், உங்கள் குடும்பத்தாரிடமிருந்தே பிரிந்து விடும்படி நேரிட்டாலும் நேரிடலாம். உங்கள் பெண்ஜாதி, மக்களுக்கு பிரயாணம் இன்று முன்போல சௌகரியமானதல்ல.

புத்தி சாலித்தனமான காரியத்தைச் செய்யுங்கள். சௌகரியமான காலம் வரும்வரை நீங்களும் உங்கள் குடும்பமும் ரயில்வே போக்குவரத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

பிரயாணத்தைக் குறையுங்கள்



முதல் வேலை

என். என்.

அன்றிரவு கந்தன் புறப்படும் பொழுது, அபசகுனம்போல் அஞ்சலை தடுத்தாள்.

"ஐயோ! இன்றுகூடவா நீ வெளியே போகவேண்டும்? குழந்தை கண்ணுசாமிக்கு ஜுரம் நெருப்பாகத் தகிக்கிறதே!...உடம்பைத் தொட்டுப் பாரேன்!...எனக்குக் கவலையாயிருக்கிறது. நீ இங்கேயே இருக்கமாட்டாயா?" என்று கண்களில் நீர் ததும்பக் கெஞ்சினாள் அஞ்சலை.

உண்மையில், அவன் மகன் கண்ணுசாமிக்கு அன்று காலையிலிருந்தே கடுமையான ஜுரம் அடித்துக் கொண்டிருந்தது. ஐந்து வயது கூட நிரம்பாத அக் குழந்தை காய்ச்சலின் வேகத்தைத் தாங்கமாட்டாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

தன் மகனின் உடம்பு நிலைமையை அறியாதவனல்ல கந்தன். அறிந்தும், அன்றிரவு வழக்கம்போல் தன் உத்தியோக நிமித்தம் கிளம்பத் தீர்மானித்தான். ஆம், கந்தன் திருட்டுத் தொழிலில்தான் ஈடுபட்டிருந்தான். ஐந்து வருஷங்களுக்கு முன்னால் அவன் ஒரு கண்ணியமான உத்தியோகத்திலிருந்தான் என்பது வாஸ்தவமே. அப்பொழுதுதான் அஞ்சலையைக் கல்யாணம் செய்து கொண்டான். வேலை போய் விடவே, கந்தன் பாடு திண்டாட்டமாகி விட்டது. ஜீவனத்திற்கு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கையில், துரதிர்ஷ்டவசமாக அவனுக்குச் சில போக்கிரிகளின் சகவாசம் ஏற்பட்டது. அதன் பயனாக, அவன் திருடத் தொடங்கி விட்டான்.

"புறப்படும் பொழுது தடுத்துத் தொலைக்காதே என்று எவ்வளவு தடவை உனக்குச் சொல்வது? இன்று நான் உருப்பட்டாற் போலத்தான்!" என்று முணுமுணுத்தான் கந்தன்.

"குழந்தை சாகக் கிடக்கிறான்; அதைப் பற்றிக் கொஞ்சங்கூடக் கவலையில்லாமல், நீ 'போகிறேன்' என்று சொல்கிறாயே!......குழந்தைக்கே ஒரு வேளை ஏதாவது ஆபத்து நேரிட்டால் எனக்குத் துணை யாரிருக்கிறார்கள்?" என்றாள் அஞ்சலை.

"குழந்தையிடம் எனக் கில்லாத அக்கறையா உனக்கு?...நாளைக்கு அவனுக்கு ஏதாவது மருந்து வாங்க வேண்டுமென்றாய், அதற்குக் காசு வேண்டாமா?" என்று சொல்லி விட்டு வெளியே சென்றான் கந்தன்.

2

அமாவாசைக்கு மறுநாளாதலால் எங்கும் காரிருள் சூழ்ந்திருந்தது. உலகமே நித்திரையில் ஈடுபட்டு மௌனத்தில் ஆழ்ந்திருந்தது. கந்தன் தெருக் கடைசியிலுள்ள ஒரு பெரிய வீட்டிற்கு வந்தவுடன் நின்றான். இருட்டாக இருந்த போதிலும், அவன் கண்களில், "டாக்டர் ரகுபதி" என்று எழுதப்பட்டிருந்த விளம்பரப் பலகை சுவரில் அடிக்கப்பட்டிருந்தது நன்றாகத் தெரிந்தது. டாக்டர் ரகுபதிக்கு நல்ல வரும்படியென்றும் அவர் மிகவும் நல்லவர் என்றும் கந்தன் அறிந்திருந்தான்.

அதிர்ஷ்டவசமாக, அவன் கண்ணில் ஒரு இரும்புக் குழாய் தென்பட்டது. அது மாடியிலிருந்து கீழே தரை வரையில் நீண்டிருந்தது. அதைப் பிடித்துக் கொண்டு ஏறி மாடியை அடைந்தான் கந்தன்.

அவன் எதிரில் முதன் முதலாகத் தோன்றிய அறையின் கதவுகள் அவனை வரவேற்பனவைபோல் திறந்து கிடந்தன. பூனைபோல் அடிமேலடி வைத்து அவ்வறைக்குள் நுழைந்து சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரையும் காணாமல் சற்றுத் தைரியமடைந்தவனாய், மேலும்

நடந்து சென்று எதிரிலிருந்த கதவை மெதுவாகத் திறந்தான். பெரிய ஹால் ஒன்று தென்பட்டது.

சாமான்களின்மீது தன் கவனத்தைச் செலுத்தினான். தங்கச் சங்கிலியுடன் கூடிய ஒரு சிறிய தங்கக் கைக் கடியாரம் கண்மூடித் திறக்கும் நேரத்திற்குள் மேஜையிலிருந்து அவன் சட்டைப் பைக்குள் சென்றது! அதைத் தொடர்ந்தாற்போல் ஒரு மணி பர்ஸ் அவன் சட்டைப் பைக்குள் மறைந்தது.

“மேஜைக்குள் என்ன இருக்கிறது பார்ப்போம்” என்று எண்ணிக்கொண்டே கந்தன் அதன் உறையைப் பிடித்து வெளியே இழுத்தான். அப்பொழுது, இடியோசை போன்று, வாசற் கதவு தட்டப்பட்டது. அதன் பின், “டாக்டர் ஐயா!...டாக்டர் ஐயா!” என்று யாரோ அலறியதும் அவன் காதில் விழுந்தது.

என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு விநாடி ஸ்தம்பித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான் கந்தன். பிறகு, சமாளித்துக்கொண்டு மின்னல்போல் பாய்ந்து எதிரிலிருந்த அலமாரியின் பின்னால் ஒளிந்து கொண்டான். “யாரது?” என்று கேட்டுக்கொண்டே டாக்டர் எழுந்து எலெக்ட்ரிக் விளக்குகளைப் பொருத்தினார். பிறகு, வாசற் கதவை யாரோ தட்டிக்கொண்டிருந்ததைக் கேட்டு நேராக ஓடினார்.



“இதுதான் சரியான சமயம்” என்று கந்தன் வெகு வேகமாக வந்த வழியாகவே சென்று, நொடிப் பொழுதில் மாடியிலிருந்து குழாய் மூலம் இறங்கி, இருளோடு மறைந்துவிட்டான்.

3

திரும்புகையில், வெகு ஜாக்கிரதையாக ஒருவர் கண்ணிலும் படாமல் சென்றான் கந்தன்.

வீட்டின் கதவு சாத்தப்பட்டிருந்தது. கதவை மெதுவாகத் தட்டி, “அஞ்சலை, அஞ்சலை!” என்று கூப்பிட்டான். பதில் ஒன்றும் வரவில்லை. ஆத்திரத்துடன் கந்தன் கதவை மறுபடியும் வேகமாகத் தட்டினான். அகஸ்மாத்தாக அவன் கை கதவிலிருந்த பூட்டின்மேல் பட்டது. அப்பொழுதுதான் உணர்ந்தான்—வீடு பூட்டப்பட்டிருந்தது என்பதை! “அஞ்சலையும் கண்ணுசாமியும் எங்கே? எங்கே போயிருக்கக் கூடும்?” என்று யோசித்துப் பார்த்தான்.

இந்தக் கேள்விகளுக்கு விடையளிப்பவள்போல் அஞ்சலையே அப்பொழுது பிரசன்னமானாள். அவள் தோளின் மேல் இருந்த துணிமூட்டை தன் மகன் கண்ணுசாமிதான் என்பதை உணர்ந்தான் கந்தன்.

“எங்கே போய்விட்டு வருகிறாய்?...... குழந்தைக்கு உடம்பு எப்படி யிருக்கிறது?” என்று ஆத்திரத்துடன் கேட்டான் கந்தன்.

அவனை விழுங்கிவிடுபவள்போல் ஒரு தடவை முறைத்துப் பார்த்துவிட்டு, அஞ்சலை கதவைத் திறந்து உள்ளே சென்று குழந்தையைக் கீழே படுக்க வைத்தாள். கந்தன் குடிசைக்குள் நுழைந்தான். அஞ்சலை கையிலிருந்த ஒரு சிறிய சாமான் என்ன வென்று கந்தன் கூர்ந்து கவனித்தான். அது ஒரு மருந்து சீசாவென்பதைத் தெரிந்து கொண்டான்.

“சொல்ல மாட்டாயா?.........குழந்தைக்கு ஏதாவது கோளாறு ஏற்பட்டதா?......எங்கே போயிருந்தாய்?” என்று கந்தன் மறுபடியும் ஆவலுடன் கேட்டான்.

“குழந்தைமீது நீ இவ்வளவு அன்புடன் கேட்கும்பொழுது நான் சொல்லாம லிருப்பேனா?......” என்று கூறி அவனை ஒரு கோபப் பார்வை பார்த்துவிட்டு, அஞ்சலை மேலும் சொன்னாள்:

"நீ வீட்டை விட்டுப் போன பத்து நிமிஷத்திற்கெல்லாம் குழந்தைக்குக் கை கால்கள் எல்லாம் நடுங்க வாரம்பித்தன. எனக்கு மிகவும் பயமாயிருந்தது. உன்னையும் காணோம்...... என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியில், பகவான்மேல் பாரத்தைப் போட்டுக் குழந்தையைத் தோளின் மேல் சாத்திக்கொண்டு நேராக டாக்டர் ரகுபதி அவர்களின் வீட்டிற்கு ஓடினேன்......"

"என்ன?...டாக்டர் ரகுபதியா?... மேலத் தெருவில் கடைசி வீடு தானே?..." என்று ஆத்திரத்துடன் கேட்டான் கந்தன்.

"ஏன்?...ஆமாம்!...அதே மாடி வீடு தான்!......ஆமாம்; அந்த டாக்டர் ஐயாவை உனக்கு எப்படித் தெரியும்?"

"அந்தக் கதையை அப்புறம் சொல்கிறேன். நீ உன் சமாசாரத்தை முதலில் தெரிவி."

"டாக்டர் ரகுபதியின் வீட்டில் நான் முன்பு வெகு நாள் வேலை செய்திருக்கிறேன். அவரைப்போன்ற தங்கமான மனுஷன் இந்த லோகத்திலேயே கிடையாது. அவருக்கு எவ்வளவு வரும்படி வந்தாலும், கொஞ்சங்கூட டாம்பீகம் கிடையாது. மிகவும் தயாள குணம் உள்ளவர்.

"நடுநிசியில் கதவைத் தட்டி, அவருடைய தூக்கத்தைக் கலைத்ததற்காக என்மீது கோபித்துக் கொண்டு, போகச் சொல்லிவிடுவாரோ என்று நான் பயந்தேன். அவரே மாடியிலிருந்து இறங்கி வந்து கதவைத் திறந்து என்னையும் குழந்தையையும் பார்த்தார். பிறகு, என்னைத் தன் பின்னால் வரச் சொல்லி விட்டு மாடிக்குப் போனார்.

"குழந்தையைக் காண்பித்தேன். அவர் வெகு நேரம் பொறுமையுடன் அதன் முதுகையும், மார்பையும், வயிற்றையும் குழாயை வைத்துப் பார்த்தார்.

"'நல்ல வேளையாக இப்பொழுது கொண்டு வந்து காண்பித்தாயே!...... இன்னும் ஆறு மணி நேரம் சென்றிருந்தால், குழந்தை பிழைப்பது கஷ்டமாகிவிடுமே!...... ஹூம் ...... இப்பொழுது ஒரு ஊசி போடுகிறேன்...கையில் மருந்தும் தருகிறேன் நாளைக்கு எல்லாம் சரியாகிவிடும்.........கவலைப்படாதே!......' என்று சொன்னார்.



"அப்பொழுது அவர் என் கண்களில் கடவுளின் அவதாரம்போல் தோன்றினார். அப்பொழுது எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருந்தது தெரியுமா?

"மருந்தைக் கலந்து கொண்டே, டாக்டர் என்னைப் பற்றி விசாரித்தார். நான் எல்லாவற்றையும் சொன்னேன். 'மிகவும் கஷ்டப்படுகிறேன்' என்று நான் சொன்னதைக் கேட்டவுடன், 'ஐயோ பாவம்!...... உனக்குச் செலவிற்கு ஏதாவது பணம் வேண்டுமா?... இரு, தருகிறேன்!' என்று சொல்லிக் கொண்டே, மேஜைக்குச் சென்று எதையோ தேடினார்.

"'நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி!...... இல்லாவிட்டால், சற்று முன்புகூட இங்கிருந்த மணிபர்ஸ் எங்கேயோ எப்படி மறைந்துவிடும்?......ஹூம்...... சரி...நாளைக்கு வா, தருகிறேன்!' என்று சொல்லி விட்டுக் கண்ணுசாமியின் இடது கையில் ஊசி போட்டார். பிறகு, ஒரு கண்ணாடி சீசாவில் இந்த மருந்தை ஊற்றிக் கொடுத்தார்.

"'மூன்று வேளைகள் மருந்தைக் கொடு......எல்லாம் சரியாகிவிடும்!... போய்விட்டு வா!... இருட்டில் ஜாக்

இரதையாகப் போ!' என்று விடை கொடுத்தனுப்பினார்......"

அஞ்சலை தன் வரலாற்றைக் கூறி முடித்துவிட்டு எதிரிலிருந்த கந்தனின் முகத்தைப் பார்த்தான்.

அவனைத் தூக்கி வாரிப் போட்டது!

கந்தன் அசைவற்றுப் பிரமை பிடித்தவன்போல் உட்கார்ந்திருந்தான். அவன் கண்களில் முத்துப்போன்று நீர் தேங்கி நின்றது.

"என்ன சங்கதி!... ஏன் இப்படி துக்கப்படுகிறாய்?..." என்று ஒன்றும் புரியாதவனாய்க் கேட்டான் அஞ்சலை.

"நான் மகா பாவி!... என் அருமைக் குழந்தைக்கு உயிரை யளித்த அந்தப் புண்ணியாத்மாவின் வீட்டிலேயே நான் கொள்ளை யடித்திருக்கிறேனே!...சரி... அஞ்சலை! சற்று நேரம் பொறுத்துக் கொள்...நான் ஒரு நொடியில் திரும்பி விடுகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே கந்தன் ஓடினான்.

அஞ்சலை கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தான்.

4

அன்றிரவு நடுநிசியில் அரைமணி நேரத்திற்குள், இரண்டாவது தடவையாகத் தன் வீட்டுக் கதவை யாரும் தட்டுவார்கள் என்று டாக்டர் ரகுபதி சிறிதேனும் எதிர்பார்த்திருக்கவில்லை!

அஞ்சலையை அனுப்பிவிட்டுக் கதவு களைத் தாளிட்டுத் திரும்பிப் படுக்கையின்மேல் 'அப்பாடா' வென்று சாய்ந்த ஒரு நாழிகைக்குள், மறுபடியும் அவர் வீட்டுக் கதவை யாரோ தட்டி, "டாக்டர் டாக்டர்!" என்று அழைக்கவே, அவருக்கு ஆச்சரியமாகத் தானிருந்தது. மறுபடியும் அஞ்சலையே வந்துவிட்டானோ வென்று சந்தேகித்துக்கொண்டு கீழே இறங்கி வந்து கதவைத் திறந்தார்.

மறு விநாடி வேரற்ற மரம்போல் அவர் காலடியில் விழுந்தான் கந்தன். டாக்டருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"நீ யாரப்பா?......எழுந்திரு!...... என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

"நீங்கள் என்னை மன்னிப்பதாகச் சொன்ன பிறகுதான் உங்கள் கால்களை விடுவேன், சொல்லுங்கள்!" என்றான் கந்தன்.

"இதென்னப்பா, உன்னை மன்னிப்பதாவது......? எதற்காக?......முதலில் நீ என் காலை விடு! ... எழுந்திருந்து விஷயத்தைச் சொல்" என்றார் டாக்டர்.

கந்தன் எழுந்திருந்து, தன் வரலாறு முழுவதையும் ஒன்று விடாமல் ஒப்புவித்தான். கடைசியில், தன் சட்டைப் பையிலிருந்த மணி பர்ஸையும், கடியாரத்தையும் எடுத்து அவர் கையில் கொடுத்தான். புன்னகையுடன் அவர் அவற்றை வாங்கிக் கொண்டார்.

"உன்னைப் பற்றி அஞ்சலை சொல்லிக் கேள்விப்பட்டேன். நீ வேலை யில்லாமல் திண்டாடுவதாகத் தெரிவித்தான்... உனக்கு ஒரு வேலை கொடுத்து விட்டால், அப்புறம் இந்தத் திருட்டுத் தொழிலில் இறங்க மாட்டாயல்லவா?" என்றார் டாக்டர்.

"சத்தியமாகச் சொல்கிறேன். இனித் திருடமாட்டேன்?"

"சரி...நாளை முதல் நீ இங்கேயே இருந்து எனக்கு வேண்டிய உதவியைச் செய்து கொண்டிருக்கலாம்... அஞ்சலையும் இந்த வீட்டிலேயே வேலை செய்யட்டும்! ... உன்னுடைய முதல் வேலை என்ன தெரியுமா? இதோ, இந்தக் கடியாரத்தையும், மணி பர்ஸையும் அவை இருந்த இடத்தில் கொண்டுபோய் வைத்து விட்டு வா!" என்றார் டாக்டர் ரகுபதி.



—ஆனந்தி.



மௌனப் பிள்ளையார்

[ஆசிரியர்: சாவி; பிரசுரம்: ஏ. வி. குப்புசாமி ஐயர் அண்டு பிரதர்ஸ் 14, பரோடா தெரு, மாம்பலம், சென்னை; விலை: ரூ. 1-12-0]

இந்த நூலுக்கு முன்னுரை எழுதியிருக்கும் "நாடோடி" இந்த நூலாசிரியரைப் பற்றிக் கூறுவதாவது:—

"நாங்கள் இருவரும் சேர்ந்து ஒரே வீட்டில் வசித்த காலத்தில் எங்கள் எல்லோரையும் ஏதாவது சொல்லிக் குலுங்கக் குலுங்க நகைக்க வைத்துக்கொண்டே யிருப்பார். வேறு ஒன்றும் அகப்படாவிட்டால், நாங்கள் வீட்டில் சாவியைத் தொலைத்து விட்டு 'சாவி எங்கே, சாவி எங்கே' என்று தேடிக் கொண்டிருக்கும் போதெல்லாம் 'இதோ நான் இருக்கிறேனே!' என்று எதிரே வந்து நிற்பார்."

இந்த "மௌனப் பிள்ளையார்" புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் "சாவி" ஏதாவது ரஸமாகச் சொல்லி நம்மைக் குலுங்கச் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

அதைக் காட்டிலும், இந்தப் புத்தகத்தின் அட்டையின்மேல் வெகு அழகாகக் காட்சி அளிக்கும் மௌனப் பிள்ளையார் "இதோ நான் இருக்கிறேன்" என்று கண்ணைச் சிமிட்டிக் கூறி நம்மைக் குலுங்கச் சிரிக்கப் பண்ணுகிறார்.

மேற்படி நூலின் முதல் பதிப்பு 1944-ம் வருஷம் ஜூலை மாதத்தில் வெளியாயிற்று. இது 1944-ம் வருஷம் ஆகஸ்டு மாதம். இந்த ஒரு மாதத்திற்குள் முதல் பதிப்பு முழுதும் செலவாகாமல் சில பிரதிகள் பாக்கி இருக்கின்றன வென்றால், அதற்குக் காரணம் இரண்டில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்:—தமிழ் நாட்டில் நகைச் சுவையுள்ளவர்கள் மிகக் குறைவாக இருக்கவேண்டும். அல்லது இந்த மாதிரி ஒரு புத்தகம் வெளியாகி யிருக்கிற விஷயம் தமிழ் மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப் படாமலிருக்க வேண்டும். முதல் காரணத்தை நாம் ஒரு நாளும் ஒத்துக்கொள்ள முடியாது! ஆதலின் இரண்டாவது காரணமாய்த்தான் இருக்கவேண்டும். அதையும் இப்போது போக்கி விட்டோமாதலால், பிரதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.



"முன்பு, கால் அரைக் கைச் சட்டை போட்டுக் கொண்டிருந்தேன்! இப்போது, கால் பேர் மனிதனை விட்டேனே இல்லேயோ, முழுக் கைச் சட்டை போட்டுக் கொள்கிறேன்!"

ஸ்டர்லிங் நிதி

[ஆசிரியர்: ஆர். வெங்கடராஜுலு; பிரசுரம்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை; விலை: ரூ. 1—12—0.]

பொருளாதார விஷயங்கள் எளிதில் புரியாதவைதான். ஆனால் கத்தரிக்காயைப் பற்றி எல்லோருக்கும் புரியும். ஆகவே கத்தரிக்காயிலிருந்து பொருளாதார விஷயத்துக்கு ஆசிரியர் வருகிறார்:—

"ஒரு மார்க்கட்டுக்குப் பத்துக் கூடை கத்தரிக்காய் வருகிறதென்று வைத்துக் கொள்வோம். அது தினசரி நிரந்தரமாக வந்துகொண்டிருக்கும் வரை விலையும் நிரந்தரமாயிருக்கும். அப்படியானால், 20 கூடை வந்தால் விலை மலிகிறது. ஐந்து கூடை வந்தால் விலை அதிகரிக்கிறது."—இவ்விதம் கத்தரிக்காய் மூலம் தேவைக்கும் விலைக்கும் உள்ள சம்பந்தத்தை எடுத்துச் சொல்லுகிறார்.

இதைப் போலவே, தக்க உதாரணங்கள் மூலமாக, பணப் பெருக்கம், ஸ்டர்லிங் நிதி, செலாவணி விகிதம் முதலிய பொருளாதார விஷயங்களைக் கதை சொல்வதுபோல் ஆசிரியர் சொல்லிக்கொண்டு போவதனால், அவை "புரிகிறேன்! இதோ புரிகிறேன்!" என்று கத்திக்கொண்டு வந்து புரிகின்றன.

உபநிஷத்து ரகசியம்

[ஆசிரியர்: யோகி சுத்தானந்த பாரதி; பிரசுரம்: பாரத சக்தி நிலையம், புதுச்சேரி; விலை: ரூ. 1—8—0]

ஞானக் கருங்கமாவே உபநிஷத்து வாக்கியங்களைப் பின்பற்றினால் அவை ஆதர்ச உலகத்துக்கு வழிகாட்டு மென்பதில் இரகசியம் ஒன்றுமில்லை. ஞான மார்க்கத்தை அடைந்து நிற்கும் அஞ்ஞான இருளை உபநிஷத்து என்னும் சுடர் விளக்கின் ஒளிகொண்டு அகற்றி, பிரம்மத்தில் ஒன்றுபட்டு நிற்க முயல வேண்டும். அதற்குரிய சாதனம் உபநிஷத்துக்களில் தான் அடங்கியிருக்கிறது.

"மனிதா, உள் விழித்தெழு. உன்னை யறி; நீ பிரம்மம்; அதுவே அனைத்தும்: அதுவே அணுவிலும் அணுவாய், மகத்திலும் மகத்தாய் யாங்கும் விரிந்து பரவியிருப்பது: அதன் மயமே உலகம். அது உன் இதயக்குகையில் விளங்குகிறது. அது சுத்தான்மா, அதுவே நான் என்பது: தன் அறிவே சுத்தான்மா: அதன் விரிவே அனைத்தும். எழு. விழி. அறி. இன்புற்றிரு."

இது தான் உபநிஷத்தின் முழக்கம். சுத்தானந்த பாரதியார் தமது கனி பொங்கும் நடையில் உபநிஷத்து ரகஸியத்தை எழுதியிருக்கிறார். இந்த உபநிஷத்து ரகஸியத்தை எல்லோரும் படிக்கும்படி நாமும் பகிரங்கமாய்ச் சிபார்சு செய்கிறோம்.

பசி வாழ்க!



சாவி

[குறிப்பு:—பசியோடு இருக்கும் நேயர்கள் தயவுசெய்து சாப்பிட்டு விட்டு இந்தக் கட்டுரையைப் படிக்கவும்.]

ஐயா, திருவள்ளுவரே! உமக்குப் பசி என்றால் என்னவென்று தெரியுமா? சாப்பாட்டின் அருமை பெருமை தெரியுமா? அல்லது சில வித்வான்களின் சங்கீதத்தை ரஸிப்பதிலுள்ள கஷ்டம்தான் தெரியுமா? இதெல்லாம் தெரிந்திருந்தால்,

"செவிக் குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்"

என்று பாடி யிருப்பீரா? பசியின் கொடுமையையும் சாப்பிடுவதால் ஏற்படும் ஆனந்தத்தையும் அறிந்திருந்தால் தாங்கள் ஒரு நாளும் அவ்வாறு பாடியிருக்க மாட்டீர்கள். ஆயுள் பூராவையும் குறள் இயற்றுவதிலேயே செலவழித்து விட்ட தங்களுக்குப் பசியைப் பற்றிச் சிந்திக்க எங்கிருந்து நேரம் இருந்திருக்கப் போகிறது? பசியின் சக்தி என்னவென்று தெரிந்திருந்தால் மேற்படி குறளை,

"வயிற்றுக் குணவில்லாதபோழ்து
சிறிது செவிக்கும் ஈயப் படும்"

என்று மாற்றிப் பாடியிருக்க மாட்டீரா?

★

திருவள்ளுவர் என்ன? நம்மில்கூட அநேகம் பேர் பசியின் அருமை தெரியாதவர்களா யிருக்கிறோம். யாராவது பட்டினி கிடந்தால் அதைப் பார்த்து, "ஐயோ, மனுஷர் பட்டினி கிடந்து கஷ்டப்படுகிறாரே!" என்று வருத்தப்படுகிறோம். பட்டினி கிடந்து பிறகு பசி எடுத்துச் சாப்பிடுவதிலுள்ள ஆனந்தத்தை அறிந்திருந்தால் இப்படி நாம் வருத்தப்பட வேண்டிய அவசியமே இல்லை. "நிழலருமை வெயிலிலே" என்றபடி 'விருந்தின் சுகம் பட்டினியிலே' தான் இருக்கிறது! ஏகாதசியின் மகிமை துவாதசி யன்றுதான் தெரிகிறது!

ஒரு விருந்தை ரஸித்துச் சாப்பிட வேண்டுமானால் அதற்கு நல்ல விருந்தாகத் தயார் செய்து விட்டால் மட்டும் போதாது. காலையில் பட்டினியோடு நன்றாக உழைக்க வேண்டும். பிறகு ஐந்தாறு மைல் தூரம் நடந்து போய் வரவேண்டும். அதற்கப்புறம் உங்களுடைய துணிகளை யெல்லாம் நீங்களே கிணற்றடிக்கு எடுத்துக் கொண்டு போய் நன்றாகத் துவைக்க வேண்டும். பிறகு ஸ்நானம் செய்து விட்டுச் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு நல்ல பசியோடு வாழையிலையின் முன் அமர வேண்டும். ஆஹா! அப்போது இலையிலுள்ள தயிர்ப் பச்சடியையும் ஆமை வடையையும் பார்க்கும் போது உங்களுக்கு ஏற்படும் ஆனந்தத்திற்கு



ஈடு சொல்ல வேண்டுமானால் அந்த ஆனந்தத்தைத்தான் சொல்ல வேண்டும்!


என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கிறார். நான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்பதில் அவருக்கு என்ன தான் கவலையோ தெரியவில்லை. என்னைச் சந்திக்க நேரும் போதெல்லாம், "உனக்கு எப்போது கல்யாணம்?" என்று கேட்டுப் பிராணனை வாங்கிக் கொண்டே இருந்தார்.

அவருடைய உபத்திரவம் தாளாமல் நான் ஒரு நாள் அப்படியே செய்து விட்டேன். கல்யாணமில்லை; விருந்தைத்தான் சொல்லுகிறேன்! அவரை ஒரு நாள் என் வீட்டுக்கு அழைத்துப் போய் முதல்தரமான விருந்து ஒன்று நடத்தி, "இனிமேல் என் கல்யாணத்தைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்; போய்வாரும்" என்று கூறி அனுப்பினேன்.

"நல்ல விருந்துச் சாப்பாடாகச் சாப்பிட்டு, சந்தன தாம்பூலத்துடன் குஷியாகப் பாயில் புரண்டு கொண்டிருப்பதில் இருக்கும் ஆனந்தம் சொர்க்க லோகத்திலும் கிடையாது!" என்பது மேற்படி நண்பரின் அபிப்பிராயம்.

★

பசியோடு இருக்கும் ஒருவனுக்குச் சாப்பிட்ட பிறகு உலகமே பிரகாசமடைகிறது. பரம திருப்தியுடன் வயிறு நிறைய உண்ட பிறகுதான் பக்கத்திலுள்ளவர்களிடம் பிரியமாகப் பேசத் தோன்றுகிறது.



"எனக்கும் அப்படித்தான். நான் பசியோடு இருக்கும் சமயத்தில் தொட்டிலில் அழுது கொண்டிருக்கும் குழந்தையின் தீனக் குரலும் பின் கட்டில் கத்திக் கொண்டிருக்கும் பூனையின் பரிதாபப் பார்வையும் என்னைப் பரமவேதனைக் குள்ளாக்குகின்றன. பசியை மறப்பதற்காகப் புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு படிக்கிறேன். புத்தகத்தில் ஒரு வரி கூட ஓடுவதில்லை. அப்படி ஏதேனும் ஓடினாலும், அதில் வரும் கதாநாயகன் பேரிலும் மற்றுமுள்ள கதா பாத்திரங்களின் மீதும் என்னையறியாமல் கோபம் உண்டாகிறது. கதாநாயகன் காதலியைப் பிரிந்து தவிக்கும் சோக கட்டத்தில் ஏன் இந்தப் புத்தகத்தை எடுத்தேன் என்று நானும் தவிக்கிறேன். கதாநாயகி காதலனை நினைத்து அழுகிற சமயத்தில் 'இப்படியும் ஒரு அசடு உண்டா?' என்று புத்தகத்தைத் தூக்கி எறிகிறேன்.

ஆனால் நன்றாக வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டுக் கட்டிலில் குஷியாகச் சாய்ந்து கொண்டிருக்கும் சமயத்திலோ, பூனை கத்தினால் அதை அழைத்து அதன் முதுகைத் தடவி 'ஒரு ஷொட்டு'க் கொடுத்தனுப்புகிறேன். குழந்தை அழுதால் ஒரு தாலாட்டுப் பாடுகிறேன். வயிறு நிறைய ஆகாரம் இருக்கும்போது பக்கத்து வீட்டு அப்பு ஜூரிஜில் கீச்சுக் குரலைக்கூடச் சகித்துக் கொள்கிறேன். பிச்சைக்காரர்களின் தீனக் குரலில் பரவசமடைந்து, "போய் வாருங்கள்" என்று சந்தோஷமாகச் சொல்லி அனுப்புகிறேன். என் வீட்டுக்கு வந்துள்ள மனைவியைச் சேர்ந்த பந்துக்களிடம் அன்பாகப் பேசுகிறேன். புஸ்தகத்தைப் படிக்கும்போது கதாநாயகனும் காதலியும் சேர்ந்து பிதற்றும் காதல் வார்த்தைகளை ரஸிக்கிறேன். தமிழ் டாக்கிகளில் வரும் ஆபாசக் காட்சிகளைக்கூடச் சகித்து மன்னித்து விடுகிறேன். சில அரசியல் வாதிகள் விடும் அபத்த அறிக்கைகளைக் கண்டு பச்சாதாபப்படுகிறேன். ஜின்னாவின் ஜுரம் இறங்கிப் போகவேண்டுமே என்று பிரார்த்தனை செய்து கொள்கிறேன். சென்னையில் கொசுக் கடியையும் லண்டனில் பறக்கும் குண்டுகளின் உபத்திரவத்தையும் கூடப் பொறுத்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

"அன்னம் பிராணன்" என்று தெரியாமலா வேதகோஷம் முறையிடுகிறது? எனவே, இவ்வளவு மகிமை வாய்ந்த சாப்பாடு தயாராகும் சமையலறையை நான் கோயிலாகவும், அதைத் தயாரித்து அளிக்கும் மனைவிமார்களை அந்தக் கோயிலில் தெய்வங்களாகவும் (சமையல்காரனாயிருந்தால் கோயிலின் குருக்களாகவும்) மதிக்கிறேன். இதற்கெல்லாம் மூலகாரணம் என்ன? பசிதானல்லவா?

ஆகையால், பசியே! நீ வாழ்க; நீ என்றென்றும் வாழ்க. எல்லா இடங்களிலும் அமோகமாய் வாழ்க! ஆனால் வங்காளத்தை விட்டு மாத்திரம் ஒழிக!



"நாட்டுப்புறத்தான் (ரேடியோவைச் சுட்டிக் காட்டி):—ஏன் இதுக்கு நாலு குழாய் வச்சிருக்காங்க?

பட்டினவாசி:—ஒரு குழாய் பாட்டுக்காரருக்கு. ஒன்று பிடில்காரருக்கு; இன்னொன்று மிருதங்கக்காரருக்கு! —சுந்தர்.

பெரியவாள் கதை

சாவைச் சிரித்தாள்!

ஸ்ரீ சுத்தானந்த பாரதி

ராஜாகான் குதிரை பஞ்ச கல்யாணி வகை. அது மிக்க நன்றியுள்ள குதிரை. ராஜாகான் உறங்கினால் அது காவலிருக்கும்; வாலால் ஈயோட்டும். அவன் உருத்து பேசினால் அறிந்து நடக்கும். அந்தக் குதிரை போனது அவனுக்குக் கையொடிந்தது போலாயிற்று.

அஞ்சலிக்கு ஜகவீரன் மூத்த பிள்ளை. அவனை அவள் வீர தீரனாகவே பயிற்றினாள். அவன் நேருக்கு நேராக வாள் பிடித்தால் ஒரு மூச்சுப் பார்ப்பான். ஆனால் வஞ்சகச் சூழ்ச்சியை எப்படி எதிர்ப்பது?

ஒரு நாள் ஜகவீரன் வேட்டையாட அக் குதிரை மேல் ஏறிச் சென்றான். நல்ல வேட்டை கிடைத்தது. காட்டில் உணவு கொண்டு, அவன் சிறிது இளைப்பாறின சமயத்தில் எதிரிகள் வஞ்சகமாக வந்து மெல்லக் குதிரையை அவிழ்த்துக்கொண்டு பசக்கென்று ஏறித் தாவிப் பறந்தனர். ஜகவீரன் பகைவரைத் துரத்தினான். பகைவர் ஏராளம். ஜகவீரன் முண்டி முரண்டிப் பார்த்து விட்டு வந்து சேர்ந்தான்.


“தோற்றாயா? நீ என் மகனா? நானாயிருந்தால் உயிரைக் கொடுத்தாவது குதிரையைக் கொண்டு வந்திருப்பேன். தோல்வி கொண்டு மீளேல்.........என்னிடம் பாடங் கற்றுக்கொள்” என்று கூறிப் புறப்பட்டாள் அஞ்சலி. அவள் நேராகத் திண்டுக்கல் வந்து குதிரையை மீட்டு வந்தாள்.

ராஜாகான் திப்புவிடம் “இந்தப் பெண் ராக்ஷஸி. இவள் இருக்கு மட்டும் ஆபத்துத்தான்” என்று கோளேற்றி விட்டான். திப்பு கோபவெறி கொண்டு பலமான படை நடத்திப் பாஞ்சாலங் குறிச்சியை வளைத்தான். கணவனுடன் மனைவி பகைவரைக் குத்தித் தள்ளினாள். இரண்டு நாள் கொடும் போர் நடந்தது. மூன்று நாள் திப்புவின் குண்டுமாரி கோட்டையைத் தகர்த்தது. பகைவர் உள்ளே புகுந்தனர். அஞ்சலி உடனே அந்தக் குதிரையை ஊருக்கப்புறம் ஒரு காட்டிற்கனுப்பி விட்டுக் கணவனுடன் மாறு வேடம் பூண்டாள்.

காலையில் அவர்கள், ஒரு காட்டில் உணவு கொண்டபோது பகை ஒற்றர் கண்டு கொண்டனர். பெரிய சேனை இவர்களை வளைந்தது. கணவன் அஞ்சினான். அஞ்சலி, “வீரமாகச் சாவோம்” என்றாள். ஒரு வெறி நகையுடன் பிடித்தாள் வாள்; கணவனைப் பகைவர் அணுகாமல் பாதுகாத்துக் கொண்டே பகைவருடன் வாட்போர் செய்து பலரை வீழ்த்தினாள். இதற்குள் இன்னும் பலமான சேனை சூழ்ந்தது.

அஞ்சலி “நாதா! துணிவு கொள்ளுங்கள்; நானும் துணிந்தேன்” என்றாள். நம்பிக்கையான வீரனிடம், “எங்கள் உடலை உடனே ஜகவீரனிடம் ஒப்பிக்க வேண்டும்” என்றாள். சாவைச் சிரித்தாள்; கணவனும் மனைவியும் ஆனந்தத்துடன் சாவைத் தழுவினார்கள். இருவர் ஆவியும் சேர்ந்து வீரவிண்ணடைந்தது. அச்சமயம் ஜகவீரன் படை கொண்டு வந்தான். பகைவரை வென்றான். அதே குதிரையில் தாய் தந்தையர் உடல்களை ஏற்றித் திரும்பி, ஜயக்கொடி நாட்டி ஆண்டான்.

ஆவி பெரிதன்றே ஆக்கை பெரிதன்றே
பாவிப் பகைவர் பழிப்பின்றி — சாவைத்
துரும்பென்ற வீரத் துணிவை பணியும்
இரும்பு மனம் பெரிதென்றேன்.





சிறந்த சமையற்காரர்கள் இப்பொழுது வேண்டுவது

காமதேனு

சாதாரண தினப்படி சமையலாக இருந்தாலும் சரி அல்லது விசேஷ விருந்துகளுக்கான பலகார வகைகளானாலுஞ்சரி, அவற்றின் இயற்கைச் சுவை மாறாமல் தயாரிக்க சிறந்த சமையற்காரர்கள் காமதேனுவையே விரும்புகிறார்கள். எந்த உணவையும் மணம் மாறாமல் தயாரிக்க உதவுவது காமதேனு. ஏனெனில் அது சுவையற்று மணமற்று இருப்பதால் உணவின் இயற்கை மணத்தைக் கெடாமல் காக்கிறது. மேலும் அதில் வைடமின்கள் மிகுந்திருப்பதால் ஆரோக்கியம் அளிக்கவல்லது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு: நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ள தாயினும் விலையில் மட்டும் மலிவு.



சிறந்த சமையற்காரர்கள் வேண்டுவது

காமதேனு

வனஸ்பதி

தயாரிப்பவர்கள்:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.

மேட்டூர்டாம் தென்னிந்தியா

KVK.3TM.

மானேஜிங் ஏஜண்டுகள்:
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.,
திருச்சிராப்பள்ளி.

சோல் விற்பனை ஏஜண்டுகள்:
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபூடர்ஸ்
லிட்., 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.



போலீஸ் பூனை

விந்தன்

நாட்டில் உணவுக் கட்டுப்பாடு செய்ததைப் பார்த்துவிட்டு, காட்டிலும் சிங்க ராஜா உணவுக் கட்டுப்பாடு செய்து விட்டார். "கட்டை இல்லையே!" என்ற கவலை மட்டும் மிருகங்களுக்கு இல்லை. ஏனெனில், அவை எதையும் வேகவைத்துத் தின்பதில்லை யல்லவா? ஆனால் உணவு போதாத கஷ்டம் மட்டும் நம்மைப் போல் அவைகளுக்கும் இருந்தது.

அந்தக் காட்டில் வசித்து வந்த ஒரு குரங்குக்கு உணவுக் கட்டுப்பாட்டின் படி வேளைக்கு இரண்டே இரண்டு வாழைப் பழங்கள் தான் கிடைத்து வந்தன. அது அந்தக் குரங்குக்குப் போதவில்லை. ஆகவே, அது கட்டுப்பாடு இல்லாத அடுத்த காட்டுக்குச் சென்று, ஒரு குலை வாழைப் பழத்தைத் திருட்டுத்தனமாக வாங்கிக் கொண்டு வந்தது.

வேறு யாரும் அடுத்த காட்டிலிருந்து அப்படி உணவுப் பொருட்களைத் திருட்டுத் தனமாக எடுத்துக் கொண்டு வர முடியாது. ஏனெனில், சிங்க ராஜாவின் ஆட்கள் அவர்களைப் பிடித்துக் கொண்டு போய் தண்டனைக் குள்ளாக்கி விடுவார்கள். குரங்கை அப்படி யாரும் லேசில் பிடித்துவிட முடியாது. ஏன் தெரியுமா? அந்தக் குரங்கு போலீஸ் வேலை பார்த்து வந்ததுதான் அதற்குக் காரணம்.

வழியில் சென்று கொண்டிருந்த ஒரு பூனையின்மீது அந்தப் போலீஸ் குரங்கின் பார்வை விழுந்தது. அதற்குக் காரணம், அந்தப் பூனையின் கையிலிருந்த பால் செம்புதான்.

"ஓய்! அந்தச் செம்புக்குள் என்ன?" என்று குரங்கு பூனையை அதட்டிற்று.

"ஒன்றுமில்லை; பால் வாங்கிக் கொண்டு போகிறேன்."

"உழக்குத் தினசரி இரண்டு ஆழாக்குப் பால்தானே? இந்தச் செம்பில் இருக்கும் பாலைப் பார்த்தால் இரண்டு படி இருக்கும்போலிருக்கிறதே!"

"ஆமாம், உமக்குத் தினசரி நாலு வாழைப்பழங்கள் தானே? இத்தனை வாழைப்பழங்கள் ஏது?"

"ஏது, ரொம்ப அதிகப் பிரசங்கியாயிருக்கிறாயே! நான் போலீஸ்காரன் என்று தெரியவில்லையா?"

"தெரிகிறது; நானும் போலீஸ்காரன்தான்!"

"என்ன! நீயும் போலீஸ்காரனா? 'டிரஸ்' போட்டுக்கொண்டு வந்திருக்கக் கூடாதோ?"



"டிரஸ் போடாமல் வந்ததினால்தான் இந்தத் திருடு கிடைத்தது!"

"எந்தத் திருடு?"

"ஏன், உன் வாழைப் பழத் திருடுதான்!"



"பைத்தியமா உனக்கு? வழியில் ஒரு குரங்கிடமிருந்து இந்தப் பழங்களைப் பறிமுதல் செய்துகொண்டு வருகிறேன். அந்தக் குரங்கு ஓடிவிட்டது!"

"ஓஹோ! நானும் அப்படித்தான் இந்தப் பாலைப் பறிமுதல் செய்து கொண்டு வருகிறேன். வாரும், சிங்கராஜாவிடம் கொண்டு போய்க் கொடுப்போம்" என்றது பூனை.

இதைக் கேட்ட குரங்கு விழித்தது. வழியே சென்ற பூனையிடம் எதற்காக வம்புக்குப் போனோம் என்று அது நினைத்தது. "அங்கிருந்து பறிமுதல் செய்து கொண்டு வருகிறேன்!"—"இங்கிருந்து பறிமுதல் செய்துகொண்டு வருகிறேன்!" என்று இதுவரை அந்தப் போலீஸ் குரங்கு எத்தனையோ பேரை ஏமாற்றியிருக்கிறது. ஆனால் இந்த மாதிரி ஒரு போலீஸ் பூனையிடம் அது எப்பொழுதும் அகப்பட்டுக் கொண்டதே இல்லை.

வேறு வழியில்லாமல் பூனையைத் தொடர்ந்து குரங்கும் சிங்கராஜாவின் அரண்மனையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அரண்மனை நெருங்க நெருங்க அதற்கு ரொம்ப ரொம்பப் பயமாயிருந்தது. "போலீஸைச் சேர்ந்த நீயே இப்படிச் செய்தால், சாதாரண மிருகங்கள் ஏன் செய்யாது?" என்று சிங்கராஜா கேட்பாரல்லவா? ஆகவே, அது போலீஸ் பூனையிடம் உண்மையைச் சொல்லித் தன்னை மன்னித்து விடும்படி வேண்டிக் கொள்வதென்று தீர்மானித்தது.

"ஐயா, பூனையாரே! உண்மையைச் சொல்லி விடுகிறேன்; என்னை மன்னித்து விடுகிறீர்களா? எனக்கு 'ரேஷன்' திட்டப்படி வேளைக்கு இரண்டே இரண்டு வாழைப்பழங்கள் கொடுப்பது போதவில்லை. ஆகையால் அடுத்த காட்டுக்குச் சென்று இந்த வாழைப் பழங்களைத் திருட்டுத்தனமாக வாங்கிக்கொண்டு வருகிறேன். இந்த விஷயம் சிங்கராஜாவுக்குத் தெரிந்தால் என்ன ஆகும் தெரியுமா?" என்று குரங்கு பூனையைப் பார்த்துப் பரிதாபத்துடன் சொல்லிற்று.

அதைக் கேட்ட பூனை, "அட, பாவி மனுஷா! இந்த உண்மையை முன்னமேயே சொல்லியிருக்கக் கூடாதா? நானும் உன்னைப் போல்தான் வாங்கி வருகிறேன்! இப்பொழுது உனக்குப் பயந்துகொண்டு நான் செம்பிலிருந்த பாலையெல்லாம் பரம ரகசியமாகக் கீழே ஊற்றி விட்டேனே!" என்று சொல்லி வருந்திற்று.

"ஐயையோ! சரி, போனால் போகட்டும். அந்தப் பாலைக் கவிழ்த்த வருத்தத்தை இந்தப் பழத்தைச் சாப்பிட்டாவது தீர்த்துக் கொள்ளும்!" என்று குரங்கு பூனைக்கு இரண்டு வாழைப் பழத்தைப் பிய்த்துக் கொடுத்தது.

போலீஸ் பூனையும் அதை வாங்கிச் சாப்பிட்டுத் திருப்தியடைந்தது.



காலக்ஷேபம்

ஒரே ஒரு தப்பு

முதலாளி:—ஓய்! உமக்கு ஐந்து ரூபாய் சம்பளம் உயர்த்தியிருக்கிறேன். இந்த ஒரு வருஷம் நன்றாக வேலை செய்திருக்கிறீர். இதுவரையில் நீர் ஒரு தப்புக் கூடப் பண்ணினது கிடையாதே?

குமாஸ்தா:—ஒரே ஒரு தப்பும் பண்ணி விட்டேன்.

முதலாளி:—என்ன அது?

குமாஸ்தா:—குறைந்த பக்ஷம் பத்து ரூபாயாவது சம்பளம் உயர்த்துவீர்கள் என்று எண்ணிவிட்டேன். —கே. ஏகாம்பரம்.

நல்ல வழி

எஜமான்:—அடே! முனியனுக்குக் கடன் கொடுத்தாயே, அவன் திருப்பித் தருகிற ஆசாமிதானா?

வேலைக்காரன்:—நாசட்டைப் போராஞ்சாமி, அதுக்கெல்லாம் எனக்கு வழி தெரியும்.

எஜமான:—என்ன வழிடா அது?

வேலைக்காரன்:—அவன் அடுத்த தடவை கடன் கேட்கும்போது இந்த ஒரு ரூபாயைக் கழிச்சிட்டுச் சொச்சத்தைக் குடுப்பேனுங்க.

—தி. அரசமணி.

சரியான பதில்

உபாத்தியாயர்:—பையன்களே! உங்களில் எத்தனை பேர் சுவர்க்கலோகம் போக விரும்புகிறீர்கள்?

வகுப்பிலுள்ள சிறுவர்களுள் ஒருவனைத் தவிர பாக்கி எல்லோரும் கைதூக்கினார்கள்.

உபாத்தியாயர் (கை தூக்காத பையனைப் பார்த்து):—ஏன் நீ சுவர்க்கலோகம் போக விரும்பவில்லையா?

பையன்:—நான் போகமாட்டேன், ஸார்! பள்ளிக்கூடம் விட்டதும் எங்கம்மா என்னை நேரே வீட்டுக்கு வரச்சொல்லி இருக்கிறாள்!

—ஆர். பழனிசாமி.

அறிமுகம்

வாதியின் வக்கீல்:—நீர் மடையர்.

பிரதிவாதியின் வக்கீல்:—நீர் ஒரு முட்டாள்.

ஜட்ஜு:—சரி: ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொண்டாகிவிட்டது. இனிமேல் கேஸை ஆரம்பிக்கலாம்.

—சி. ஆர். ஸ்ரீநிவாஸன்.

வாஸ்தவம்தான்!

ஓர் ஆபீஸ் மானேஜர் நாலைந்து தரம் மணி அடித்து வேலையாளைக் கூப்பிட்டார். அப்புறம் சாவகாசமாக அவன் வரவும், அவர், "இத்தனை நாழி எங்கேயடா போயிருந்தாய்?" என்று அதட்டினார்.

"ஓரிடமும் போகவில்லை. மணிச் சத்தம் கேட்டு ஓடிவரும் பொழுது மாடிப் படியில் சறுக்கி விழுந்துவிட்டேன்."

"அப்படியானால் நீ இன்னும் சீக்கிரமாக அல்லவா வந்திருக்க வேண்டும்!"

—டி. எம். கனகசபை.

கால வித்தியாசம்

செட்டியார்:—என் மகன் சுருட்டுக் குடிக்கப் பழகி விட்டான்.

நண்பர்:—என் மகன் அதைக் கண்ணாலும் கூடப் பார்க்க மாட்டான்.

செட்டியார்:—ஆனால் காப்பிப் பழக்கமாவது இருக்குமே?

நண்பர்:—அதுவும் கிடையாது. குடித்தால் பசும்பால் குடிப்பான்.

செட்டியார்:—அப்படியென்றால் ரொம்ப சமத்து தான். வயசென்ன ஆகிறது?

நண்பர்:—பிறந்து இருபது நாளாச்சு.


—எஸ். நித்தாரப்பன்.

தவறுதல்

இன்ஸ்பெக்டர் (ஒரு பையனைப் பார்த்து):—இஞ்சி எப்படியிருக்கும்?

பையன்:—சர்க்கரையைப்போல் புளிப்பாயிருக்கும்.

இன்ஸ்பெக்டர் (உபாத்தியாயரைப் பார்த்து):—நீர் பிள்ளைகளுக்குப் பொது விஷயங்களைப் போதிக்கிறதில்லையோ?



உபாத்தியாயர்:—போதிப்பதுண்டு. பையன் தவறுதலாய் வெங்காயத்தை நினைத்துக் கொண்டு சொல்லி விட்டான்!

—டி. ஜி. மணியம்.

சொல்லும்,
செயலும்.

கூட்டு முன்னேற்றம்
வழங்குவதாக ஜப்பா
னியர் கூறுகிறார்கள்.
அவர்களால் நேரு
வது கொலையும்,
கொடுமையும்,
கொள்ளையும், நாசமும்.
சென்ற 7 வருஷங்களாக
சீனாவின் துயர மிக்க
அனுபவம் இதுதான்.

வெற்றி வழியே விடுதலை

1022 TM

கடைசியில் ஒரு நாள்

பகீரதன்

"எந்நேரம் பார்த்தாலும் எதை யாவது எழுதி அனுப்பிக்கொண்டே இருக்கிறீர்களே! விளுகத் தபால் காரன் பிழைக்கிறான். அவ்வளவுதான்!" என்று சற்றுக் கடுமையாகவே சொன்னாள் என் மனைவி. (நிஜமாகவே எனக்கு மனைவி இருக்கிறாள் என்று நினைக்கா தீர்கள். கட்டுரைக்காக எழுதுகிறேன்.)

அவள் அப்படிக் கடிந்து கொண்டது ஒரு விதத்தில் சரியே. ஏனெனில் நான் 'ஆனந்த சோகம்' பத்திரிகையை மூற்றுகை யிட்டுக் கொண்டிருந்தேன். நான் என்ன எழுதி அனுப்பினாலும் சரி, உடனேயே திரும்பி வந்துவிடும். கூடவே "இதைப் பிரசுரிக்க முடியாத தற்காக வருந்துகிறோம்—கிருஷ்ணசாமி (ஆசிரியருக்காக") என்று உதவி ஆசிரியர் கடிதமும் வரும்.

கடைசியில் ஒரு நாள் கதையை ஆசிரியரிடமே நேரில் கொடுப்பது என்று சென்றேன்.

மனத்திற்குள் 'திக் திக்' என்று அடித் துக்கொண்டே ஆசிரியரிடம் என் கதை யைக் கொடுத்தேன்.

"தயவு செய்து இந்தக் கதையைப் பற்றிய தங்கள் தீர்ப்பை இப்பொழுதே சொல்ல வேண்டும். அதற்காகவே நான் கடலூரிலிருந்து நேரே வந்திருக் கிறேன்" என்றேன்.

ஆசிரியர் உடனே "கிருஷ்ணசாமி!" என்றார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "தயவு செய்து நீங்களே பார்த்துச் சொல்லுங்கள்!" என்று கெஞ்சினேன்.

'இல்லே, அவர் பார்த்தாலேபோதும்' என்றார் ஆசிரியர். அப்போது பக்கத்து அறையிலிருந்த கிருஷ் ணசாமி முகத்தில் அசடு வழிய உள்ளே வந்தார்.

"இந்தக் கதையை உடனே படித்துப் பார்த்து அபிப்பிரா யம் சொல்லும்" என்று கதையை அவரிடம் கொடுத்தார் ஆசிரியர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு கிருஷ்ண சாமி திரும்பிவந்தார். விளக்கெண்ணெய் சாப்பிட்ட மாதிரி இருந்த அவர் முகத் தைப் பார்த்ததும் 'எனக்குப் பகீர் என்றது.

"கதை எப்படி?" என்று கேட்டார் ஆசிரியர்.

"ஆரம்பம் ரொம்ப மோசம். நடுவில் ஒரே குழப்பமா யிருக்கிறது. முடிவு முடிவாகவே தோன்றவில்லே!"

"நடை?"

"சகிக்கவில்லே!"

"சரி, அதை இப்படிக் கொடும்" என்று ஆசிரியர் அவரிட மிருந்து கதையை வாங்கிக் கொண்டார்.

என் இருதயம் அப்படியே நின்று விடும்போலிருந்தது. கதையைத் திருப்பி வாங்கிக் கொள்வதற்காக ஆசிரியரிடம் கையை நீட்டினேன்.

அப்பொழுது ஆசிரியர் என்னைத் தூக்கி வாரிப் போடும்படியாக ஒரு காரியம் செய்தார். ஆபீஸ் பையனைக் கூப்பிட்டு என் கதையை அச்சுக்கு அனுப்பினார். அதைக் கண்டு எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லே.

"உதவி ஆசிரியர் அபிப்பிரா யத்துக்கு மாறாக என் கதையை அச் சுக்கு அனுப்பி விட்டீரே!" என்றேன்.

"அதற்காகத் தான் அவரை வைத் திருக்கிறேன். அவருக்கு எந்தக் கதை பிடிக்கவில்லேயோ, அந்தக்கதை வாசகர் களுக்கு ரொம்பப் பிடிக்கும் என்பது என் அனுபவம்!" என்றார் ஆசிரியர்.

"அப்படி யானுல் இவற்றையும் அச் சுக்கு அனுப்பி விடுங் கள்" என்று கிருஷ்ண சாமி திருப்பி யனுப்பி யிருந்த அத்தனை கட் டுரைகளையும் நான் ஆசிரியரின் மேஜை மீது வைத்தேன்.

"என் செருப்பை எந்தப் பாவியோ அடித்துக்கொண்டு போய்விட்டான். நேற்று இரண்டு கல்யாணங்களுக்கும் போயிருந் தேன். இரண்டாவது இடத்தில் தான் அது தொலேந்து போயிருக்க வேண்டும்."

"ஏன் முதல் வீட்டில் அது போயிருக்கக் கூடாதோ?"

"இல்லே. முதல் வீட்டில்தான் செருப்பு எனக்கு அகப்பட்டது."



என் அன்புள்ள வனஜாவுக்கு,

நீ உன் பிறந்தகத்துக்குப் போய்ச் சரியாக இன்றோடு ஆறு மாதம் ஆகிறது என்பதை உனக்கு ஞாபக மூட்டுகிறேன். நான் சுயம்பாகம் செய்து சாப்பிட்டுக் கொண்டு ஆபீஸுக்கும் போய்க் கொண்டு படும் கஷ்டங்களை யெல்லாம் விவரமாக முன்பு எழுதியிருந்தேன். அதற்கு நீ 'என் தங்கைக்குக் கல்யாணம் ஆகும்போலிருக்கிறது, பார்த்துக்கொண்டு வருகிறேன்' என்று எழுதினாய். தங்கைக்குத்தான் கல்யாணம் ஆகி விட்டதே! இன்னும் என்ன? ஒரு வாரமாக ஹோட்டலில் சாப்பிட ஆரம்பித்து வயிற்றுவலி வந்துவிட்டது. கஞ்சி வைப்பதற்குக் கூட ஆள் இல்லாமல் ரொம்ப சிரமமாயிருக்கிறது. அதைவிட நீ என் சிரமத்தைத் துளிக்கூடத் தெரிந்து கொள்ளாமலிருப்பது இன்னும் சிரமமாயிருக்கிறது. என் உடம்பு எப்படிப் போனாலென்ன? அதில் உனக்கு அக்கறை யிருப்பதாகத் தெரியவில்லை. நான் இவ்வளவு தூரம் எழுதிய பிறகாவது உடனே புறப்பட்டு வருவாயென்று எதிர்பார்க்கிறேன்.

உன் பிரியமுள்ள,

சுந்தரராஜன்.

நமஸ்காரம்.

உங்கள் கடிதம். கல்யாணம் ஆகி நான் புக்ககம் வந்த புதிதில் நீங்கள் 'கண்ணே, மூக்கே' என்று அழைத்து என்னிடம் எவ்வளவு அன்பு காட்டினீர்கள்? இப்பொழுது அந்த அன்பு மாறி விட்டதா? உங்கள் உடம்பு எப்படிப் போனாலென்ன என்று நான் இருப்பேனா? எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கிறது. துக்கம் தாங்க முடியாததால் இந்த இடத்தில் ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்து கடிதத்தைக் கூட நனைத்திருக்கிறது, பாருங்கள்! நான் இந்த வாரம் புறப்படலாம் என்றுதான் இருந்தேன். டில்லியிலிருந்து அக்காள் வந்திருக்கிறாள். டில்லி என்ன நம் வீட்டுப் பின்புறத்திலிருக்கிறதா, அடிக்கடி போகலாமென்பதற்கு? இப்பொழுது அக்காள் ஊருக்குப் போனால் மறுபடியும் எப்பொழுது வரப்போகிறாளோ? அவள் ஊருக்குப் போனதும் நான் புறப்பட்டு விடுகிறேன். வயிற்று வலிக்கு நம்ம டாக்டர் சங்கரனிடம் நல்ல மருந்து இருக்கிறது. வாங்கிச் சாப்பிடுங்கள். உங்களை நினைத்தால் எனக்கு இங்கே இருப்பே கொள்ளவில்லை.

உங்கள் ஞாபகமாகவே இருக்கும்,

வனஜா.

வனஜா,

உன் கடிதம். உனக்கு என்ன எழுதுவதென்றே எனக்குத் தெரியவில்லை. நானே சமைத்துச் சாப்பிடுவதிலுள்ள சிரமம் உனக்குக் கொஞ்சங்கூடத் தெரியவில்லை. உனக்குத்தான் தெரியுமே, எனக்கு வெந்நீர்கூடப் போடத் தெரியாதென்று! மறுபடியும் ஹோட்டலில்தான் சாப்பிடுகிறேன். வயிற்றுவலித் தொந்தரவு இப்பொழுது கொஞ்சம் குணம். டில்லியிலிருந்து அக்காள் வந்திருப்பதாக எழுதியிருக்கிறாய். அக்காள் போகிற வரையில் நீ அங்கேயே இருந்தால், அதற்குள் இன்னும் யாராவது ஊரிலிருந்து வருவார்கள். அவர்கள் போகிற வரையில் நீ அங்கேயே இருக்க வேண்டும். அப்படித்தானே? சரி. கடிதத்தை வளர்க்க விரும்பவில்லை. இந்தக் கடிதத்துக்கு உன் பதிலை எதிர்பார்க்கவில்லை; உன்னையே எதிர்பார்க்கிறேன்.

சுந்தரராஜன்.



நமஸ்காரம்.

தங்கள் கடிதம். என் அக்காள் என்ன அடிக்கடி டில்லியிலிருந்து வரப்போகிறவளா? அவள் உங்கள் கடிதத்தைப் படித்து விட்டு ரொம்ப வருத்தப்பட்டாள். இன்னொரு விஷயம். நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. பெரியப்பாவுக்கு அடுத்த மாதம்

சஷ்டியப்தபூர்த்தி வருகிறது. 'சஷ்டியப்த பூர்த்திக் கல்யாணம் பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இருந்ததுதான் இருந்தே. அது ஆன பிறகு போவேன்' என்கிறாள் பெரியம்மாள். அவள் சொல்லுவது நியாயந்தானே? அடுத்த மாதம் சஷ்டியப்த பூர்த்திக் கல்யாணம் முடிந்ததும் புறப்பட்டு விடுகிறேன். மன்னிக்க வேண்டும். நான் இதையெல்லாம் வேண்டுமென்று செய்வதாக நினைக்கக் கூடாது.



வனஜா.

வனஜாவுக்கு,

உன் கடிதம் பார்த்தேன். என் ஆபீஸில் புதிதாக ஒருவர் வேலைக்கு வந்திருக்கிறார். அவர் நம்ம தஞ்சாவூர். அவரும் அவர் மனைவியும் அவரது தங்கை சரோஜாவும் வீடு அகப்படாததால் நம்ம வீட்டில்தான் இருக்கிறார்கள். நான் இப்பொழுது அவர்களுடன் தான் சாப்பிடுகிறேன். எனக்கு தினந்தோறும் ஸ்நானம் செய்ய வென்னீர், வயிற்று வலித் தொந்தரவுக்கு இரவில் கஞ்சி, குடிப்பதற்குச் சதா சர்வ காலமும் காப்பி — இப்படி அல்லும் பகலும் அனவரதமும் வேண்டிய உபசாரம் நடக்கிறது. அவர்கள் ரொம்ப நல்ல மாதிரி.

சரோஜா, காலேஜ் பாடங்களையும் படித்துக் கொண்டு வீட்டுக் காரியங்களையும் பார்த்துக் கொள்கிறாள். அவள் பார்வைக்கு மாத்திரம் தங்க விக்கிரகமாயில்லை. குணத்திலும் தங்கம். மோகனப் புன்னகை தவழும் முகம். அன்பும் ஆதரவும் கலந்த பேச்சு. களங்கமற்ற சரள சுபாவம். கலாசாலையில் படிக்கிறோம் என்னும் கர்வமே அவளிடம் கிடையாது. என்ன பதவிசு, என்ன அடக்கம்! அடடா! இலேசாக அஞ்சனந் தீட்டிய அந்த அகன்ற விழிகளிலும் அவள் பார்க்கும் பார்வையில்தான் என்ன கவர்ச்சி! அவள் தன்னை மறந்து பாடும்போது அந்த கந்தர்வகானம் கேட்போரை ஆனந்த வெள்ளத்தில் முழுக் காட்டுகிறது. எனக்கு முன்பெல்லாம் ஆபீஸிலிருந்து சீக்கிரம் வீட்டுக்கு வரவே பிடிக்காது; இப்பொழுதெல்லாம் எப்பொழுது வீட்டுக்கு வரப்போகிறோம் என்று இருக்கிறது. ஆகக்கூடி இப்பொழுது எனக்கு ஒன்றும் குறைவில்லை. நீ அவசரப்பட்டுக் கொண்டு வர வேண்டாம். உன் சௌகரியம் போல் அடுத்த மாதமோ, அல்லது அடுத்த வருஷமோ வரலாம்.

சுந்தரராஜன்.


நமஸ்காரம்.

தங்கள் கடிதம். ஆகா, தங்களுக்கு இவ்வளவு அழகாகத் தமிழில் கடிதம் எழுதத் தெரியுமென்று இதுவரையில் எனக்குத் தெரியாதே! என்ன வர்ணனை! என்ன அலங்காரச் சொற்கள்! உங்கள் கடிதத்தைப் படித்துப் பார்த்ததும் நீங்கள் கதை யெழுதுற வேலைக்குப் போகலாமே என்று நினைத்தேன்.

எனக்கும் தங்கள் கடைசி கடிதத்தைப் படித்த பிறகு, இங்கே ஒரு நிமிஷம்கூட இருக்கப் பிடிக்கவில்லை. தங்கள் சௌகரியத்தைவிடச் சஷ்டியப்த பூர்த்தி என்ன வேண்டிக் கிடக்கு! என்னதான் ஆயிரம் சரோஜாக்கள் வந்தாலும் என்னைப்போல் அன்புடையவளாக முடியுமா? நாளைக்கு வெள்ளிக்கிழமை. சனிக்கிழமை இரவு புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலை அங்கு வந்து சேருகிறேன். தயவுசெய்து சரோஜாவைச் சிறிது நேரம் மறந்துவிட்டு, அவசியம் ஸ்டேஷனுக்கு வரவும். உங்கள் சிநேகிதருக்கு இரண்டு நாட்களுக்குள் ஒரு வீட்டைப் பார்த்துக் குடிவைத்து விடுங்கள். ஒரே வீட்டில் குழந்தைகளுடன் நாமும் இருந்துகொண்டு அவர்களும் எப்படி இருக்க முடியும்? உடனே எப்படியாவது அவர்களுக்கு ஒரு வீடு பார்த்து விடுங்கள்.

வனஜா.





74. அப்படியே நின்றொழிந்தான்!

"அப்படியா காரியம்? ராமன் மேல் படை எடுத்து வருகிறான் பரதன்? இதோ, அவனை ஹதம் பண்ணுகிறேன்!" என்றெல்லாம் குமுறுகிறான் குகன் — வேடுவ வீரர்களைப் பார்த்து. "'ராமனுக்கும் அவனுடைய சந்ததிகளுக்கும் ராஜ்யம் கொடுத்தது வேடுவராகிய நாம்' என்ற புகழ் வரப் போகிறது; பரதனை ஒரு கை பார்த்து விடுவோம்" என்றெல்லாம் பேசுகிறான். ஒரு அக்னி மலைபோல் கோபாக்னியைக் கொப்பளித்துக் கொண்டு நிற்கிறான். எல்லாம் தென் கரையில்.

வடகரையில் என்ன நடக்கிறது? கொஞ்சம் எட்டிப் பார்ப்போம்:

குகன் நிற்பது சுமந்திரன் கண்ணுக்குத் தென்பட்டது. அப்படியே பரதனிடம் போய்க் குகனைப் பற்றிப் பேசுகிறான். பேச்சிலும் தானத்திலும் என்ன தன்மை பாருங்கள்!

கங்கையிரு கரையுடையான்,
கணக்கிறந்த நாவாயான்,
உங்கள்குலத் தனிநாதற்(கு)
உயிர்த்துணைவன், உயர்தோளான்,
வெங்கரியின் ஏ(று)அனையான்,
விற்பிடித்த வேலையினான்,
கோங்கலரும் நறுந்தண்தார்
குகன்என்னும் குறியுடையான்

[கணக்கிறந்த நாவாயான்: எண்ண முடியாதபடி அத்தனை படகுகளையுடையவன்: உங்கள் குலத் தனி நாதற்கு: உங்கள் குலத்தாருடைய தனி நாயகமான ராமனுக்கு: வெங்கரியின் ஏறு: வீரத்தைச் சொல்ல வேண்டும் என்றால் மதங்கொண்ட யானையைத்தான் சொல்ல வேண்டும்; விற்பிடித்த வேலை: சேனை சமுத்திரம்; கோங்கு அலரும் நறுந் தண்தார்: வாசனை பரவும் படியான பூமாலையைச் சூடியுள்ளவன்: குறியுடையான்: பெயர் கொண்டவன்.]

குகனைப் பற்றிப் பேச ஆரம்பித்த சுமந்திரனுக்கு வாய் ஓய மாட்டேன் என்கிறது:

'கல்காணும் திண்மையான்,
கரைகாணாக் காதலான்,
அல்காணில் கண்டனைய
அழகமைந்த மேனியான்,—
மல்காணும் திருநெடுந்தோள்
மழைகாணும் மணிநிறத்தாய்!—
நிற்காணும் உள்ளத்தான்,
நெறிஎதிர்நின் றனன்' என்றான்.

[குகனது தேக திடம் கல்லைப் போலிருக்கிறது: ஆனாலும் அவனது அன்பை இப்படி அப்படி என்று சொல்ல முடியாது: அல்காணில் கண்டனைய: இருளை உருவமாகத் திரட்டிக் கண்டது போலும்: மல்காணும்

திருநெடுந்தோள் : மல் யுத்தத்தையே திரட்டிச் செய்தது போலும் தோள் கொண்ட ; மழை காணும் மணி நிறத்தாய் : நீல மேகம் போன்ற அழகிய நிறங்கொண்ட பரதனே ; நிற்காணும் உள்ளத்தான் : உன்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்பியவனும்.]

குகனைப் பற்றி இப்படிப் பேசப் பேச பரதனுக்கு ஆனந்தம் பொங்குகிறது.

தன்முன்னை அவன் தன்மை
தன்துணைவன் முந்துரைத்த
சொன்முன்னே உவக்கின்ற
துரிசிலாத் திருமனத்தான்,
'மன்முன்னே தழீஇக்கொண்ட
மனக்கினிய துணைவனேல்,—
என்முன்னே! அவற்காண்பென்
யானேசென்(று) எனஎழுந்தான்.

[தன் முன்னே அவன் தன்மை : தன் முன்னிலையில் குகனது தன்மையை ; தன் துணைவன் : சுமந்திரன் ; முந்துரைத்த சொல் முன்னே : ஆத்திரத்தோடு சொன்ன சொல் முடிவதற்குள்ளாகவே ; துரிசிலா : யாதொரு குற்றமும் இல்லாத பரதன் ; மன் முன்னே தழீஇக் கொண்ட : ராமன் முன்னதாகவே விரும்பி அங்கீகரித்த நண்பனானால் ; என் முன்னே : எனக்குச் சொந்த அண்ணன் தான் குகன் ; யானே சென்று அவன் காண்பென் : நானே எதிர் சென்று அவனை வரவேற்கிறேன்.]

"என் சொந்த அண்ணன் தான் குகன்: நானே எதிர் சென்று வரவேற்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு அப்படியே எழுந்து நடந்து கங்கைக் கரையில் வந்து நின்று விட்டான் பரதன். அப்படி நின்ற பரதனது மேனி வாடி யிருப்பதைக் கண்டான், திடுக்கிட்டுப் போய் விட்டான் குகன்.

பரதன் ராஜ கோலமாகவா வந்திருக்கிறான்? ஆயுத சன்னத்தனாகவா வந்திருக்கிறான்? அல்ல. அடடா! மரவுரியை (வற்கலை) அல்லவா உடுத்தி யிருக்கிறான். உடம்பெல்லாம் மாசு படிந்திருக்கிறதே; முகம் பூரணச் சந்திரன் போலிருக்கத்தான் செய்கிறது. ஆனால் ஒரே வெளுப்பாய் வெளுத்துப் போயிருக்கிறதே!

வற்கலையின் உடையானை,
மாசடைந்த மெய்யானை,
நற்கலையின் மதியென்ன
நகையிழந்த முகத்தானைக்,
கல்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்;—
வில்கையினின் (று)இடைவீழ
விம்முற்று நின்றொழிந்தான்.

[நற்கலையின் மதி : அழகிய பிரகாசம் என்பதே இல்லாத சந்திரன் — பௌர்ணமி அன்று காலை ஆறு மணிக்கு மேற்கே பார்த்தால் சந்திரன் முழு வட்டமாகவே இருக்கும். ஆனால் கிழக்கே ஜொலித்து நிற்கும் சூரியன் காரணமாகப் பிரகாசமே இல்லாமல் ஏதோ வெண்மேக வட்டம் என்று சொல்லும்படி வெளுத்துப் போயிருப்பதைப் பார்க்கலாம் — அப்படிப் பிரகாசம் இல்லாதிருந்ததாம் பரதனது அழகிய முகம்.]

துயரத்தால் பரதன் அப்படியே இளகி நிற்கிறான். இதைக் கல்சிலை ஒன்று பார்த்துவிட நேர்ந்தால் அதுவும் அப்படியே இளகுவதுபோல் தோன்றும். அவ்வளவு துயரத்துக்கு உள்ளாயிருக்கிறான் பரதன்: இந்த நிலையைப் பார்த்த குகனுக்கு உடல் உணர்ச்சி எல்லாம் ஸ்தம்பித்து விட்டன. கையிருந்த வில் நழுவி 'தட்' என்று தரையில் விழுந்தது. அந்த நிலையிலேயே நிற்கிறான். எவ்வளவு நேரம் நின்றானோ சொல்ல முடியாது!



மகானுபாவர் வேவல்

வழிப்போக்கன்

[டில்லி வைஸ்ராய் மாளிகையில் வேவல் குறுக்கும் நெடுக்கும் ராணுவ கவாத்து நடை நடந்து கொண்டிருக்கிறார். அவரைப் பின் பற்றி அவர் காரியதரிசி, அவர் பின்னாலேயே தாமும் கவாத்து நடை நடந்துகொண்டிருக்கிறார்.]

வேவல்:—சட்! சட்! சட்! ஷ்! ஷ்! ஷ்! தூ! தூ! தூ! என்ன வைஸ்ராய்ப் பிழைப்பு வேண்டிக் கிடக்கிறது? எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. உடனே எடும் ஒரு கால் கடிதாசி!

காரியதரிசி:—எதற்காக யுவர் எக்ஸலென்ஸி?

வேவல்:—எதற்காகவா? எல்லாம் இந்தப் பாழும் வேலைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டுப் போவதற்குத்தான்.

காரியதரிசி:—அப்படி முழுக்குப் போட்டு விட்டுப் போகும்படியாக என்ன ஆபத்து வந்துவிட்டது யுவர் எக்ஸலென்ஸி?

வேவல்:—இன்னும் என்ன ஆபத்து வர வேண்டும்? சமீபத்தில் என் குட்டு வெளிப்பட்டு விட்டதே, அது போதாதா?

காரியதரிசி:—என்ன குட்டு வெளிப்பட்டது யுவர் எக்ஸலென்ஸி?

வேவல்:—ஓ ஜீஸஸ் கிறைஸ்ட்! இப்படிப்பட்ட காரியதரிசிகளை வைத்துக் கொண்டு நான் குட்டிச்சுவராகப் போனது போலத்தான்! என்ன ஐயா, காந்திக்கும், எனக்கும் சமீபத்தில் நடந்த கடிதப் போக்குவரத்தைச் சரியாகப் பதினெட்டாம் தேதி யன்று பிரசுரம் செய்யச் சொன்னேனா?

காரியதரிசி:—ஆம், சொன்னீர்கள், யுவர் எக்ஸலென்ஸி!

வேவல்:—எதற்காகச் சரியாகப் பதினெட்டாம் தேதி பார்த்து கடிதப் போக்குவரத்தை வெளியிட்டேன்!

காரியதரிசி:—பத்தொன்பதாம் தேதி காந்தியும் ஜின்னாவும் கூடிப் பேசப் போவதாக இருந்ததால் பதினெட்டாம் தேதி பார்த்து வெளியிட்டீர்கள்.

வேவல்:—ஆனால் கூடிப் பேசினார்களா?

காரியதரிசி:—இல்லை.

வேவல்:—ஏன் இல்லை? ஏன்?

காரியதரிசி:—அதுதான் அந்தப் பாழும் ஜுரம் ஜின்னாவைப் பிடித்துக் கொண்டு விட்டதே?

வேவல்:—ஜுரம் ஜின்னாவைப் பிடிக்கப் போக எனக்கு எவ்வளவு அவமானமாகப் போய்விட்டது பாரும்! நான் கடிதப் போக்குவரத்தைப் பதினெட்டாம் தேதி வெளியிட்டது பலன் இல்லாமல் அல்லவா போய்விட்டது! உம்மை என் காரியதரிசி என்று வைத்துக் கொண்டு என்ன பலன்? சட்! சட்! சட்! ஷ்! ஷ்! ஷ்! தூ! தூ! தூ!

[வைஸ்ராய் வேவல் சடாரென்று நிற்கிறார். பின்னால் கவாத்து நடை பின் வரும் காரியதரிசி அவர்மீது முட்டிக்கொள்கிறார்.]

காரியதரிசி:—என்னை என்ன பண்ணச் சொல்கிறீர்கள், யுவர் எக்ஸலென்ஸி!

வேவல்:—என்ன பண்ணுகிறதா? இத்தனை பெரிய தேசத்துக்கு நாம் ஒரு வைஸ்ராய், நீர் நமக்கு ஒரு காரியதரிசி என்று இருந்துகொண்டு என்ன பண்ணுகிறதா? இந்தத் தலைவர்களில் யாருக்கு என்ன ஜுரம் வந்தாலும் நம்மைக் கேட்டுக் கொண்டுதான் வரவேண்டும் என்று ஒரு அவசரச் சட்டம் போட்டு வைப்பதற்கென்ன? இம்மாதிரி ஒரு சட்டம் முன்னமேயே போட்டிருந்தால் இந்த காந்திக்கும் மலேரியா ஜுரம் வந்திருக்குமா? அவரும்தான் இப்படிக் கடிதம் எழுதி, எழுதி என்னைத் திகைக்க அடித்துக் கொண்டிருப்பாரா?

காரியதரிசி:—சரி, இதோ போய் ஒரு அவசரச் சட்டம் தயாரித்துக் கொண்டு வருகிறேன்.

வேவல்:—சரி, உடனேயே தயாரியும். இந்தியாவில் உள்ள எல்லா வியாதிகளும் உடனேயே லைசென்சு பெற்றுக் கொள்ள வேண்டும். யாராவது அரசியல் தலைவர்களைப் பிடிப்பதாயிருந்தால் நமக்கு ஒரு மாதத்துக்கு முன்பே அறிவிப்பு செய்ய வேண்டும். இந்த அறிவிப்பின் நகல் ஒன்று வியாதிகள் கண்ட்ரோலருக்கு அனுப்பப்பட வேண்டும். ஏன், இன்னும் நின்று கொண்டிருக்கிறீர்? போம். சட்! சட்! சட்! ஷ்! ஷ்! ஷ்! தூ! தூ! தூ!

கல்யாணம் நடந்தது

க. ரா.

சில நாட்களுக்கு முன் தினசரிப் பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தி வெளியாயிற்று. அது அந்தப் பத்திரிகையின் கருங்கல் பாளைய நிருபர் எழுதியது. நிருபர் அந்த ஊரில் ஏற்பட்ட உளுந்துப் பஞ்சத்தை விவரித்திருந்தார். ஏதோ ஒரு சின்ன ஊரில் நடந்த ஒரு சின்ன விஷயத்தைப் பத்திரிகை மூலம் நாடு முழுவதும் அறிந்து கொண்டது. விஷயத்தைப் படித்த எல்லா ஊர் மளிகைக் கடை முதலாளிகளும் உளுந்து விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையாக இருக்கத் தொடங்கினர்.

நிருபரின் செய்தி வெளியான ஒரு வாரத்துக்கெல்லாம் சென்னை ஹோட்டல்களில் ஒரே பரபரப்பு காணப்பட்டது. இண்டி ரேஸில் தோற்றுவிட்டுத் திரும்புகிறவர்கள் முகத்திலிருக்கக் கூடிய கவலையைவிடப் பன்மடங்கு கவலை தோய்ந்த முகத்துடன் இட்லி, வடை தாஸர்கள் ஹோட்டல்களை விட்டு வெளியேறினார்கள். ஆபீஸ் மானேஜர் மூன்று நாளாக இட்டிலி சாப்பிடாமல் பைத்தியம் கொண்டவர்போல் இருப்பதைக் கவனித்த ஒரு குமாஸ்தா, அதிர்ஷ்டவசமாய் அவர் வீட்டிலிருந்த உளுந்தின் உதவியால் அரை டஜன் இட்டிலி தயார் செய்து, அதை ஆபீஸ் மானேஜருக்கு ரகஸ்யமாய்ச் சமர்ப்பித்து உத்தியோக உயர்வு பெற்றுக் கொண்ட சமாசாரம், யுத்தம் முடிந்த பிறகு முழுத் தகவலும் வெளியாக வேண்டிய சில முக்கிய சம்பவங்களில் ஒன்றாகி விட்டது.

★

ஒரு காலேஜ் மாணவன் தன்னுடைய வியாசத்தில் "இட்டிலியைக் கண்ட முகம் போல் சூரியனைக் கண்ட தாமரை மலர்ந்தது!" என்று எழுதித் தமிழ்ப் பண்டிதரிடம் அதிக மார்க்குகள் வாங்கி விட்டான்!



நீதிபதி :— உன்னை பிரதிவாதி குடத்தால் அடித்தான் என்பதற்கு ஏதாவது சாட்சியம் உண்டா?

வாதி :— இந்தக் குடம் நசுங்கி இருக்கிறதே அதுதான் சாட்சியம்.

தென் இந்திய ரயில்வேயில் விழுப்புரம் திருச்சி கார்ட் லயனில் உள்ள உளுந்தூர்ப் பேட்டையில் உளுந்து கிடைப்பதாக யாரோ புரளியைக் கிளப்பிவிட, அதை உண்மை என்று நம்பிய அப்பாவிகள் பலர் கோணிப் பையும் கையுமாக அந்த ஊருக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு கிளம்பி விட்டனர். கும்பலைச் சமாளிக்க முடியாத ரயில்வே கம்பெனியார்கள் மறுநாளே கீழ்க் கண்ட அறிக்கையை வெளியிட்டு விட்டார்கள் :—

"இன்று முதல் மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில் விழுப்புரம் ஜங்ஷனுக்கும் விருத்தாசலம் ஜங்ஷனுக்கும் நடுவிலுள்ள ஸ்டேஷன்களுக்கு டிக்கெட் கொடுக்கப்பட மாட்டாது."

★

புது டில்லி அறிக்கை ஒன்று பின் வருமாறு வெளியாயிற்று :—

"தேசத்தில் இப்பொழுது இருக்கும் உளுந்து நெருக்கடிக்கு, சர்க்காரும் மிலிடெரிக்காரர்களும் தான் ஜவாப்தாரி என்றும், உளுந்தின் மேலே உள்ள கறுப்புத் தோலை அரைத்து, அதிலிருந்து ஒரு கறுப்புப் பசையை உண்டாக்கி, அதை நேச விமானங்களின் மேல் தடவுவதாகவும், அதனால் இருட்டடிப்புகளில் விமானம் கண்ணுக்குத் தெரிவதில்லை என்றும், உளுந்தைக்கொண்டு அப்பள உருண்டைகள் செய்து அவைகளைத் துப்பாக்கி ரவைகளுக்குப் பதிலாக உபயோகித்து எதிரிகளை வெற்றிகரமாகத் தாக்கக்கூடுமென்றும், அதற்காக சர்க்காரே எல்லா உளுந்தையும் வாங்கி இரண்டாம் போர்முனைக்கு அனுப்புகிறார்களென்றும் இன்னும் இது போன்ற வதந்திகளைச் சிலர் பரப்பி வருவதாகத் தெரிகிறது. சர்க்

கார் இவைகளை அடியோடு மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட வதந்திகள் யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தடையாகக் கூடுமென்று சர்க்கார் கருதுவதால், இந்தமாதிரியான வதந்திகளைப் பரப்புகிறவர்களுக்குத் தலா ஐந்து வருஷக் கடுங்காவலாவது, ஆயிரம் ரூபாய் அபராதமாவது, அல்லது இரண்டுமாவது போடப்படும்."

★

ஒரு மாதப் பத்திரிகையின் கவிதைப் பகுதியில்,

" இட்டிலியும் சாம்பாரும்
ஏற்றமிள காய்ப்பொடியும்
சட்டினி யும்கலந்து
சாப்பிடும்நாள் எந்நாளோ ?"

என்று ஆரம்பிக்கும் 'ஏக்கான் கண்ணி' ஒன்று வெளியாகியிருக்கிறது.

★

ஜோஸ்ய விஷயங்களையே வெளியிடும் "கிரகசாரம்" என்னும் பத்திரிகை கீழ்க் கண்டபடி எழுதியது :—

" தான்யாதிபதியான அங்காரகன் எனப்படும் குஜன் சிம்மராசிக்கு வந்துவிட்டபடியாலும், சிம்மத்திட மகப்பட்ட பிராணி எப்படிச் சக்தியற்றுப் போகுமோ, அப்படியே குஜனும் அசக்தனாக இருக்கிறபடியாலும் உளுந்து, துவரை முதலிய தானியங்களுக்கு இந்தக் காலத்தில் விளைவு குறைவு. இந்த யுத்தத்தை நடத்தும் மிலேச்ச நாட்டார் கொள்கைப்படி அங்காரகன் யுத்த தேவதையானபடியால், தான்யாதிபதியான குஜன் பீடாக்கிரஸ்தனாக இருக்கிறான். ஆகவே, யுத்த சமாப்தியோடு தானிய சமாப்தமும் நிவர்த்தியாகக் கூடும்."



வண்டியிலிருப்பவர் :— என்னப்பா! ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருந்த வண்டி திடீரென்று காற்றாய்ப் பறக்கிறதே !

வண்டிக்காரன் :— அதோ அங்கே பார்த்தீங்களா, ஒருத்தன் புல்லுக் கட்டு தலையிலே எடுத்துக்கிட்டு போறான் ! அதைப் பார்த்திடுச்சு குதிரை ! பறக்குதுங்க !

சென்னைத் தினசரிகளில் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்னும் பகுதியில் உளுந்து இல்லாததால் இன்பண்டங்கள் சப்ளை செய்ய முடியாமல் இருப்பதைப் பற்றி ஹோட்டல் முதலாளி ஒருவரும், வடை சாப்பிடாமல் தான் நடைப் பிணமாக இருப்பதாக ஒரு வடைப் பொடி ஆழ்வாரும், தனித் தமிழ் நாகரிகத்தின் சின்னமாக விளங்கிய இட்லியை ஒழித்து அதனால் தமிழரின் நாகரிகத்துக்கே உலை வைத்தவர்களின் சூழ்ச்சியைக் கண்டித்து, ஏன் புரட்சியும், கிளர்ச்சியும் செய்யக்கூடாது என்றும், அப்படிச் செய்வது சுயமரியாதை படைத்த ஒவ்வொரு தமிழனுடைய பிறப்புரிமை என்றும், ஒரு பேனா வீரர் எழுதியிருக்கிறார்.

★

இந்த விஷயம் தன் பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய நிச்சயித்திருந்த தனபாக்கியத் தம்மாளுக்கு ரொம்ப ரொம்பக் கவலையைக் கொடுத்தது. அவள், " என்னுங்க, உங்களைத்தானே !" என்று தன் கணவனைக் கூப்பிட்டாள்.

" பின்னாலே பேசிக்கிடலாம், இப்ப கடைக்குப் போக நேரமாவுதல்ல ?" என்றார் செட்டியார்.

" கடை விசயந்தான் பேசக் கூப்பிட்டேன் " என்றாள் செட்டியார் மனைவி.

" சொல்லியாளு !" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே உட்கார்ந்தார் கப்புச் செட்டி.

" நம்ம பெண் மாணிக்கத்துக்குக் கல்யாணமில்லே ? அதுக்கு, உளுந்து வேணும்: கடையில் இருக்கிற உளுந்தை யாருக்கும் வித்துடாதீங்க !"

" இதுக்குத்தானா இம்பிட்டு அவசரம் ? பொழுது சாய வீட்டுக்கு வரப்போ, மூட்டையைப் போட்டுக்கிட்டு வந்துடறேன், இது தெரியாதா எனக்கு ?" என்றார் செட்டியார்.

"எங்கே தெரிஞ்சிச்சு ? நான் சொன்னதுக்கு முந்தி தெரிஞ்சிச்சா ?" என்று செட்டியாரின் தலையில் ஒரு இடி இடித்தாள் தனபாக்கியத்தம்மாள்.

இந்தக் கல்யாணப் பத்திரிகையின் முடிவில், " தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும் " என்று வழக்கமாய்ப் போடப்படும் பகுதியில், செட்டியார் ஒரே ஒரு பெயரைத்தான் குறிப்பிட்டிருந்தார். அந்தப் பெயர் இதுதான் :—

" மகாராஜராஜஸ்ரீ இட்லி !"



படித்த பெண்கள்

—நாடோடி—

[படித்த பெண்கள் படிக்காத பெண்கள் எல்லாரும் படிக்கலாம்]

படித்த பெண் என்றால் எப்படி இருப்பாள்? படித்த பெண்ணுக்கு உள்ள லட்சணங்கள் என்னென்ன? என்னென்ன லட்சணங்கள் இருந்தால் படித்த பெண் என்று கூறலாம்?

இத்தகைய கேள்விகள் அடிக்கடி கேட்கப் படுகின்றன. ஆனால் இது வரை யாரும் இவற்றுக்குச் சரியான பதில் அளித்ததாகத் தெரியவில்லை. காரணம், இது விஷயமாக ஆராய்ச்சிகள் நடத்தி முடிவு கண்டுள்ள பெரியோர்களிடையில் பெருத்த அபிப்பிராய பேதம் நிலவி வருவதுதான்.

தலையில் உள்ள வகிடு எவ்வளவுக் கெவ்வளவு கோணலாக இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு படித்த பெண் என்று நிச்சயிக்கலாம் என்று ஒரு சாரார் கூறுகிறார்கள். தலையில் எவ்வளவுக் கெவ்வளவு பின்னல்களும் கொண்டை ஊசிகளும் அதிகமாக இருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு படித்த பெண் என்று கொள்ளலாம் என்று இன்னொரு சாரார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

பின்னலைக் கொண்டு மதிப்பிடுகிறவர்களிலும் இரண்டு கட்சிகள் உண்டு. பின்னலை அவர்கள் முன் பக்கத்தில் தொங்க விட்டிருக்கிறார்களா, அல்லது பின்பக்கத்தில் தொங்க விட்டிருக்கிறார்களா என்பதிலிருந்து அவர்கள் எவ்வளவு படித்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி நிபுணர்கள் எத்தனையோ பேர் இத்துறையில் உண்டு.

இன்னும் இப்பின்னலைக் கீழே நூலோ, ரிப்பனோ கொண்டு முடி போடாமல் எத்தனை அங்குல நீளத்துக்குப் பின்னால் விட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்தும் படித்த பெண்ணா, இல்லையா என்று நிர்ணயிக்கும் பெரியோர்களும் இருக்கிறார்கள்.

சற்றுத் தூரத்தில் இருந்துகொண்டு நிர்ணயிப்பதற்குப் பதில் சற்றுப் பக்கத்தில் போயே நிர்ணயிக்க முடியுமானால், இந்தப் 'பின்னல் பரீட்சை'க்குப் பதில் 'பூப் பரீட்சை' வைத்துக்கொள்ளலாம் என்பது சில ஆராய்ச்சியாளர்களின் துணிபு.

பழைய காலத்துப் பெண்களுக்கும், தற்காலத்துப் படித்த பெண்களுக்கு முள்ள ஒரு பெரிய வித்தியாசத்தை அவர்கள் தலையில் அணிந்து கொள்ளும் பூவிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பழைய காலத்துப் பெண்கள் சில பூக்களைத்தான் தலையில் வைத்துக் கொள்ளலாம், மற்ற பூக்களை வைத்துக் கொள்ளக்கூடாது என்று உலகில் உள்ள முக்கால் வாசிப் பூக்கள் மீது பட்சபாதம் காட்டி வந்தவர். இதற்கு அவர்கள் கூறிய காரணம் சில பூக்களுக்குத்தான் வாசனை இருக்கிறதென்றும், மற்றப் பூக்களுக்கு வாசனையில்லையென்பதும் தான்.

ஆனால் இதைப் போலப் பயித்தியக்காரத்தனம் வேறு கிடையாது என்பது தற்கால ஸ்திரீகளின் கருத்து. வாசனை அவசியமில்லை, அழகுதான் அவசியம் என்று அவர்கள் வாசனையில்லாத பூக்களாகப் பார்த்து அணிய ஆரம்பித்தார்கள்.

முதலில் இந்தப் பூக்கள் வாசனையற்றிருந்த போதிலும் அழகுடன் விளங்கின. ஆனால் போகப் போக அதுவும் போய் விட்டது. இப்பொழுதெல்லாம்

ஸ்திரீகள் தாங்கள் தலையில் அணியும் பூ தாங்கள் கட்டிக் கொண்டிருக்கும் புடவைக் கலருக்கு 'மாச்' பண்ணுகிறதா என்று கவனிக்கிறார்களே யொழிய, அழகாய் இருக்கிறதா என்று கவனிப்பதே யில்லை. சில ஸ்திரீகள் ஊமத்தம் பூவைக் கூட அணிந்து கொள்ளுவதாகச் சில நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.



மல்லிகை, முல்லை, ரோஜா போன்ற அழகிய வாசனைப் புஷ்பங்கள் தற்காலப் பெண்களின் தலைக்கு ஏறுவதே இல்லை. அவர்கள் இப் புஷ்பங்களை ஒதுக்கித் தள்ளப் போகக் கோவிலில் எழுந்தருளியிருக்கும் விக்ரகங்களின்பாடு கொண்டாட்ட மாகிவிட்டது!

ஸ்திரீகள் அணிந்து கொள்ளும் ஜோலாக்கிலிருந்து அவர்கள் படித்த பெண்களா, இல்லையா என்று கண்டு பிடித்துவிடலாம் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஜோலாக்கு எவ்வளவுக் கெவ்வளவு தோள்பட்டையை இடிக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு படித்த பெண்கள் என்று இவர்கள் நிர்ணயிக்கிறார்கள்.

தலையைக் கொண்டு மதிப்பிடுவதை விட முகத்தைக் கொண்டு மதிப்பிடுவது தான் சரி என்பது இன்னொரு கூட்டத்தாரின் அபிப்பிராயம். இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களை நாம் அடிக்கடி தெருவில் பார்க்கலாம்.

எந்தப் பெண் தெருவில் போனாலும் சரி, இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் கூர்ந்து கவனிப்பார்கள். அதிலும் முகத்தை மிகவும் உன்னிப்பாய்க் கவனிப்பார்கள். விஷயம் தெரியாதவர்கள் இவர்கள் ஏதோ விகல்ப புத்தியோடு பார்ப்பதாக நினைத்துக் கொள்வார்கள். ஆனால் உண்மை இதுவல்ல. முகத்தில் உள்ள பவுடர் எத்தனை அங்குலம் உயரம் இருக்கும் என்று கண்டு பிடிக்கும் நல்ல நோக்கத்துடன் தான் இவர்கள் தெருவில் போகும் பெண்களை யெல்லாம் உற்றுக் கவனிக்கிறார்கள். பெண்கள் அப்பிக் கொண்டிருக்கும் பவுடரின் உயரம் ஒரு அங்குலம் இருந்தால் எஸ். எஸ். எல். ஸி. தேறினவள், பவுடர் இரண்டு அங்குல உயரம் இருந்தால் இன்டர்மீடியட் தேறினவள், மூன்று அங்குல உயரம் இருந்தால் பி. ஏ. தேறினவள் என்றெல்லாம் இவர்கள் கணக்கெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூடக் கேள்வி.

இன்னொரு சாரார் இருக்கிறார்கள். ஒரு பெண் படித்த பெண்ணா, இல்லையா என்பதைத் தலையைக் கொண்டு மதிப்பிடுவது தவறு, காலைக் கொண்டு மதிப்பிடுவதுதான் சரி என்பது இவர்கள் சித்தாந்தம். அதன்படி இவர்கள் எந்தப் பெண் எதிரே வந்தாலும் சரி, தலையை நிமிர்ந்து நோக்கமாட்டார்கள்.

விஷயம் தெரியாதவர்கள், இவர்களை மிக யோக்யர்களென்றும், பரஸ்திரீகளைப் பார்க்க விரும்பாதவர்கள் என்றும் கூறுவது உண்டு. ஆனால் உண்மை இதுவல்ல. பெண்கள் அணிந்திருக்கும் பூட்ஸ்களின் குதிகால் உயரம் எத்தனை அங்குலம் இருக்கும் என்று கண்டு பிடிப்பதற்குப் பெண்களின் காலைக் கவனிக்காமல் முகத்தைக் கவனித்து என்ன பயன்?

ஆனால் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் கொஞ்ச காலமாக பூட்ஸ் குதிகாலைக் கவனிப்பதில்லை. இதே விஷயத்தை இன்னொரு விதத்தில் கண்டு பிடிப்பதற்கு ஒரு சிறு உபாயம் இக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு மேதாவி கண்டு பிடித்திருக்கிறார்.

வெகு நாள் ஆராய்ச்சியின் பேரில் இவர் ஒரு தத்துவத்தைக் கண்டு பிடித்தார். பெண்கள் பூட்ஸின் குதிகாலின் உயரத்திற்கும் அவர்கள் இடுப்பண்டை அவர்கள் உடம்பு இரண்டு நேர் பாகங்களாகப் பிரிந்து அதனால் ஏற்படும் கோணத்திற்கும் ஒரு நேர் சம்பந்தம் இருக்கிறது என்று இவர் கண்டுபிடித்து இது விஷயமாகப் படங்கள் முதலியன தயாரித்து வைத்திருக்கிறார்.

ஆனால் தெருவில் நாம் பார்க்கும் மூக்கால் வாசிப் பெண்கள் இம்மாதிரி இல்லாமல் ஆங்கில எழுத்து 'எஸ்'ஸைப் போல் வளைந்து காண்கிறார்களே என்று சிலர் கேட்கலாம். அவர்கள் குழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கிச் செல்லும் புஸ்தகங்கள் அவர்களை முன்னுக்குத் தள்ள, குதிகால் பூட்ஸ் பின்னுக்குத் தள்ள, அவர்கள் 'எஸ்' ஸைப்போல் வளையாமல் 'ஐ'ப்போலா வளைவார்கள்?

சமீப காலத்தில் ஒரு புது ஆராய்ச்சிக் கூட்டத்தார் தோன்றியிருக்கிறார்கள்.

ஒரு பெண் படித்த பெண்ணா, இல்லையா என்று கண்டு பிடிப்பதற்கு இவர்கள் காலையும் பார்க்கமாட்டார்கள், தலையையும் பார்க்கமாட்டார்கள். முழங்கையைத்தான் பார்ப்பார்கள். முழங்கையிலிருந்து ரவிக்கையின் கை எவ்வளவுக்கெவ்வளவு மேலே தள்ளியிருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு படித்த பெண் என்பது இவர்கள் முடிவு.

இதுவரை சொன்னதெல்லாம் தெருக்களில் நாம் சந்திக்கும் பெண்கள் படித்த பெண்களா, இல்லையா என்று கண்டு பிடிப்பதற்குத்தான். ஆனால் வீட்டுக்குள் இருக்கும் பெண்கள் படித்த பெண்களா, இல்லையா என்று கண்டு பிடிக்க வேறு சில வழிகள் இருக்கின்றன.

இது விஷயமாக நானே என் சொந்த அனுபவத்தைக் கொண்டு ஆராய்ச்சிகள் செய்து வைத்திருக்கிறேன்.

சரசு படித்த பெண் என்பது உங்கள் எல்லாருக்கும் தெரிந்த விஷயமாதலால் அவள் வீட்டில் எப்படி காட்சியளிக்கிறாள் என்பதிலிருந்தே மற்றப் படித்த பெண்களும் வீட்டில் எப்படி காட்சி யளிப்பார்கள் என்று நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

முதலில் தலை "ஹோ" வென்று பரட்டையாக விளங்கும். படித்த பெண்கள் வெளியில் எவ்வளவுக்கெவ்வளவு அலங்காரமாக விளங்குகிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு வீட்டில் அலங்கோலமாக விளங்குவார்கள். வீட்டில் யாராவது ஒரு பெண் விரித்த சடையுடனும், கறுத்த முகத்துடனும் (பவுடர் இல்லாததால் முகம் கறுப்பாகத்தான் காணப்படும்.) காணப்பட்டால் உடனே படித்த பெண் என்று தீர்மானித்து விடுங்கள்.

இரண்டாவதாக கைகள் வளையின்றி மொட்டையாக விளங்கும். பழைய காலத்து ஸ்திரிகளைப்போலத் தற்கால ஸ்திரிகள் எப்பொழுது பார்த்தாலும் கையில் வளையல்களை அணிந்து கொண்டிருப்பதில்லை. வெளியே போகும்போது மட்டும் கட்டிக் கொள்ளும் புடவையின் கலருக்கு ஏற்றபடி வளைகளை, ஒரு தங்க வளை, ஒரு கலர் கண்ணாடி வளை என்று மாற்றி,மாற்றி அணிந்து கொள்வார்கள்.

கழுத்தில் ஒரே ஒரு தாலிச் சரடு மாத்திரம் இருக்கும். மற்ற நகைகள் எல்லாம் மெருகு குறையாமல் பெட்டியில் இருக்கும். "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்னும் முதுரைக்கு உதாரணமாக விளங்குவதே போல் இடுப்பில் வெள்ளை வெளேர் என்ற ஒரு புடவை. குறைந்தது இருபது இடங்களிலாவது கிழிந்து தைக்கப் பட்டிருக்கும்.


அத்தனைக்கும் சரசு வாங்கும் புடவைகளுக்குக் கணக்கே இல்லை. வாரத்துக்கொரு தடவை அவளும் பக்கத்து வீட்டுப் படித்த பெண்களும் ஒவ்வொரு புடவைக் கடையாக நுழைந்து புறப்படுகிறார்கள். மாதத்துக்கு இரண்டு தடவைக்குக் குறையாமல் புடவை வாங்குகிறார்கள். வாங்கினால் எல்லாருக்கும் ஒரே மாதிரியான புடவை. இவர்கள் நடுவில், நடுவில் சேர்ந்து 'வாக்கிங்' போவதைக் கவனித்தால், ஏதோ ஸ்திரிகள் ராணுவப் படை புது வித 'யூனிபாரம்' அணிந்து செல்வது போலவே இருக்கும்.

இத்தனை புடவைகள் வாங்குகிறாளே யொழிய என் கண் குளிர, ஒரு நாளாவது நல்ல புடவை கட்டிக் கொள்கிறாள் என்கிறீர்களா? கிடையாது. கடை பீரோவில் இருந்த புடவைகள் இப்பொழுது எங்கள் வீட்டுப் பீரோவில் இருக்கின்றன. என் டிராயரில் இருந்த பணம் புடவைக் கடைக்காரன் டிராயரில் இருக்கிறது. அவ்வளவுதான்.

படித்த பெண்களைப்பற்றி நான் எழுதி வைத்திருக்கும் ஆராய்ச்சிகள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் ...... அதோ சரசு வருகிறாள். இதை வாசித்துப் பார்த்தாளானால் என் காப்பி வாயில் மண்ணைப் போட்டு விடுவாள். ஆகவே இத்துடன் கட்டுரையை நிறுத்திக் கொள்கிறேன்.





தமிழ்நாடு ஏஜெண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

மேலக் கோபுர வீதி :: மதுரை.

கலியாண காலத்திற் கென்று

புதுமாதிரி புடவைகளும், இதர ஜவுளி தினுசு
களும் ஸ்பெஷலாக தருவிக்கப்பட்டிருக்கின்றன!

ஒவ்வொன்றுக்கும், கெட்டிச் சாயத்திற்கும், நீண்ட
உழைப்பிற்கும் தங்கு தடையில்லா உத்திரவாதம் உண்டு!

புடவைகள் :—எமது சொந்தத் தறியில் கொள்ளேகால் முறுக்குப் பட்டில் தயார் செய்யப்பட்ட நேர்த்தியான பார்டர்கள் புது மாதிரி சரிகையான முகதலைகளுடன் கூடிய 6, 7, 8, 9 கெஜம் சேலைகள், பாவாடைகள் முதலியன.

பெங்களூர் பட்டுச் சேலைகள் :—ஏராளமான நூதன ரகங்கள், சேலைகள் பாவாடைகள், ரவிக்கைகள் இன்னும் அநேக ஜெக்கட் சில்க் வகையராக்கள்

சரசமான விலையில் சகலரும் வாங்கி உடுத்தக்கூடிய நூல் சேலைகள், பாவாடைகள்
வேஷ்டிகள், துப்பட்டாக்கள், தற்சமயம் ஏராளமாய் கைவசம் குவிந்துள்ளன!

நேரில் வந்து பாருங்கள்!

மதுரை ஆபீஸ் :		மதராஸ் ஆபீஸ் :
230, கீழ்மாரட் வீதி,	**SRB**	83, நயினியப்ப நாய்க்கன் தெரு,
மதுரை.		மதராஸ்.
போன் : 36 Tel : "YESARBIKAY"		Tel : "RENOWN" போன் : 3506

S. R. B. குப்புசாமி அய்யர் & சன்

(FORMERLY S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்)

பிரபல மதுரை, பனாரஸ் ஜவுளி வியாபாரிகள்.

கல்கி



ALKI ஆகஸ்ட் 27, 1944 4 அணா

மேன்மையின் சின்னம்

நீடித்த உழைப்பு
அநேகநூதன ரகங்கள்

புடவைகள், வேஷ்டிகள், ஷர்ட்டிங், வாயில, பாப்ளின், லாங்கிளாத், முதலியன.

அருணா

மில்ஸ்; லிமிடெட்

பார்ப்போர் மனதிற்குப்
பரவசமளிக்கும் படம்!

கிருஷ்ணா பிக்சர்ஸ்

பிரபாவதி

டைரக்ஷன் :- T.R.ரகுநாத்

4-வது வாரம்

மதுரை	...	சிந்தாமணி
கோவை	...	ராஜா & டயமண்டு
திருநெல்வேலி	...	பாபுலர்
பாண்டிச்சேரி	...	ரத்னா

2-வது வாரம்

வேலூர்	...	தாஜ் டாக்கீஸ்
பெங்களூர்	...	ஸிடி டாக்கீஸ்

25-8-44 முதல்

கள்ளிக்கோட்டை	...	ராதா பிக்சர் பாலஸ்

26-8-44 முதல்

திருவனந்தபுரம்	...	நியூ தியேட்டர்ஸ்
கூனூர்	...	கணேஷ் டாக்கீஸ்

ஆரம்பமாகிறது

MTF ரிலீஸ்

டிஸ்ட்ரிப்யூடர்ஸ் :- முருகன் டாக்கி பிலிம் கம்பெனி
மதுரை — பெங்களூர் — பெஜவாடா

G. RAO

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.